MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.
6962

சிவமயம்.

திருக்கயிலாயபரம்பரைத்
தருமபுரவாதீனத்தைச்சார்ந்த
காசிமடாலயம்

குமரகுருபரசுவாமிகள்

அருளிச்செய்த

# நீதிநெறிவிளக்கம்

மூலமும் உரையும்.

289 THUMBOO CHETTY ST. MADRAS
1432

இஃது
சென்னை:
வ. புஷ்பரதசெட்டி அண்டு
கம்பெனியாரால்
கலாரத்நாகரம்என்னும்
அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1902.

10—1000.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
THIRUVANMIYUR, MADRAS-41.

கடவுள் துணை.

# குமரகுருபரசுவாமிகள்

## சரித்திரச்சுருக்கம்.

குமரகுருபரசுவாமிகள் இருநூறு வருஷங்களுக்குமுன் திருநெல்வேலியைச்சார்ந்த ஸ்ரீவைகுந்தமென்னும் பதியில் சைவ வேளாளகுலத்திற் பிறந்தவர். இவர் சிறுகுழந்தையில் ஊமையாயிருந்து ஐந்தாம் வயதில் திருச்செந்தூர் முருகக்கடவுளின் அநுக்கிரகத்தால் திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா வென்னும் பிரபந்தஞ்செய்தருளினர். பின்பு கல்வி கேள்விகளில் மிகத் தேர்ச்சியடைந்து உபயகவிச் சிரேட்டராகிக் கலியாணஞ் செய்துகொள்வதை மறுத்துத் துறவறத்தில் விருப்புற்றுத் திருச்செந்தூர் முருகக்கடவுளைத் தரிசனஞ்செய்துகொண்டு அந்த ஸ்தலத்தில் வசித்திருக்குங் காலத்தி லொருநாள் தமக்கு ஞானாசாரியர் கிடைக்கத் திருவருள்புரியவேண்டுமென்று முருகக் கடவுளைப் பிரார்த்திக்க அக்கடவுள் "நீ யிவ்விடம் விட்டு வடதிசைக்குச்செல்லு அப்படிச் செல்லுகையில் யாவரிடத்தில் உன் வாக்குத் தடைபடுகிறதோ அவரை ஞானாசாரியராக ஒப்புக்கொள்" என்று அநுக்கிரகித்தனர்.

முருகக்கடவுள் அநுக்கிரகித்தபடியே குமரகுருபரசுவாமிகள் திருச்செந்தூரைவிட்டு உத்தரதிசை

நோக்கிச்சென்று திருப்பரங்குன்றத்திற் றங்கியிருக்கையில் இவர் திருச்செந்தூரி லிருக்கும்போதே மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தமியற்றி அரங்கேற்றுதல் செய்யாமல் வைத்திருந்தனர். அதைச் சந்நிதானத்தில் அரங்கேற்றுவிக்கும்படி அக்காலத்தில் மதுரையில் அரசாட்சிசெய்துகொண்டிருந்த திருமலைநாயகர் சொப்பனத்தில் மீனாக்ஷியம்மை தோன்றித் திருவாய்மலர்ந்தருள, நாயகர் விழித்தெழுந்து ஆனந்தித்துத் தனது பரிவாரங்களுடன் திருப்பரங்குன்றத்திற்குச் சென்று குமரகுருபரசுவாமிகளைக்கண்டு வணங்கி அவரையும் அவர் இயற்றிய பிள்ளைத்தமிழையும் ஆனையின்மேல்வைத்துப் பட்டணப்பிரவேசஞ்செய்வித்து மீனாக்ஷியம்மை சந்நிதானத்தில் அப்பிள்ளைத்தமிழை யரங்கேற்றுவித்துக் குமரகுருபரசுவாமிகளுக்குச் சுவர்ணபிஷேகஞ்செய்து விசேட பரிசுகளுந் தந்தனர்.

இப் பரிசுகளைப் பெற்றுக்கொண்டு இன்னும் பற்பல இடங்களிலுள்ள அரசர்களையும் மடாதிபதிகளையுங்கண்டு தமது கல்வித்திறத்தைக்காட்டி அவ்வவர்களால் அனேக விருதுகளும்பெற்றுத் தருமபுரமடாலயத்திற்குவந்து அப்போது அம்மடாலயத்திற்கு அதிபதியாயிருந்த தம்பிரானிடத்திற்சென்று தன் வழக்கப்படி திண்டு திவாசு போட்டுக்கொண் டெழுந்தருளிருந்து வார்த்தையாடும்போது, தம்பிரான் பெரியபுராணத்தில் ஒரு திருப்பாடலை யெடுத்துச் சொல்லிப் பொருள்வினவ, அதற்குப் பொருள்சொல்லக் கூடாமல் தமதுவாக்குத் தடைபட்டது. தடைபட்

... V. SWAMINATHAIYAR LIBRARY, TIRUVANMIYUR, MADRAS-41 6764



டமாத்திரத்தில் குமரகுருபரசுவாமிகள் நமது முருகக்கடவுள் அநுக்கிரகப்படி வாய்த்ததென்று எண்ணிப் புளகாங்கிதமுடையவராய்க் களிகூர்ந்து திண்டுதிவாசுகளை யெடுத்தெறிந்துவிட்டுத் தம்பிரானைப் பணிந்து தமக்கு ஞானசாரிய ராகவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய அதற்குத் தம்பிரானும் ஒப்புக்கொள்ள, அவரிடத்தில் ஞானோபதேசம்பெற்றுத் தாமும் தம்பிரான்கோலம்பூண்டு அவ்விடத்திற் சிலநாளிருந்தனர். பின்பு ஒரு நாள் தமக்குப் பரிசாக முன்கிடைத்த திரவியங்களையெல்லாம் தமது ஞானசாரியர்முன்வைக்க அவர் "இத்திரவியங்களைக்கொண்டுபோய்க் காசியிற் றருமஞ்செய்க" என, அக்கட்டளையை மேற்கொண்டு டில்லிக்குச் சென்று பாதுஷாவைக்கண்டு காசியில் தமக்குவேண்டிய நிலத்தை வளைத்துக்கொள்ள அவரிடத்தில் உத்தரவுபெற்றுக்கொண்டு காசிக்குச்சென்று அவ்விடத்தில் விசாலமானநிலம் கோலி அதில் ஒருபெரிய மடாலயங்கட்டி அன்னதானஞ் செய்துகொண்டு அம்மடத்தில் வசித்திருந்து அதிபாலியதசையிலே சிவபெருமான் றிருவடியடைந்தனர்.

குமரகுருபரசுவாமிகள் பதினொன்குநூல் செய்தருளினர். அவற்றின் ஒன்றாகிய (க0௨) வெண்பாக்களால் செய்யப்பட்ட நீதிநெறிவிளக்கம் என்னும் இந்நூல், சொன்னயமும் பொருட்பொலிவும் பொருந்தியவற்றுடன் நீதிநூலாயுமிருப்பதால் ஆங்கிலேய பாஷையிலும் மொழிபெயர்க்கப்பட்டு வழங்குகின்றது.

உ

கடவுள் துணை.

# நீதிநெறிவிளக்கப் பதவுரை.

நீதிநெறிவிளக்கம் என்பதற்கு நீதிகளின் வழியை விளக்குகின்றது என்பது பொருள். இது நூலுக்குக் காரணப்பெயர். நீதி என்னும் வடமொழி ஈண்டு பெரியோர்கள் அங்கீகரித்த நியாயங்களைத் தெரிவிக்கின்றது. அவற்றின் வழியாவது, அவற்றைக் கொண்டு நடப்பது. அதனை இந்நூல் விளக்குகின்றதென்றால் இவ்வகையில் நடப்பது நியாயத்திற்கு ஒத்ததெனத் தெரிவிக்கிறதென்பது திரண்ட பொருள்.

நீதிநெறி—ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்; நெறிவிளக்கம்—இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்; விளக்கு - பிறவினைப்பகுதி, அம் - கர்த்தாப்பொருளில் வந்த விகுதி; நீதிகளாகிய நெறிகளை விளக்குகின்றதென உரைக்கினும் பொருந்தும். விளக்கம் = தீபம், எனக்கொண்டு உவமையாகுபெயராக் கொள்ளவுமாம்.

**நீரிற் குமிழி யிளமை நிறைசெல்வம்**
**நீரிற் சுருட்டு நெடுந்திரைகள் - நீரில்**
**எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே**
**வழுத்தாத தெம்பிரான் மன்று.**

1. Youth is as transient as a bubble on water; abundant riches as the rolling waves of the sea; and the body as letters traced on water. Why then, O my friends! do we not worship the Court of our God?

(இ-ள்.) இளமை - இளமைப்பருவமானது, நீரில் குமிழி - நீரினிடத்துண்டாகும் குமிழிபோன்றது; நிறை செல்வம் - நிறைந்த செல்வமானவை, நீரில்—, சுருட்டும்-(காற்றினாற்) சுருட்டப்படும், நெடுந்திரைகள்-நெடிய அலைகளை (ஒத்தன); யாக்

கை - உடம்பானது, நீரில் எழுத்தாகும் - நீரிலெழுதிய எழுத்துப்போலாம்; (ஆதலால்) நமரங்காள் - நம்மவரே! எம்பிரான் - நம்முடைய சுவாமியினது, மன்று - சபையை, வழுத்தாதது - துதியாம லிருப்பது, என் - என்ன! [எந்தக்காரணத்தினாலான து என்றபடி.] ஏ - அசை.

இளமை செல்வம் யாக்கை இவை நிலையில்லாதன ஆதலால் இவற்றை நம்பிக் காலங் கழிக்காமல் கடவுளைத் துதிக்கவேண்டும் என்பது கருத்து.

குமிழி—குமிழ் - பகுதி, இ - கர்த்தாப்பொருள் விகுதி, முகிழ் என்னும் வடசொற்றிரிபு குமிழ் என மாறி நின்றதெனக் கொள்க. முகுளம் வடமொழி. நிறை—வினைத்தொகை. சுருட்டும்—சுருள் என்னும் தன்வினைமேல் டு விகுதி வந்துநின்ற சுருட்டு என்கிற பிறவினையின் பெயரெச்சம்; இது காலங்காட்டாமல் தன்மையைக் காட்டும்; மற்றவைகளு மிப்படியே. சுருட்டப்படும் என்கிற செயப்பாட்டு வினைப்பெயரெச்சத்தின் திரிபெனவுங் கொள்ளலாம். "செயப்படுபொருளைச் செய்ததுபோல" என்கிற விதியிலு மடக்கலாம். திரை—செயப்படுபொருள் விகுதியாவது கர்த்தாப்பொருள் விகுதியாவது புணர்ந்து கெட்ட பெயர். எழுத்து—எழுதப்படுவது, செயப்படுபொருள் விகுதி குன்றித் தகரம் இரட்டி வந்தபெயர். யாக்கை—தோல் நரம்பு முதலியவற்றால் கட்டப்பட்டது; யா - பகுதி, ஐ - செயப்படுபொருள் விகுதி, கு - சாரியை, க் - சந்தி. நமரங்காள்—நாம் என்னும் இனைப்பெயரடியாகப் பிறந்தது; [நன் - பெயரி - கூ - சகூ.] நாம் - குறிகியது, [உருபு-கூ-அ], அர்-விகுதி, கள் - விகுதிமேல் விகுதி, அம் - சாரியை, ஈற்றயல் நீட்சி - விளியுருபு [பெய - கூ - நிக.] என்—எவன் என்னுங் குறிப்புமுற்றின் இடைக்குறை. ஏ - அசை; இரக்கக்குறிப்புமாம். வழுத்தாதது—எதிர்மறைத் தொழிற்பெயர்; வழுத்து - பகுதி, ஆ-எதிர்மறை விகுதி, த் - எழுத்துப்பேறு, அ - சாரியை, து-விகுதி. து-சாரியையுமாம். குமிழி செல்வம் எழுத்து என்பவை உவமையாகு பெயர்; ஆதலின் உருவகவணி. "நமரங்காள்" என அன்போ

டழைத்து இதத்தைக் கூறியதனால் பாட்டு முழுவதுஞ்சேர்ந்து ஆர்வமொழி என்னும் அலங்காரமாம். செல்வம் பால்பகா வஃறிணைப்பெயர்; செல்வம் பல ஆதலால் ஈண்டு பன்மை. (௧)

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டும் - உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.

2. It will teach virtue, and bestow wealth, pleasure, and heavenly bliss; it will establish a good name abroad; and it will, when it calamity befalls you, lend a helping hand. Hence there is no support to short-lived mortals better than learning.

(இ-ள்.) அறம்பொருள் இன்பமும் - தருமத்தையும் பொருளையும் இன்பத்தையும், வீடும் - மோட்சத்தையும், பயக்கும் - உண்டாக்கும்; புறங்கடை - தலைவாயிலிடத்து, நல்லிசையும் - நல்ல புகழையும், நாட்டும் - நிலைநிறுத்தும்; உறுங்கவலொன்று — மிகுதியாகிய ஓர்கவலை, உற்றுழியும் - நேரிட்டவிடத்தும், கைகொடுக்கும் - உதவிசெய்யும் (ஆதலால்) சிற்றுயிர்க்கு - சில வாழ்நாளையுடைய உயிர்களுக்கு, உற்றதுணை - பொருந்திய துணை, கல்வியின் ஊங்கு - கல்வியின்மிக்கது, இல்லை—.

வீடு—முதனிலைத்தொழிற்பெயர், முதல்நீண்டது, சம்சாரத்தினின்றும் விடுபடுமிடத்திற்கு ஆகுபெயர், விடுபடுதல் எனவுங் கொள்ளலாம். மோக்ஷம் என்கிற வடசொல்லு மிப்படியே. அறம்பொருளின்பம் - உம்மைத்தொகை. உம் வீடு என்பதோடு எண்ணும்மை; எச்சவும்மை செவ்வெண்ணினீற்றில்வந்த தெனவுமாம். [இடை-௫-௮.] அறமுதலிய மூன்றினுஞ் சிறந்தது பற்றி வீட்டைத் தனித்துக்கூறினார். திரிவர்க்கம், அபவர்க்கம் என வடநூலார் கூறுவர். வீடும்—சிறப்பும்மையுமாம். இசையும் என்பதி லும்மை அறமுதலியவற்றைப் பயப்பதன்றி நாட்டுதலுஞ் செய்யுமெனத் தொழிலைத் தழுவிய எச்சவும்மை. கடைப்புறம் என்பது புறங்கடை என்று மாறிவந்தது இலக்கணப்போலி. பயக்கும்—பய - பகுதி, கு-சாரியை, க்-சந்தி

உம் - விகுதி. உற்றுழியும்—இதி லும்மை சிறப்பு. கல்வி கற்றார்க்குக் கவல் நேரிடுதல் அருமை யென்பது கருத்து. கவல்-முதனிலைத் தொழிற்பெயர், கருவிப்பொருளில் வந்த ஐ விகுதி புணர்ந்துகெட்ட தென்னவுமாம். கல்வியின்—ஐந்தனுருபு. எல்லைப்பொருளில் வந்தது. ஊங்கு—உரிச்சொல். உற்ற உழி—பெயரெச்சத் தொடர், நிலைமொழியீறு தொகுத்தல். சிறு - சிற்று, தன்னொற்றிரட்டல். (௨)

தொடங்குங்காற் றுன்பமா யின்பம் பயக்கும்
மடங்கொன் றறிவகற்றுங் கல்வி - நெடுங்காமம்
முற்பயக்குஞ் சின்னீர வின்பத்தின் முற்றிழாய்
பிற்பயக்கும் பீழை பெரிது.

3. Learning though painful at first will afterwards afford pleasure; it will destroy ignorance and extend knowledge. But, O thou adorned with perfect jewels! the pain which succeeds the short-lived pleasure of immoderate lust is great.

(இ - ள்.) முற்றிழாய் - தொழில் முற்றிய ஆபரணத்தையுடைய பெண்ணே! கல்வி - கல்வியானது, தொடங்குங்கால் - ஆரம்பிக்குங் காலத்தில், துன்பமாய்-துக்கந் தருவதாய், (பின்பு) இன்பம் - சுகத்தை, பயக்கும் - உண்டாக்கும்; (அன்றியும்) மடம் - அறியாமையை, கொன்று - கெடுத்து, அறிவு - அறிவை, அகற்றும் - விசாலமாக்கும்; நெடுங் காமம் - மிகுந்த காமமானது, முன் - முன்பு, சின்னீர-அற்பத் தன்மையை யுடைய, இன்பத்தின் - இன்பத்தை, பயக்கும்—; பின்-பின்பு, பெரிது-மிகுந்த, பீழை - துன்பத்தை, பயக்கும்—.

இன்பத்தின் என்பதில் இரண்டனுருபு தொக, இன் சாரியை நின்றது. இதனை ஐந்தனுருபாகக்கொண்டு சொற்போகும் போக்கிற் பொருள் உரைக்கின், எடுப்பழிவு என்பதோடு கருதிய துள்ளிடல் என்ற குற்றமு முண்டாம். அகற்றும் — இதில் று பிறவினைவிகுதி; அகல் -தன்வினைப்பகுதி. கல்வி—தொழிற்பெயர், கற்கப்படுவதற்கு ஆயிற்று. முற்றிழாய்—வினைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. விளியில் ஈற்று ஐ

ஆய் எனத் திரிந்தது. பீழை—பீடா என்னும் வடசொற்றிரிபு. பின்முன் என்பன இடைச்சொல், பெயரென்பாருமுளர். பெயர்ப்பொருளை யுணர்த்தி ஓர் வேற்றுமைப் பொருளைப்பற்றி வருமவற்றை இடைச்சொல்லில் சேர்ப்பது வடநூற்றுணிபு. மற்றைத் தீக்குணங்களினும் மிக்கதுன்பஞ் செய்வதுபற்றி நெடுங்காமம் என்றார். அதுபற்றியே உட்பகை ஆறனுள் முதலில் எண்ணப்பட்டது. கால் - காலம், ஏழாம்வேற்றுமைத் தொகை. துன்பம் - அதைத்தருவதற்கு ஆகுபெயர். சின்னீர—குறிப்புப்பெயரெச்சம்; சின்னீர் - பகுதி, அ - விகுதி; சிறு என்பது "இனையவும் பண்பிற்கியல்பே" என்றதனால் உகரங்கெட்டு றகரம் னகரமாய் நீர் என்கிறதோடு புணர்ந்து சின்னீர் என்றாயிற்று; நீர்—குணம். (௩)

கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச் - சொல்வளம்
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்தும்
செல்வமு முண்டு சிலர்க்கு.

4. With learning as the chaste wife, sweet poetry as the darling son of that matron, and eloquence as an incresing wealth, some there are who also possess the talent of adorning an assembly.

(இ-ள்.) கல்வியே-வித்தையே, கற்புடைப்பெண்டிர் ஆ-பதிவிரதா குணமுடைய மனைவியாகவும், அப்பெண்டிர்க்கு - அம்மனைவிக்கு, ஈர்ங்கவியே - இனிமையாகிய செய்யுளே, செல்வப்புதல்வன் ஆ - செல்வமுள்ள புத்திரனாகவும், சொல்வளம்-(பொருளை விளக்கும்படியான நல்ல) சொற்களைப் பிரயோகிக்குந் திறமானது, மல்லல் - பெருமையான, வெறுக்கை ஆ - பொருளாகவும் (இருப்பதுமன்றி), சிலர்க்கு - சிலருக்கு, மாணவை - பெருமையுள்ள சபையில், மண்ணுறுத்தும் - அலங்காரப்படுத்தத்தக்க, செல்வமும் - (பிரசங்கித்தலாகிய) செல்வமும், உண்டு - உண்டாயிருக்கின்றது.

கல்வியே என்பதில் ஏகாரம் பிறபெண்டிரினும் இது விசேஷமென்று சிறப்புப்பொருளில் வந்தது. பெண்டிர்—இதில் இர்

வழக்கு. ஈத்து—மெலித்தல்பெறுதது. நல்கூர்தல் - பிறர் நல் குதலைக்கொண்டு செல்லுகிறது என்னும் காரணத்தால் வறு மைக்கு வந்தது. நல்குதல் - கொடுத்தல். நன்று — குறிப்பு முற்று, பெயரெனவுமாம். இப்படிப்பட்ட கல்வியும் சொல் லும் செல்வமும் நலமும் இருப்பதில் பயனில்லாமையோடு தமக்கும் பிறர்க்கும் துன்பமுமுண்டாவதனால் பூவாமை நன்று என்றார். இது ஒப்புமைக்கூட்டவணி. மெய்விதிர்ப்பார் — [பொது-கூ-உசு] விதியால் வந்த இணைவழுவமைதி. பூவாமை —எதிர்மறைத்தொழிற்பெயர் ; பூ - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, மை - தொழிற்பெயர் விகுதி. (சு)

கலைமகள் வாழ்க்கை முகத்த தெனினும்
மலரவன் வண்டமிழோர்க் கொவ்வான்-மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யு முடம்பு.

7. Though Saraswati dwells in the face of Brahma, he cannot vie with the illustrious Tamil bards, for the bodies of fame which these create perish not like those of Brahma's creation.

(இ - ள்.) கலைமகள் - சரசுவதியின், வாழ்க்கை - வாழ்தல், முகத்தது எனினும் - தன்முகத்தினிடத் துள்ளதாயிருந்தாலும், மலரவன் - பிரம ஞனவன், வண்டமிழோர்க்கு - வளப்பமாகிய தமிழ்ப் புலவர்க்கு, ஒவ்வான் - ஒப்பாகான் ; (ஏனெனில்) இவர் - இத்தமிழ்ப் புலவர், புகழ்கொண்டு - புகழால், செய் யும் - உண்டாக்குகின்ற, உடம்பு . உடம்புகள், மலரவன் - பிர மன், செய் - படைக்கும், வெற் றுடம்பு - பயன்படா வுடம்பு கள், மாய்வனபோல் - இறப்பனபோல், மாயா - இறக்கமாட் டா. மற்று - அசை.

கலைமகள்—கலைகளுக்கு அதிபதியாகிய மகள் [பெண்]. முக த்தது—குறிப்புமுற்று ; முகம் - பகுதி, அத்து, அ - சாரியை கள், து - விகுதி ; எனின் என்பது சேர வினையெச்சமாயிற்று. மலரவன்—தாமரைமலரில் வீற்றிருப்பவன் ; மலர்-பகுதி, அ - சாரியை, அன்-விகுதி. இவ்விரண்டு சொற்களும் தமிழில் தத்தி

தாந்த மொழிகளாம். வெற்றுடம்பு—வெறு+உடம்பு; சிற்றுயிர் என்பதுபோல் கொள்க. மாய்வன—பலவின்பால் வினைமுற்று; மாய் - பகுதி, வ் - எதிர்காலவிடைநிலை, அன் - சாரியை, அ - விகுதி; இது தன்மையைக் காட்டுமே யன்றி எதிர்காலங் காட்டாது. மாய்வன - மாயுந்தன்மையன, அதுபோல் என உரைத்துக்கொள்ள வேண்டும். மாயா—ஆ-பலவின்பால் எதிர்மறைவிகுதி. [வினை-சூ-௧0.] புகழ்கொண்டு—கொண்டு-மூன்றும் வேற்றுமைச் செல்லுருபு. ஒவ்வான்—வினைமுற்று; ஒ - பகுதி, ஆ - எதிர்மறைவிகுதி, வ் - உடம்படுமெய்; அது தனிக்குறின் முன்னொற்றுயவின் இரட்டியது, ஆன் - ஆண்பால் விகுதி, இதன் ஆகாரம் கெட்டது; ன் - விகுதியெனவுங்கொள்ளலாம். செய்—நிகழ்கால வினைத்தொகை, "முக்காலத்தினுமொத்தியல்பொருளைச் செப்புவர் நிகழுங் காலத்தானே" என்பது விதி. இதில் முன் வாக்கியத்தைப் பின் வாக்கியத்தால் சமத்காரமாய்ச் சாதித்தமையால் ஏதுவணி. வேற்றுமையணியும் கலப்பு. (எ)

நெடும்பகற் கற்ற வவையத் துதவா
துடைந்துளா ருட்குவருங் கல்வி - கடும்பகல்
ஏதிலான் பாற்கண்ட வில்லினும் பொல்லாதே
தீதென்று நீப்பரி தால்.

8. The shrinking learning of men broken by long study, which is not available in public, is worse than a wife seen in broad daylight in a neighbour's company, for it is an evil that cannot be put away.

(இ - ள்.) நெடும்பகல்-பலநாள், கற்ற-கற்ற நூல்கள், அவையத்து - சபையினிடத்து, உதவாது - உதவாமல், உடைந்துளார்-தோற்றிருக்கிறவரது, உட்குவரும்-நாணத்தக்க, கல்வி-கல்வியானது, கடும் பகல் - நடுப் பகலில், ஏதிலான்பால் - அயலானிடத்து, கண்ட - இருக்கக் கண்ட, இல்லினும் - தன் மனையாளினும், பொல்லாதே - கொடியதே, (ஏனெனில்) தீதென்று - இது கெட்டதென்று, (அம்மனையாளை நீக்குவதுபோல) நீப்பு - (அக்கல்வியை) நீக்குவது, அரிது - கூடாது. ஆல் - அசை.

தாகாமையை உணர்த்திச் செயப்படுபொருள் குன்றுதலுமாம், எழுவாயா வைத்து "உயர்திணைதொடர்ந்த" என்கிற சூத்திர வுரைப்படி முடிக்கவுமாம். மனை - இல்லறம்; அதற்குத் தக்க வள் மனைத்தக்காள்; மனைத்தகு ஓர்பகுதியாக்கொள்ளினும் அமையும். மனைஞ்செய்த மகன்=மணமகன். பூண்ட - வினை யாலணையும்பெயர். ஏனும் — இதில் உம்மை உயர்வு சிறப்பு; பின்னும்மை - இழிவு சிறப்பு. போல்—போல என்னும் செய வெனெச்சம் ஈறுகுறைந்தது. (க0)

இன்சொல்லன் றாழ்நடைய னாயினுமொன் றில்லானேல், வன்சொல்லி னல்லது வாய்திறவா - என் சொலினும், கைத்துடையான் காற்கீ ழொதுங்குங் கடன்ஞாலம், பித்துடைய வல்ல பிற.

11. Though courteous in speech, and humble in behaviour, the world will not speak to the poor but by harsh words; whereas, then (the world) will crouch beneath the feet of the wealthy, harsh as he may be. Surely this sea-girt earth is full of madness.

(இ - ள்.) இன்சொல்லன் - இனியசொல்லை யுடையவனும், தாழ் நடையன் - பணியு மியல்புடையவனும், ஆயினும் - ஆனு லும், ஒன் றில்லானேல் - பொருள் சிறிது மில்லானாயின், கடல் ஞாலம் - கடலாற் சூழப்பட்ட இவ்வுலகம், வன் சொல்லின் அல்லது - கடுஞ் சொல்லாலே யன்றி [இன்சொல்லினால்] வாய் திறவா - வாயைத் திறக்கமாட்டா [பேசமாட்டா என்கிறபடி]; கைத்து உடையான் - பொருளுடையவன், என் சொலினும் - எப்படிப்பட்ட கடுஞ்சொல்லைச் சொன்னாலும், காற்கீழ் - அவன் காலின் கீழே, ஒதுங்கும் - சேரும்; (ஆதலால்) பித்து - பைத் தியத்தை, உடைய - உடையவைகளே (யல்லாமல்,) பிற அல்ல- வேறல்ல [நற்குணமுள்ளவையல்ல என்கிறபடி.]

வன்சொல்லின் - ஐந்தனுருபு ஏதுப்பொருளில் வந்தது. கைத்து - கையில் இருக்கத்தக்கது. 'கடல் ஞாலம் என்றது பூமி யெல்லாம் என்பதற்காக, இடவாகுபெயர். அதிலுள்ளோரைக் குறிக்கும். 'திறவா, பித்துடைய,' என்கிற குறிப்பால் ஞாலம்

பெரிது-இங்கு வினையுரியாக் கொள்ளப்படும். நோலாதார்—நோல் - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, அனைத்து மோர்பகுதித் - எழுத்துப்பேறு, ஆர் - பலர்பால் விகுதி. கற்பு—தொழிற் பெயர், அதனுலாகிய விவேகத்துக்கு ஆயிற்று. கல்லாமையு மப்படியே. கற்பன்றே—ஏ - எதிர்மறை வினவாய் அன்றுக்கு எதிர்மறையான வுடன்பாட்டை யுணர்த்தியது. 'பிரசித்தப் பொருள்' என்பது நேர். இதுவும் ஏதுவணி. கவிதுர்க்குணத்தைச் சுகுணமாகச் சாதுரியத்தாற் பேசியது ஆகலின், வஞ்சப்புகழ்ச்சி யணியுமாம். (கஉ)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லான்
மற்றோ ரணிகலம் வேண்டாவாம் - முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார்.

13. The learned need no other ornament than their learning; nothing is wanted to adorn an ornament set with perfect jems; who is there that will add beauty to what is already beautiful?

(இ-ள்.) கற்றோர்க்கு - கற்றுணர்ந்தவர்க்கு, கல்வி நலனே - கல்வி யறிவே, கல னல்லால் - ஆபரண மன்றி, மற்றோ ரணிகலம் - வேறோ ராபரணம், வேண்டா ஆம் - வேண்டுவ தில்லையாம்; முழுமணி - பருத்தமணிக ளழுத்திய, பூணுக்கு - ஆபரணங்களுக்கு, பூண் - வேறுபரணங்கள், முற்ற-ஒருக்காலும், வேண்டா - வேண்டப்படா; யாரே - யாவர்தாம், அழகுக்கு - அழகினுக்கு, அழகுசெய்வார் - அழகைச் செய்பவர்கள்.

கல்வி நலன் — மூன்றும் வேற்றுமையுருபும்பயனு முடன்றொக்கதொடர். நலன் - கலன்--[எழுத்-கு-சூஎ] ஞல் மகரத்துக்கு னகரம் போலியாகவந்தது. அணிகலம்—வினைத்தொகைநிலைத்தொடர். வேண்டா—ஈறுதொக்க வினைமுற்று, ஆம்—அசை. அல்லது வேண்டா—வினையாலணையும்பெயராய் அணிகலம் என்பதற்கு விதேய விசேடணமான தென்னலாம். அப்போது ஆம்—வினைமுற்று. முற்ற—செயவெனெச்சம், காலம் முற்ற என நின்றது. ஏ—வாக்கிய அழகின்பொருட்டு வந்த

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41


அசைநிலை. கல்வி நலனே கலன் என்பதற்கு, முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா என, உவமானங் காட்டினதால் எடுத்துக்காட் டுவமையணி.—யாரே அழகுக் கழகுசெய்வார் என அதை நிலைநிறுத்ததனால் வேற்றுப்பொருள் வைப்பணி. (கங)

முற்று முணர்ந்தவ ரில்லை முழுவதூஉங்
கற்றன மென்று களியற்க - சிற்றுளியால்
கல்லுந் தகருந் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால்.

14. There is none who knows every thing: exult not therefore in the idea that your learning is universal; the rock will give way to the small chisel of the mason; but it will not, O thou adorned with massive carrings! yield to the blacksmith's hammer.

(இ-ள்.) கனங்குழாய் - கனத்த காதணியையுடைய மாதே! முற்றும் - எல்லாம், உணர்ந்தவர் - அறிந்தவர்கள், இல்லை—; (ஆதலால்,) முழுவதூஉம் - எல்லாம், கற்றன மென்று - யாம் படித் துணர்ந்தோ மென்று, களியற்க - கர்வமடையவேண்டாம்; (ஏனெனில்,) சிற்றுளியால் - சிறு உளியால், கல்லும் - மலைகளும், தகரும் - உடையும், கொல் உலை - கொல்லனுடைய உலைமுகத்திற் செய்த, கூடத்தினால் - சம்மட்டியால், தகரா - (அம்மலைகள்) உடையமாட்டா.

முற்று—முதனிலை வினையாலணைந்தபெயர்; கர்த்தாப் பொருள்விகுதி புணர்ந்து கெட்டதென்னவுமாம். உம்—முற்றும்மை. முழுவது—முழுமை என்கிற பண்படியாக வந்த பெயர். முழு-பகுதி, அ - சாரியை, து - விகுதி. அளபெடை இன்னோசைக்காக வந்தது. கற்றனம்—தனியே வந்த தன்மைப்பன்மை முற்று; கல் - பகுதி, ற் - இடைநிலை, அன் - சாரியை, அம் - விகுதி. களியற்க—எதிர்மறை வியங்கோள்; களி - பகுதி, அல்-எதிர்மறை விகுதி, க - வியங்கோள் விகுதி. கனங்குழாய்—கனக்குழாய் என்பது மெலிந்தது. கொல்—ஆயுதத்தின் பெயர், அதை யுடையானுக்கு ஆகுபெயர். இதுவும் எடுத்துக்காட் டுவமை யணி. (கச)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க - தம்மினுங்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லா
மெற்றே யிவர்க்குநா மென்று.

15. Observing persons poorer than yourself, rejoice that your lot is compartively happy; but observing persons who are better educated than yourself regret with the reflection, what is your learning in comparison with theirs.

(இ-ள்.) தம்மின் - தம்மைக்காட்டிலும், மெலியாரை - எளியவர்களை, நோக்கி - பார்த்து, தமது உடைமை - தம்முடைய பொருள், அம்மா பெரிது என்று - ஆச்சரியமாக மிக்கதென்று, அகம் மகிழ்க - மனம் சந்தோஷப்படுக; தம்மினும் - தம்மைக் காட்டிலும், கற்றாரை - படித்தவர்களை, நோக்கி - பார்த்து, நாம் கற்றதெல்லாம் - நாம் கற்றவைமுழுதும், இவர்க்கு - இவர்க்குமுன், எற்றே என்று - எத்தன்மையதாமென்று (கருதி,) கருத்து அழிக - மனம் வருந்துக.

தன் பொருளை மேலாநினைப்பது வீணாசையால் மனம் வருந்தாமைக்குக் காரணமாகையாலும், கல்வியைத் தாழ்மையா நினைப்பது அது வளர்வதற்கு ஏது வாகையாலும், அகமகிழ்க கருத்தழிக என்றார்.

தம்மின்—எல்லைப்பொருளில்வந்த ஐந்தாம்வேற்றுமை. மெலியார்—மெல் - (பண்படி) பகுதி, இ - சாரியை, யகரம் - உடம்படுமெய், ஆர் - விகுதி. உடைமை—பொருளுக்கு ஆகுபெயர். அம்மா — வியப்பிடைச்சொல். அகம் மகிழ்க — [பொது-சூ-உஅ.] னால் வந்த வழூவமைதி; கருத்து அழிக என்பது மிது வே. கற்ற தெல்லாம்—[பொது-சூ-உக.] விதியால் வந்த வழூவமைதி. எற்று—குறிப்புமுற்று, என் - பகுதி, இடைச்சொல், று - விகுதி, ஏ - இரக்கத்தைக் குறிக்கு மிடைச்சொல். இவர்க்கு—கு-எல்லைப்பொருளில் வந்ததென்னலாம். என்று இரண்டும் இடைச்சொல்; வினையில் வந்தவை, [இடை-சூ-ரு.] என் என்கிற இடையடியாகப் பிறந்த வினையெச்சமுமாம்; இப்படி நினைத்து என்பது பொருள். (கரு)

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும் - இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்.

16. Learning and riches will be termed true wealth, should their possessors be humble like the destitute who stand before them with their suits for redress.

(இ-ள்.) கல்வி யுடைமை - கல்வி யுடையராயிருத்தல், பொருளுடைமை - பொருளுடையராயிருத்தல், என் றிரண்டு செல்வமும் - என்னு மிரண்டு சம்பத்தும், செல்வ மெனப்படும் - சம்பத்தென்று உணர்ந்தோரால் சொல்லப்படும்; (எப்போதெனின்,) இல்லார்—(இருவகைச்)செல்வமு மில்லாதார், குறையிரந்து - தமது குறையைச்சொல்லி யாசித்து, தம் முன்னர் - தம் மெதிரில், நிற்ப போல் - நிற்பார் போல, தாமும் - இருவகைச் செல்வ முடையாரும், தலைவணங்கி - தலை வணங்கநின்று, தாழப்பெறின் - தாழ்வாராயின்.

வணக்க மிருந்தா லல்லது கல்வியும், செல்வமும் பெருமைப் படா என்பது கருத்து.

உடைமை—பண்புப்பெயர், குறிப்புத் தொழிற் பெயரென்றுஞ் சொல்லுவர். என்று—எண்ணிடைச்சொல், கல்வியுடைமையோடுங் கூடும், [இடை-கு-கo.] தொகைபெற்றது [இடை-கு-கூ.] எனப்படும்—இதில் என என்பது என்றுசொல்ல எனப் பொருள் படுதலால் என வெச்சம், [பொது-கு-கூ.] நிற்ப என்பதை ஈறு குறைந்த தொழிற்பெயராக்கொண்டு நிற்பதுபோல் என உரைத்தல் நேர். இது, (விநோத்தி) அல்லது இன்மை நவிற்சி அணி. (கசு)

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணி னனித்தாழ்ப - தூக்கின்
மெலியது மேன்மே லெழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழுந் துலைக்கு.

17. If men of *real* dignity perceive presumption in the conduct of their inferiors, they will behave with greater humility. In weighing while the lighter rises higher and higher, does not, the heavier sink down the scale?

(இ-ள்.) ஆக்கம் பெரியார் - கல்வி முதலிய செல்வம் பெருத்தவர்கள், சிறியா ரிடைப்பட்ட - சிறியோரிடத் துண்டாகிய, மீச்செலவு - வரம்பிகந்த நடத்தையை, காணின் - கண்டால், நனி - மிக, தாழ்ப - தாழ்வார்கள்; தூக்கின் - தூக்கினால், துலைக்கு - தராசில், மெலியது - இலேசான பொருளுள்ள தட்டு, மேல்மேல்—, எழச் செல்லச் செல்ல - உயர்ந்து செல்லுந்தோறும், வலி தன்றே - கனமான பொருளுள்ள தட்டன்றோ, தாழும் - தாழுகின்றது.

ஆக்கம் பெரியார்—அகமகிழ்க என்பதுபோல் வழுவமைதி; ஆக்கத்தினாற் பெரியார் எனவு முரைக்கலாம். ஆக்கம்—ஆ - பகுதி, கு - சாரியை, அம் - தொழிற்பெயர் விகுதி. விர்த்தியாவதற்குக் காரணமாகிய செல்வத்திற்கு ஆகுபெயர். மீ—மேல் என்கிற பொருளுள்ள இடைச்சொல். செலவு—தொழிற்பெயர்; செல் - அ - உ - பகுதி சாரியை விகுதிகள். மேல்மேல், செல்லச்செல்ல,—மிகுதிப்பொருணிலையில்வந்த அடுக்கு. [பொது-கு-சச.] தாழும்—நிகழ்கால வினைமுற்று. "செய்யுநிகழ்பெதிரும்" என்பது விதி. [பதவியல்-கு-கஅ.] துலைக்கு—வேற்றுமைமயக்கம். (கஎ)

**விலக்கிய வோம்பி விதித்தனவே செய்யு**
**நலத்தகையார் நல்வினையுந் தீதே - புலப்பகையை**
**வென்றன நல்லொழுக்கி னின்றேம் பிறவென்று**
**தம்பாடு தம்மிற் கொளின்.**

18. Even the acts of the worthy, who avoid what is forbidden and perform what is enjoined, would be evil, should they pride themselves upon having triumphed over the hostile senses and stood steadfastly in the paths of virtue.

(இ-ள்.) விலக்கிய - செய்யத்தகாதவை என்று நீக்கிய கருமங்களை, ஓம்பி-(செய்யாமற்) பாதுகாத்து, விதித்தனவே-(செ

ய்யவேண்டுமென்று) நியமித்த கருமங்களையே, செய்யும்-செய்யாநின்ற, நலத்தகையார் - நல்ல தகுதியையுடையவர்களுடைய, நல்வினையும் - நல்ல செய்கையும், புலப்பகையை - விஷயமாகிய பகையை, வென்றனம் - யாம் ஜயித்தோம், நல்லொழுக்கில் - நல்ல ஒழுக்கத்தில், நின்றேமென்று - வழுவாம லிருந்தோமென்று, தம்பாடு - தம்பெருமையை, தம்மில் கொளின் - தமக்குள் தாமே மதித்துக்கொண்டால், நீதே - தீயதேயாம். பிற - அசை.

தாம் பெரியவரென்று தம்மை எண்ணிக்கொண்டால் சிறந்த ஒழுக்கமும் வீண் என்பது கருத்து.

விலக்கிய—பலவின்பால் வினையாலணையும்பெயர் ; விலக்கு - பிறவினைப்பகுதி, இன் - இடைநிலையின் ஈறுதொக்கது, ய்-உடம்படுமெய், அ - விகுதி ; விலங்கு - தன்வினைப்பகுதி. நலத்தகை, புலப்பகை—இரண்டும் பண்புத்தொகை. தகை - பகை—தகு, பகு-பகுதிகள், ஐ-தொழிற்பெயர் விகுதி. யோக்கியதைக்கும் சத்துருவுக்கும் ஆகுபெயர். தீது—தீமை அடியாகப் பிறந்த குறிப்புமுற்று. ஏகாரம்—தேற்றம். ஒழுக்கு—முதனிலை திரிந்த தொழிற்பெயர் ; ஆசரிக்கத்தக்கவைகளுக்கு ஆகுபெயர். இதுவும் இன்மை நவிற்சியணி. (கஅ)

தன்னை வியப்பிப்பான் றற்புகழ்த றீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால் - தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்ப
நயவாமை யன்றே நலம்.

19. To praise oneself, that he may gain the esteem of the world, is like feeding the flame with pure water: estimableness consists in abstainment from self-commendation, and true happiness in not seeking happiness for its own sake.

(இ-ள்.) தன்னை—, வியப்பிப்பான் - பெரியோர் நன்குமதிக்கும்படி முயல்கிறவன், தற்புகழ்தல்-தன்னைத்தானே புகழ்ந்து கொள்ளுதல், நன்னீர் - நல்லநீரை, சொரிந்து - வார்த்து, தீச்சுடர் - தீயின் சுவாலையை, வளர்த்தற்று - வளரச்செய்தது

போலாம் ; (ஆதலால்) தன்னை—, வியவாமை அன்றே - நன்கு மதியாமலிருப்பதன்றோ, வியப்பாவது - மதிப்பென்று சொல்லப்படுவது ; இன்பம் நயவாமை அன்றே - உலகசுகத்தைவிரும்பாமையன்றோ, நலம் - இன்பமாவது.

வியப்பிப்பான்—வினையாலணையும்பெயர், வியப்பி-பிறவினைப் பகுதி, ப் - இடைநிலை, மற்றொன்று - சந்தி, ஆன் - விகுதி, வினையெச்சமாக்கொண்டு உரைக்கினும் பொருந்தும். தற்புகழ்தல்—தன் பொதுப்பெயராயினும் [உருபு-சூ-கக.] விதியால் னகரம் திரிந்தது. இதனாலேயே நீர் சொரிந்து என்பதில் வலிமிக வில்லை. வளர்த்தற்று—இதில் வளர்த்து என்பது வளர்த்தால் என்பதின் திரிபு, வளர்த்தால் அதுபோன்றதெனக் கொள்வர் முன்னோர் ; வளர்த்தது, அற்று என ஈறுகுறைந்ததாக்கொள்வது நலம். வியவாமை, நயவாமை—எதிர்மறைத் தொழிற்பெயர். (௧௯)

பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டு
மறவாமே நோற்பதொன் றுண்டு - பிறர்பிறர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல்.

20. He who desires the esteem of others should without failure adhere to this principle—that he should extol the virtues and conceal the defects of others, and address all with humility.

(இ-ள்.) பிறரால் - மற்றையோரால், பெருஞ்சுட்டு - நன்கு மதிக்கப்படுதலை, வேண்டுவான் - தானடைய விரும்புகிறவன், யாண்டும்-எவ்விடத்திலும், [மறக்கத்தக்க காரண முண்டான விடத்தும்] மறவாமே - மறவாமல், நோற்பது ஒன்று உண்டு - நியமமாக ஆசரிக்கத்தக்க காரியமொன்று உளது; (அஃதென்னவெனில்,) பிறர்பிறர் - மற்றையோருடைய, சீரெல்லாம்-சிறப்பையெல்லாம், தூற்றி - பல ரறியச் சொல்லி, சிறுமை - (அவர்கள்) குற்றத்தை, புறங்காத்து - அடக்கி, யார் யார்க்கும் - எல்லோர்க்கும், தாழ்ச்சிசொலல் - தாழ்மையான வசனங்களைச் சொல்லுதலாம்.

சுட்டு—முதனிலைத்தொழிற்பெயர், பிறரால் என்பது இதற்குக் கர்த்தா. யாண்டு—இது யா என்னும் வினாவடியாகப் பிறந்த பெயரெனச் சொல்லப்படுவதுண்டு. ஒரே வேற்றுமையேற்றலின் இடைச்சொல்லென்பதே தகுதி. ஸம்ஸ்கிருதத்தி லிருப்பதுபோலத் தமிழிலும் இருவகை யிடைச்சொற்கள் உண்டு. பொருளை யுணர்த்தாது பெயர்வினைகளைச் சார்ந்தே வருவன சில, அவை ஏ, உம், முதலியன. பொருளையுணர்த்திப் பிரதானமாய் வருவனசில, அவை முன், பின், அங்கு முதலியன எனக்கொளல் வேண்டும். மறவாமே — எதிர்மறை வினையெச்சம். நோற்பது — நோற்கத்தக்கது, வினையாலணையும்பெயர். பிறர் பிறர் — அடுக்குத்தொடர், எல்லாரும் என்கிற பொருளில் வந்தது. யார்யார்—இதுவும் அப்படியே. (உ0)

கற்றுப் பிறர்க்குரைத்துத் தாநில்லார் வாய்ப்படூஉம்
வெற்றுரைக் குண்டோர் வலியுடைமை - சொற்றநீர்
நில்லாத தென்னென்று நாணுறைப்ப நேர்ந்தொருவன்
சொல்லாமே சூழ்ந்து சொலல்.

21. The empty words of those, who having learnt the various sciences, teach others *precepts* which they themselves follow not, have such power as to prevent others from asking them to their shame "*why don't you who have inculcated the maxims follow them?*

(இ-ள்.) கற்று - நூல்களைக் கற்றுணர்ந்து, பிறர்க்கு-மற்றையோர்க்கு, உரைத்து - (அவற்றிலுள்ள) நன்னெறிகளைக்கூறி, தாம் நில்லார் - தாம் அந்நெறியில் நில்லாதவருடைய, வாய்ப்படூஉம் - வாயினிடத் துண்டாகும், வெற்றுரைக்கு - பயனில்லாத சொல்லுக்கு, ஓர்வலி யுடைமை - ஒரு பலமுள்ள தன்மை உண்டு—, (அதென்னெனில்,) சொற்ற நீர் - பிறர்க்கு நன்னெறி) சொல்லியநீர், நில்லாதது - அந்நெறியில் நிற்காமற்போனது, என் என்று - யாதுகாரணம் பற்றியது என்று, நாண் உறைப்ப - வெட்கம் உறைக்கும்படி, ஒருவன் —, நேர்ந்து - (தன்னை) யெதிர்ந்து, சொல்லாமே - சொல்லாத வண்ணம், சூழ்ந்து சொலல் - ஆராய்ந்து சொல்லுதலாம். தாம் - அசை.

கல்வி கற்றதற்குப் பயன் நன்னடக்கையாயிருக்க, அதுவில்லாமல் தன்னை யாரும் ஆக்ஷேபிக்காமல் தந்திரமாய்ப் பேசுவது தான் அயோக்கியருக்குப் பயனாகிறது என்று இகழ்ந்து கூறினார். இது ஓர்வகை வஞ்சப் புகழ்ச்சியணி.

பிறர்க்கு—நான்காம் வேற்றுமை, கொடைப்பொருளில் வந்தது. வாய்ப்படேஉம் — அளபெடை இன்னிசைக்கு வந்தது. சொற்ற — பெயரெச்சம், சொல் - பகுதி, ற் - இடைநிலை, அ - விகுதி, ல ற ஆனது சந்தி. இன் இடைநிலை பெற்றபோது சொல்லின எனவும், இடைநிலை யீறுதொக்கபோது சொல்லிய எனவும், முதல்தொக்கபோது சொன்ன எனவும், வருமென்றறிக. நில்லாதது — எதிர்மறைத் தொழிற்பெயர், நில்லாத காரணம் எனப்பொருள் கொண்டால் வினையாலணையும் பெயருமாம். உறைப்ப — இந்தச் செயவெனெச்சம் வினையுரியாய்ச் சொல்லாமே என்பதோடு முடிந்தது. (உக)

பிறர்க்குப் பயன்படத் தாங்கற்ற விற்பார்
தமக்குப் பயன்வே றுடையார் - திறப்படேஉந்
தீவினை யஞ்சா விறல்கொண்டு தென்புலத்தார்
கோவினை வேலை கொளல்.

22. Those, who sell to others the advantages of the *mysteries* which they have learnd, reserve an advantage of another description to themselves—the receiving the labours of the king of the dead, with the hardihood that defies the terrors of an evil life.

(இ-ள்.) தாங்கற்ற - தாம்கற்ற நூற்பொருள்களை, பிறர்க்கு- பிறருக்கு, பயன்பட - (தமக்குப் பொருள்முதலிய) பயனுண்டாக, விற்பார் - விற்பவர்கள், தமக்கு - தங்களுக்கு, வேறு பயன் - வேறோர்பலனை, உடையார் - உடையராவர்; (அதென்னவெனில்) திறப்படேஉம் - பொய் களவு முதலாகப் பலவகைப்பட்ட, தீவினை - பாவச்செய்கைகளை, அஞ்சா - பயப்படாத, விறல் கொண்டு - வலியடைந்து, அல்லது வலியினால், தென்புலத்தார் கோவினை - பிதுர்க்களுடைய அரசனாகிய எமனை, வேலைகொளல் - தொழில் கொள்ளுதல் ஆம்.

கற்றபடி தாம் நடவாமலே பிறர்க்குப் பணத்துக்காக நூல்களைப் போதிப்பவர்களுக்குக் கற்றபயன் எமதண்டனையன்றி வேறில்லை என்பது கருத்து.

கற்ற — பலவின்பால் வினையாலணையும்பெயர், அற்றுச்சாரியை பெற்று கற்றவற்றை எனவிரியும். தென்புலத்தார்—தெற்காகிய இடத்திலுள்ளவர், பிதுர் தேவதைகள்; தெற்குப்புலம்-தென்புலம் ; பண்புத் தொகை (உயிரீறு - சூ - ௩௪.) அத்து - சாரியை, ஆர் - விகுதி, இது தமிழில் தத்திதம் ; யமன் பிதுர் தேவதைகளின் அதிபதி யாதலால் தென்புலத்தார்கோ என்றார். வேலைகொளல் - வேலைசெய்யும்படி செய்தல், ஆதலால் தென்புலத்தார் கோவினை என இரண்டாம் வேற்றுமை வந்தது. இதுவும் வஞ்சப்புகழ்ச்சியணி. (உஉ)

கற்பன வூழற்றார் கல்விக் கழகத்தாங்
கொற்கமின் றூத்தைவா யங்காத்தல் - மற்றுத்தம்
வல்லுரு வஞ்சன்மி னென்பவே மாபறவை
புல்லுரு வஞ்சுவ போல்.

23. The ceaseless chattering, in the learned assembly of the coarse lips of those who were not destined to learning, tells us not to fear their otherwise powerful appearance, as the beasts and birds fear a figure of straw.

(இ - ள்.) கற்பன - கற்பதற்கு ஏதுவாகிய, ஊழ் அற்றார் - நல்வினை யில்லாதார், கல்விக் கழகத்து - புலவர் சபையில், ஒற்கம் - நாவடக்கம், இன்று - இன்றி, ஊத்தைவாய் - அசுத்தமாகிய வாயை, அங்காத்தல் - திறத்தல் (எத்தன்மைத்தா மெனில்) மா - மிருகங்களும், பறவை - பட்சிகளும், புல்லுரு - புல்லாற்செய்த உருவத்தைக்கண்டு, அஞ்சுவபோல் - பயப்படுவன போல, தம் - தம்முடைய, வல்லுரு - வலிய உருவைக்கண்டு, அஞ்சன்மின் - அஞ்சாதேயுங்கள், என்ப - என்று சொல்லுவன போலாம். ஆங்கு - மற்று - ஏ—இம்மூன்றும் அசை.

கற்பன—வினையாலணையும் பெயர், கற்பதின் காரணம் என்னும் பொருளதாய் ஊழ் என்பதோடு இருபெயரொட்டுப் பண்

புத் தொகையாயிற்று. ஒற்கம்—தொழிற்பெயர், ஒல்கு-பகுதி, அம் - விகுதி, ல ற ஆனது சந்தி. இன்று—இன்றி என்கிற எதிர் மறை வினையெச்சத்தின் திரிபு (உயி - சூ - உரு.) அஞ்சன்மின்— எதிர்மறை யேவற்பன்மை வினைமுற்று, அஞ்சு - பகுதி, அல் - எதிர்மறைவிகுதி, அனைத்து மொருபகுதி, மின் - ஏவற்பன்மை விகுதி. (வினை - சூ - கஅ.) மாபறவை — உம்மைத் தொகை யாதலின் வலிமிகாது நின்றது. இது தற்குறிப்பேற்றம் என் னும் அலங்காரம். உவமை கூடியது. (உரு)

போக்கறு கல்வி புலமிக்கார் பாலன்றி
மீக்கொ ணகையினர் வாய்ச்சேரா - தாக்கணங்கும்
ஆணவாம் பெண்மை யுடைத்தெனினும் பெண்ண
லம்பேடு கொள்ப்படுவ தில்.

24. Inexhaustible learning is attainable only by those who excel in observation; not by those who smile in vain self-conceit. Though a woman possesses charms which *Lachmi* might envy, they cannot be enjoyed by an hermophrodite.

(இ - ள்.) போக்கு அறு கல்வி - குற்றமற்ற கல்விகள், புலம் மிக்கார் பாலன்றி - அறிவு மிகுந்தவரிடத்தன்றி, மீக்கொள் நகையினர்வாய் - சிரித்து விளையாடுவதை மேற்கொண்டவ ரிடத்து, சேரா - சேராவாம்; தாக்கு அணங்கும் - வருத்துகிற தெய்வப் பெண்ணும், ஆண் அவாம் - புருடரு தகையை விரும் பத்தக்க, பெண்மை - பெண்தன்மையாகிய அழகை, உடைத் தெனினும் - (ஒருபெண்) உடைத்தாயிருந்தாலும், பெண் நலம்- அப் பெண்ணி னின்பம், பேடு - அலியால், கொளப்படுவதில் - கொள்ளப்படுவதில்லை.

எத்தனை அழகுள்ள பெண்ணானாலும் நபும்சகனுக்கு அவ ளால் சுகமில்லைபோல், நகையாளருக்குக் கல்வி வருவதில்லை என்பதாம்.

மீக்கொள்நகை — மேலேறிய நகை, அதிக நகை, அல்லது நகையை மீக்கொள்வார் எனப் பிரித்துக் கூட்டினுங் கூட்ட லாம். நகை—முதனிலைத் தொழிற்பெயர். வாய் - ஏழனுருபு

அணங்கும்—உம்மை சிறப்பு, இவ்வெழுவாய் அவாம் என்னும் பெயரெச்சத்தோடு முடிந்தது. ஆண்—ஆத்தன்மைக்கு ஆகு பெயர். அவாம்—அவாவும் என்பதில் உயிர்மெய் கெட்டது. (வினை-சூ-௨௨.) இப்பெயரெச்சம் பெண்மை என்னும் பெயர் கொண்டது. இது இரண்டாம் வேற்றுமைத்தொகை, உடைத்து என்பதோடு முடியும். உடைத்து—உடை-(பண்படி) பகுதி, து - ஒன்றன்பால் விகுதி, குறிப்புமுற்று; பெயருமாகலாம். பேடு—மூன்றாம் வேற்றுமைத் தொகை. கொளப்படுவதில்—என்பதை ஒரே வினைச்சொல்லாக் கொள்ளலாம். உடன்பாட்டெதிர்மறை வினையாம்; அல்லது கொளப்படுவது தொழிற்பெயராக்கி அதை இல் - உடையதன்றென முடிப்பினுமாம். (௨௪)

கற்றன கல்லார் செவிமாட்டிக் கையுறாஉங்
குற்றந் தமதே பிறிதன்று - முற்றுணர்ந்தும்
தாமவர் தன்மை யுணராதார் தம்முணரா
ஏதிலரை நோவ தெவன்.

25. If learnd men incur disrespect, while forcing instruction into the ears of the ignorant, the fault is their own. If with all their knowledge they do not know their neighbours' qualities, why should they be hurt at these ignorant neighbours for not knowing their merits.

(இ-ள்.) கற்றன - (தாங்) கற்ற நூற்பொருள்களை, கல்லார் - மூடர்களுடைய, செவி - காதுகளில், மாட்டி - புகுத்தி, கை உறாஉம் - பொருந்துகின்ற, குற்றம் - (அவமானமாகிய) பிழை, தமதே - தாம் செய்துகொண்டதே; பிறிதன்று - வேறன்று; தாம்—, முற்றுணர்ந்தும் - முழுவதுந் தெரிந்து, அவர் தன்மை - அம்மூடருடைய சுபாவத்தை, உணராதார் - அறியாதவர், தம் உணரா - தம்முடைய தகுதியை யறியமாட்டாத, ஏதிலரை - அயலாரை, நோவது - வெறுப்பது, எவன் - யாது காரணம்.

மூடர் திறம் இவ்வளவென்று தெரிந்துகொள்ளமாட்டமல் நூற்பொருள்களை அவர்களுக்குச் சொல்லுகிறவர் அம்மூடரால்

அவமதிக்கப்படுவோர்க ளாதலால் அது இவர்கள் குற்றமேயாம் என்றபடி.

தமது—குறிப்புமுற்று; தாம் - பகுதி குறுகியது, அ - சாரியை, து - விகுதி, ஏ - பிரிநிலை. நோவது — தொழிற்பெயர், நோ - பகுதி நீண்டது, அ - சாரியை, து - விகுதி. இது ஏதுவணி. (உரு)

வேத்தவை காவார் மிகன்மக்கள் வேறுசிலர்
காத்தது கொண்டாங் குவப்பெய்தார் - மாத்தகைய
அந்தப் புரத்தது பூஞை புறங்கடைய
கந்துகொல் பூட்கைக் களிறு.

26. The noble wait not in attendance at the royol Court; and there are some others, who have no enjoyment in waiting there. The cat frequents the splendid zenana, while the hollow-handed elephants, which can tear up the pillars to which they are bound, remain without the gate.

(இ - ள்.) மிகன் மக்கள் - மேலோர், வேத்தவை - இராசசபையை, காவார்-காத்துக்கொண்டிரார் (ஆயினுஞ் சிறப்படைவர்;) வேறு சிலர் - சிலோர், காத்ததுகொண்டு - அச்சபையைக் காத்திருந்ததனால், உவப்பு எய்தார் - மகிழ்ச்சியை யடையார்; பூஞை - பூனையானது, மாத்தகைய - பெருந் தகுதியையுடைய, அந்தப்புரத்தது - அந்தப்புரத்தி லிருப்பது, (ஆயினுஞ் சிறப்படையாது;) கந்துகொல் பூட்கைக் களிறு - கட்டுத்தறியை முறிக்காநின்ற வலியையுடைய யானை, புறங்கடைய - தலைவாயிலிடத்திருப்பது, (ஆயினுஞ் சிறப்படையும்.) ஆங்கு-அசை.

வேந்து அவை=வேத்தவை, மென்றொடர் வன்றொடராயிற்று. [உயிர்-கு-ரு௪.] மிகன் மக்கள்—மிகலையுடைய மக்கள், இரண்டனுருபும் பயனு முடன்றொக்கதொகை, மிகல்=மேம்பட்டிருத்தல். காத்தது—இறந்தகாலத் தொழிற்பெயர். கொண்டு—மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. மாத்தகை—உரிச்சொற்றொடர், தகை-தொழிற்பெயர், பொருளில்பண்பு. இது-பகுதி, அ - விகுதி. தகைய—குறிப்புப் பெயரெச்சம், அந்தப்

புரத்தது—இடமடியாகப்பிறந்த குறிப்புமுற்று. அந்தப்புரம் என்னும் வடமொழி பட்டணத்தின் உட்புறமென்னும் பொருளுள்ளதாய் ராஜஸ்திரீக ளிருக்குமிடத்துக்கு வந்தது. புறங்கடைய என்னுங் குறிப்புமுற்று து என்னு மீறுகுறைந்தது. பன்மையெனவைத்து களிறென்னும் பால்பகா வஃறிணைப்பெயரைப் பன்மையாக் கொள்ளவுமாம். வருவித்த வாக்கியங்கள் இசையெச்சம். (உசு)

குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற
புதல்வர்க்குத் தந்தையுந் தாயும் - அறவோர்க்
கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம்
இலைமுகப் பைம்பூ ணிறை.

27. To a chaste woman her husband is god; to children, their parents; to desciples their spiritual preceptors; and to all, the king adorned with leaf-like ornaments of pale gold.

(இ-ள்.) குலமகட்கு - நன்னடைக்கையுடைய பெண்ணுக்கு, கொழுநனே - தன் கணவனே, தெய்வம் - தேவனும்; புதல்வர்க்கு - புத்திரர்களுக்கு, தந்தையும் தாயும் - தகப்பனுந் தாயுமே, தெய்வம்—; அறவோர்க்கு-(பிரமசாரிய முதலிய) தருமவழியில் நின்றோர்க்கு, அடிகளே-குருவே, தெய்வம்—; அனைவோர்க்கும் - எல்லாருக்கும், இலைமுகப் பைம்பூண்-இலைமுகம்போல் தொழில்செய்யப்பெற்ற பசும்பொன் னணிகளணிந்த, இறை - அரசன், தெய்வம்—.

குலமகள் — குலத்துக்கு உரியமகள்; "வேசி குலத்துக்கு உரியளல்லாமையின்" அது இங்கே நன்னடக்கைக்கு ஆயிற்று. மக - பகுதி, ள் - பெண்பால் விகுதி. கொழுநன் — கொழு - (பண்படி) பகுதி, (=இளமை, யவ்வனம் என்பதாம்), நன் - ஆண்பால் விகுதி; யவ்வன முடையவனென்பது குறிப்பால் கணவனை யுணர்த்துகின்றது. கொழு - கொழு கொம்பெனக் கொண்டு ஆதரவுக்கு ஆயிற்றெனவுமுரைக்கலாம். ஏ—தேற்றம். மன்ற—இதுவும் தேற்றப்பொருளுள்ள இடைச்சொல்; அசை

யுமாம். அறவோர்—அறம் - பகுதி, மகரம் கெட்டது, ஆர் - பலர்பால்விகுதி; [பொது - சூ - உ.] விதியால் ஆ ஓ ஆயிற்று; தெய்வம் என்றதற்கு தெய்வம்போல மேன்மையாக் கொண்டாடத் தக்கவனென்பது கருத்து. இது ஒப்புமைக் கூட்டம் என்னுமணி. (உஎ)

கண்ணிற் சொலிச்செவியி னோக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந் - தண்ணளியான்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு.

28. Though princes possess the prerogative of speaking with the eye, and seeing with the ear, as the fruit of *former* virtues; of what avail is it, unless they protect the earth with their clemency? What advantage will mighty weapons afford to those, who are wanting in manly courage?

(இ-ள்.) கண்ணில் - கண்ணால், சொலி-சொல்லி, செவியின் - காதினால், நோக்கும் - பார்க்கின்ற, இறைமாட்சி - அரசச் செல்வம், புண்ணியத்தின் பாலதே ஆயினும் - முன் செய்த நல்வினையின் பகுதியா லானதானாலும், தண் அளியால்-குளிர்ச்சியாகிய அன்பினால், மன்பதை - மனிதர்களை, ஓம்பாதார்க்கு - பாதுகாவாத அரசர்களுக்கு, என் ஆம் - (அவ்வரசச்செல்வம்) யாதுபயனும்; வயப்படை - வலியுடைய ஆயுதமானது, ஆண் அல்லவர்க்கு - ஆண்மையில்லாதவர்களுக்கு, என் பயக்கும் - என்னபயன் செய்யும். மற்று - அசை.

ஜனங்களைப் பாதுகாவாவிடின் மிகப் பெருமையான ராஜ சம்பத்து வீண் என்றபடி.

பாலது — பாலால் வந்தது, இதுவும் தத்திதம். ஆணல்லவர்—இரண்டு சொல்கூடி ஒரு சொற்றன்மைப்பட்டது; ஆண்மை - சூரத்தனம். கண்ணிற் சொலி செவியினோக்கும் என்றது ஒருவகை விபாவனையணி. மற்றது இன்மை நவிற்சியணி. (உஅ)

**குடிகொன் றிறைகொள்ளுங் கோமகற்குக் கற்றா**
**மடிகொன்று பால்கொளலு மாண்பே-குடியோம்பிக்**
**கொள்ளுமா கொள்வோர்க்குக் காண்டுமேமாநிதியம்**
**வெள்ளத்தின் மேலும் பல.**

29. To a prince, who exacts tributes from his subjects, to cut open the udder of a new milched cow to obtain her milk, would be comparatively good; but to those who protect their subjects before receiving their own dues, we have seen wealth overflowing like a flood.

(இ-ள்.) குடி - குடிகளை, கொன்று - வருத்தி, இறை - இறையை, கொள்ளும் - வாங்குகிற, கோமகற்கு-அரசனுக்கு, கற்றா - கன்றையுடைய பசுவின், மடி - மடியை, கொன்று - கொய்து, பால் - பாலை, கொளலும் - கொள்ளுதலும், மாண்பே - நற்செய்கையே; குடி - குடிகளை, ஓம்பி - பாதுகாத்து, கொள்ளுமா - இறைவாங்கு முறைமையாக, கொள்வோர்க்கு - வாங்குகிற அரசர்க்கு, மாநிதியம் - மேன்மையான திரவியம், வெள்ளத்தின் மேலும் பல - வெள்ளமென்னுந் தொகையினுமிக்க அனேகமாயிருக்க, காண்டுமே - கண்டோமே.

கோமகன்—இருபெயரொட்டுப் பண்புத்தொகை. கற்றா—(கன்று + ஆ) இரண்டனுருபும் பயனுந் தொக்கதொடர், மென்றொடர்க் குற்றுகரம் வன்றொடர்க் குற்றுகரமானது. கொளலும்—உ[illegible]மை இழிவுசிறப்பு. கொள்ளும் ஆ—ஆறு என்பதில் ஈறு [illegible]த்தல். காண்டும்—இறந்தகாலவுளப்பாட்டுத் தன்மைப்[illegible]ம வினைமுற்று, நீயும் நானும் பிறரும் என்றபடி. [வினை-ரு-கங.] காண் - பகுதி, டும் - விகுதி. (உகூ)

**இன்று கொளற்பால நாளைக் கொளப்பொறான்**
**நின்று குறையிரப்ப நேர்படான் - சென்றொருவன்**
**ஆவன கூறி னெயிறலைப்பா னாறலைக்கும்**
**வேடலன் வேந்து மலன்.**

30. He, who will not wait till to-morrow to receive that which becomes due to-day, who will not attend when one stands to beg redress, and who will gnash his teeth with impatience when one may approach to offer wise advice, is neither a Vedan who robs on the highway, nor a king.

(இ-ள்.) இன்று - இன்றைக்கு, கொளற்பால - வாங்கிக்கொள்ளத்தக்க பொருள்களை, நாளை - மறுநாள், கொளப் பொறான் - வாங்கப் பொறுத்திருக்கமாட்டான்; நின்று - எதிரிலே நின்று குறை இரப்ப - குறையைச்சொல்லி வேண்ட, நேர்படான் - காணப்படான்; ஒருவன்சென்று - ஒருவன் போய், ஆவன - தனக்கு வேண்டியவற்றை, கூறின் - சொன்னால், எயிறு அலைப்பான் - தன் பல்லைக்கடித்து உறுக்குவான், (ஆதலால் இப்படிப்பட்ட அரசன்) ஆறு அலைக்கும் வேடு அலன் - வழிபறிக்கும் வேடன் அல்லன்; வேந்தும் அலன் - அரசனு மல்லன்.

வெளிப்படையாநின்று பறித்தலாலே வேடனல்லன் என்றும் குடிகளுடைய வருத்தத்தைப் பாராமையால் வேந்த னல்லன் என்றுங் கூறினார்.

இன்று—காலத்தை யுணர்த்துவதோ ரிடைச்சொல்லென வுணர்க. கொளற்பால — கொள்ளுதலாகிய பான்மையையுடைய, கொளற்குப் பான்மை யுடையன என இருவகையினுமாம், பலவின்பெயர். "எயிறு அலைப்பான்" என்பது பல்லைக் கடிப்பதற்கு வழங்குவது பாஷையின்முறை. வேடு, வேந்து— இவை அரசு அமைச்சு என்பவைபோல் அத்தன்மையையுணர்த்தும்; அஃறிணைப் பெயர்களாயினும் அவற்றை யுடையார்க்கு ஆயின. உம்—எச்சப்பொருளில் வந்தது. (௩0)

முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப வுடுத்துண்ப வுண்ணா - இடித்திடித்துக்
கட்டுரை கூறிற் செவிக்கொளா கண்விழியா
நெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்.

31. A king, who, after crowning his head with chaplets, rubbing his body with unguents, clothing himself in rich robes, and feasting on rich viands, will not lend his ear, nor open his eyes, though addressed with reiterated earnestness, is but a corpse endued with breath.

(இ - ள்.) முடிப்ப - முடிக்கத்தக்க மலர்களை, முடித்து - முடித்துக்கொண்டு, பின் - பின்பு, பூசுவ - (கலவை முதலிய) பூசத்தக்கவைகளை, பூசி - பூசிக்கொண்டு, உடுப்ப - (பட்டாடை முதலிய) உடுக்கத்தக்கவைகளை, உடுத்து - உடுத்திக்கொண்டு,

உண்ப - (சோறு முதலிய) உண்ணத்தக்கவைகளை, உண்ணாத உண்டு, (உயிர்த்தன்மைகாட்டி) இடித்திடித்து - பலமுறை நெருங்கி, கட்டுரை - உறுதிச்சொல்லை, கூறின் - சொன்னால், செவிக்கொளா - காதில் கொள்ளாதனவாய், கண் - கண்களை, விழியா - திறவாதனவாகிய (அரசரென்னுஞ் செந்துக்கள்,) நெட்டுயிர்ப்போடு - பெருமூச்சோடு, உற்ற - கூடிய, பிணம் - பிணங்களாம்

உண்ணல் முதலிய உயிரின்செய்கை யிருந்தும் செவிகொடாமலும் கண் விழியாமலு மிருப்பதனால், யார்க்கும் எதற்கும் பயன்படாமைபற்றிப் பிணமென்றார். இது அதிக அபேதவுருவக அணி.

முடிப்ப, பூசுவ, உடுப்ப, உண்ப—இவை செயப்படுபொருள் செய்ததுபோல் வந்த வினையாலணையும் பெயர்கள், பலவின்பால். உண்ணா—செய்யாவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். 'முடித்து' முதலியவினையெச்சங்கள் வினைச்செவ்வெண். கொளா, விழியா—இரண்டும் எதிர்மறைப் பலவின்பால் வினைமுற்றாலணையும் பெயர். முன்னது வினையெச்சமாயிற்று [வினை - சூ - ௧௫.] உயர்திணையாகிய அரசர்களை அஃறிணையாக்கூறியது இழிவினால் வந்த திணைவழுவமைதி [பொது - சூ - ௨௮.] கட்டு—உறுதி, முதனிலைத் தொழிலாகுபெயர், அதனை யுடையவுரை கட்டுரை. நெட்டுயிர்ப்பு—நெடு உயிர்ப்பு, பண்புத்தொகை. (௩௧)

ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றோ ரிணையாத் தெரிதந்துங் - குற்றம்
அரிவரிதென் றஞ்சுவதே செங்கோன்மை சென்று
முறையிடினுங் கேளாமை யன்று.

32. The justice of a king consists in his endeavouring to ascertain the truth in person, (suspectful of the representations of spies) concealed in secret places, unattended and alone, and in hesitating to act with the persuasion that to detect the faults of others is not an easy task. But to remain inexorable in spite of the petitions of the distressed, is not justice.

(இ-ள்.) ஒற்றில் - வேவுகாரரால், தெரியா - உண்மை அறி யப்படா (ஆதலால்), சிறைப்புறத்து - ஒதுக்கிடங்களிற் (சென் றிருந்து), ஓர்தும் என - அறிவோமென்று, பொன் தோள்-அழ கியதமது தோளே, துணையா-(தமக்குத்) துணையாகச்சென்று, தெரிதந்தும் - தாமே தெரிந்துகொண்டும், குற்றம்-ஒருவரிடத் துக் குற்றங்களை, அறிவு அரிதென்று - நிச்சயிப்பது அருமை யானதென்று, அஞ்சுவதே - பயப்படுவதே, செங்கோன்மை - அரசநீதியாம்; (அவ்வாறன்றி) சென்று - (ஒருவன்) போய், முறையிடினும் - (தன்குறைகளை) முறையிட்டுச் சொன்னாலும், கேளாமை - காதுகொடாமை, அன்று - (அரசநீதி) யன்று.

ஒற்றின்—தம்மரசரிடத்தும் பிறவரசரிடத்துமொன்றியிருத் தலால் ஒற்று; இதில் வலித்தல் விகாரம், முதனிலைத்தொழிற் பெயர்; அத்தன்மை யுடையார்க்கு ஆகுபெயர்; ஐந்தாம் வேற் றுமை ஏதுப்பொருளில் வந்தது. தெரியா—எதிர்மறைப் பல வின்பால்முற்று, காரியங்கள் என எழுவாய்வருவிக்க. ஓர்தும்— தனித்தன்மைப் பன்மைமுற்று; தும் - விகுதி, எதிர்காலங் காட்டியது. [பத - சூ - ௧௮.] தெரிதந்து—இதில் தெரி என்ப தோடு தா என்பது அசைநிலையா வந்தது. உம்மை—சிறப்பு. செங்கோல்—செவ்வியகோல், கோணுத தராசு, இது உவமை யாகுபெயராய் துரைத்தனத்தை யுணர்த்தும். மை - விகுதி, அதன் தன்மையை உணர்த்தும். பகுதிப்பொருள்விகுதி யென் பது நேர். கேளாமை—எதிர்மறைத்தொழிற்பெயர். (௩௨)

ஏதிலார் யாதும் புகல விறைமகன்
கோதொரீஇக் கொள்கை முதுக்குறைவு - நேர்நின்று
காக்கை வெளிதென்பா ரென்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு.

33. While others assert any thing, the wisdom of the Prince is to receive their assertions, rejecting what is false. What will not men say, who standing opposite to the crow, declare it to be white? There are some, who will even say, that matricide is justifiable.

(இ - ள்.) ஏதிலார் - அந்நியர், யாதும்புகல - பொய் மெய் எல்லாவற்றையுஞ் சொல்ல, இறைமகன் - அரசன், கோது - (அவற்றுள்) குற்றத்தை, ஒரீஇ - நீக்கி, கொள்கை - குணத்தை (யேற்றுக்) கொள்ளுதல், முதுக்குறைவு - பேரறிவாம்; நேர் நின்று - எதிரில் நின்று, காக்கை வெளிதென்பார் - காக்கை வெள்ளையென்று சாதிப்பவர், என்சொலார் - வேறென்ன (விபரீதஞ்) சொல்லமாட்டார்; தாய்க்கொலை - தாயைக் கொல்லுதல், சால் புடைத்து - அமைதியுடையது, என்பாரும் - என்று சொல்வாரும், உண்டு - சிலருளர். [அமைதி - சம்மதி.]

யாதும்—உம்மை முற்றும்மை. இறைமகன்—இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஒரீஇ—இறந்தகால வினையெச்சம், ஒருவு-பகுதி, இ-விகுதி புணர்ந்து கெட்டது, ஈற்றுயிர்மெய்யுங் கெட ரகரத்தின் மேனின்ற உகரம் இகரமாகி யளபெடுத்தது. இது சொல்லிசை யளபெடை. முதுக்குறைவு—முதுக்கு = முதுமை, கு - பண்பின்விகுதி, உறைவு = அதில் இருத்தல், இரண்டுமொழியு மொருமொழித்தன்மைப்பட்டது, அறிவில் மூத்திருத்தலென்பது பொருள். உண்டு—இருதிணைக்கும் பொதுவாகிய குறிப்புமுற்று, [வினை - சூ - ௨0] வெளிது — வெண்மையில் மை கெட்டு வெள் என நின்றது பகுதி, து - விகுதி, இ - சாரியை. "அன்னபிறவு மாகுமையுருபே" என்றதனல் தாய் என்னும் பொதுப்பெயர்க்கு ஐவிரியாமல் வலிமிகுத்தது. கொலை—கொல்லுதல், தொழிற்பெயர்; கொல் - பகுதி, ஐ - விகுதி, தனிக்குறின் முன்னதாய் இரட்டித்த லகரம் தொகுத்தலாய் நின்றது. (௩௩)

கண்கூடாப் பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
குண்டோ வுணர்ச்சிமற் றில்லாகும் - மண்டெரி
தான்வாய் மடுப்பினு மாசுணங் கண்டுயில்வ
பேரா பெருமூச் செறிந்து.

34. Though ruin be before their eyes, will fools perceive it? No, they will not: though thick flames envelope their body, the sleeping rock-serpents will not arouse from their loud-breathing slumbers.

(இ - ள்.) கேடு கண் கூடாப்பட்டது எனினும் - கேடு கண்ணுக்குப் புலப்பட்டதாயினும், கீழ் மக்கட்கு - மூடருக்கு, உணர்ச்சி உண்டோ - (அக்கேட்டினின்று ஒழிதற்கு) அறிவுண்டாகுமோ, இல் ஆகும் - இல்லையாகும்; மண்டு எரி - மிகுந்த தீயானது, வாய் மடுப்பினும் - தனக்குள்ளாக்கிக் கொண்டாலும், மாசுணம் - பெரும்பாம்புகள், பெருமூச்சு எறிந்து - நெட்டுயிர்ப்பு விட்டுக்கொண்டு, கண் துயில்வ - நித்திரைசெய்வன, போரா - நீங்கா. மற்று - தான் - அசை.

*கண் கூடு ஆ—கண்ணுனது கூடுவதாக. கேடு—முதனிலைதிரிந்த தொழிற்பெயர். இல் ஆகும்—என இரண்டுஞ் சேர்ந்ததோர் வினைமுற்று.* (௩௪)

கட்புப் பிரித்தல் பகைநட்ட லொற்றிகழ்தல்
பக்கத்தார் யாரையு மையுறுதல் - தக்கார்
நெடுமொழி கோறல் குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி.

35. To estrange friends, to befriend enemies, to scoff at a spy, to suspect all associates, to despise the continued advice of the wise, and to become changed in disposition, are the forerunners of one's own ruin.

(இ - ள்.) நட்பு - நட்டோரை, பிரித்தல் - பகையாக்கிக்கொள்ளுதலும், பகை - பகைவரை, நட்டல் - சிநேகித்துக் கொள்ளலும், ஒற்று - வேவுகாரரை, இகழ்தல் - அவமதித்தலும், பக்கத்தார் யாரையும் - அருகிலுள்ளோ ரெல்லாரிடத்தும், ஐயுறுதல் - சந்தேகப்படலும், தக்கார்-பெரியோருடைய, நெடுமொழி - உறுதி மொழிகளை, கோறல் - இகழ்தலும், குணம்பிறிதாதல் - இயல்பாகிய குணம் வேறுபடலும், கெடுவது - (வரக்கடவதாகிய) கெடுதியை, காட்டும் - (முன்னர்) அறிவிக்கின்ற, குறி - குறிகளாம்.

*பிரித்தல்—பிரி என்னும் பகுதி, தன்வினை பிறவினைகளுக்குப் பொது. பகை — முதனிலைத்தொழிற்பெயர், அஃதுடையோர்க்கு ஆகுபெயர். நட்டல்—நள் - பகுதி, தல் - விகுதி, ளகர*

தகரங்கள் டகரமானது சந்தி. கட்டும் இப்பகுதியிற் பிறந்த தே. ஐயுறுதல்—ஐயம்+உறு என்பது அம் கெட்டு ஐயுறு ஆனது (காமுறு என்பதுபோல்) பகுதி. கோறல்—கொல்—தல் - பகுதி விகுதிகள், முதனீட்சி விகாரம். மற்றவைசந்தி. [மெய்-சூ-உச.] ஸமுச்சயவணி. (கூரு)

* * * * * * * (கூசு)

கண்ணோக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா - வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு.

37. The nobly generous, whose glance is a bud, whose smiling countenance, a fresh blown blossom, whose truthful and courteous speech, the sweet unripe fruit, and whose munificence, the luscious fruit, are the real inexhaustible *Calpa tree?*

(இ-ள்.) கண் நோக்கு - கண்ணின்பார்வையே, அரும்பு ஆ- முகையாகவும், நகைமுகமே - இனிய முகமே, நாள் மலா ஆ- புதிய மலராகவும். இன்மொழியின் வாய்மையே - இனிமையான சொல்லின்மெய்ம்மையே, தீங்காய் ஆ-மதுரமுள்ள காயாகவும், வண்மை - கொடையே, பலம் ஆ - பழமாகவும், நலம் கனிந்த - (இவ்வாறு) நன்மைகளைப் பயக்கின்ற, பண்புடையார் அன்றே - குணமுடையவாக ளன்றோ, சலியாத கற்பதரு - (கொடுப்பதிற்) சலியாத கற்பக விருக்ஷமாவர்.

நோக்கு—முதனிலைத் தொழிற்பெயா, கருவிக்கு ஆகுபெயர். அம் என்னும் கருவிப்பொருள் விகுதி புணர்ந்து கெட்ட தெனினுமாம். அரும்பு, மலர், காய் இவைகளு மிப்படியே. தீ - இனிமை, தீக்காய் என்பது தீங்காயென மெலிந்தது. கற்பதரு—வேண்டியவைகளைக் கற்பிப்பதாகிய மரம், வடமொழிப் பண்புத்தொகை. (கூஎ)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பிற்
றூங்குங் களிறோ துயருறா - ஆங்கதுகொண்
டூரு மெறும்பிங் கொருகோடி யுய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று.

38. The reeling elephant will suffer nothing by a small quantity of of rice dropping off from the mouthful it receives: but a crore of crawling ants will with their relatives subsist thereby.

(இ-ள்.) வாங்கும் - (தான்) ஏற்றுக்கொள்ளும், கவளத்து - கவளத்தில், ஒருசிறிது - மிகச் சிறிதரிசி, வாய் - வாயிலிருந்து, தப்பில் - தவறி வீழ்ந்தால், தூங்கும் - அசைகின்ற (வியல்பினையுடைய), களிறோ-யானைகளோ, துயர்உறா - துன்பமடையமாட்டா; ஆங்கு அது கொண்டு - அக்கவளத்தில் தவறுவதைக்கொண்டு, ஊரும் - ஊருகின்ற, ஒருகோடி எறும்பு - ஒருகோடி எறும்புகள், இங்கு - இவ்வுலகத்து, ஆரும் கிளையோடு-நிறைகின்ற சுற்றத்தோடு, அயின்று - உண்டு, உய்யும் - பிழைக்கும். ஆல் - அசை.

செல்வாக்குச் சிறிதுபொருள் அழியினும் துன்பமில்லை அதைக்கொண்டு எளியோர் பலர் பிழைப்பர் என்னுங் கருத்தைப் பிறிதுமொழிதல் யணியாகக் கூறினார்.

ஒருசிறிது—சிறியதொருபாகம் என்றபடி. களிறு, எறும்பு—பால் பகாவஃறிணைப்பெயர்கள், இங்குபன்மை. கொண்டு—இங்கு மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. கிளை—கிளைப்பது கிளை, கர்த்தாபொருள் விகுதி புணர்ந்துகெட்ட பெயர், தன் சம்பந்தமாய்த்தோன்றி நிற்பதால் சுற்றத்தை யுணர்த்தியது; மரக்கிளையின் பெயராய் சுற்றத்துக்கு உவமையாகுபெயரெனினுமாம். அயின்று—அயில் - பகுதி, ற் - இடைநிலை, உ-விகுதி, வினையெச்சம். (௩௮)

மாகஞ் சிறுகக் குவித்து நிதிக்குவை
ஈகையி னெக்கழுத்த மிக்குடைய - மாகொல்
பகைமுகத்த வொள்வேலான் பார்வையிற் றீட்டு
நகைமுகத்த நன்கு மதிப்பு.

39. The smiling approbation, which is expressed in the glance of the prince, whose bright javlien threatens the death of elephants, is a prouder thing, than the gift of a heap of treasure, large enough to diminish the sky.

(இ-ள்.) மாகம் - ஆகாயம், சிறுக - சிறிதென்று சொல்லும் படி, நிதிக்குவை - பொருட் கூட்டத்தை, குவித்து—, ஈகையின் - (ஒருவனுக்குக்) கொடுப்பதிலும், மா கொல்-யானையைக் கொல்லுகிற, பகைமுகத்த-பராக்கிரமத்தைத் (தன்னிடத்தில்) உடைய, ஒள் வேலான் - பிரகாசம் பொருந்திய வேலையுடைய அரசனது, பார்வையில் - பார்வையால், தீட்டும் - எழுதப் படுகின்ற, நகை முகத்த - மலர்ந்த முகத்தினிடத்து உள்ள, நன்கு மதிப்பு - உயர்வாக மதித்தல், எக்கழுத்தம் மிக்கு உடைய - மிகவுந் தலையெடுப்புடையனவாம்.

அரசனிடத்துப் பொருள் பெறுவதைவிட அவனால் நன்கு மதிக்கப்படுவதே சிறப்பு என்பது கருத்து.

மாகம்—மஹாவம் என்கிற வடமொழிப் பண்புத்தொகையின் தற்பவமாம்; மஹா என்டதின் விகாரமே மா என்னும் பண்பு; உரித்தொடருமாம். சிறுக—சிறுகு - பகுதி, அ-விகுதி, செயவெனெச்சம். மிக்கு—மிக என்னுஞ் செயவெனெச்சத்திரிபு. [வினை-௯-௨௭.] முகத்த—குறிப்புப் பெயரெச்சம். பார்வை—ஐ என்னும் கருவிப்பொருள்விகுதி பெற்றபெயர், வகரம் எழுத்துப்பேறு, தொழிலாகுபெயரெனினும் ஒக்கும். நன்கு மதிப்பு—நன்காகமதிப்பு. எக்குகழுத்து என்பது ஈறுதொகுத்தலாய் எக்கழுத்தென்றாகி, எக்கியகழுத்தை யுடைமை என்னும் பொருளில் அம் விகுதி வந்ததெனக் கொள்ளலாம்; எக்குதல்-உயர்த்தல், இறுமாத்தலென்பது திரண்டபொருள். (௩௯)

**களைகணுத் தம்மடைந்தார்க் குற்றுழியு மற்றோர்**
**விளைவுன்னி வெற்றுடம்பு தாங்கார் - தளர்நடைய**
**தூனுடம் பென்று புகழுடம் போம்புதற்கே**
**தானுடம் பட்டார்க டாம்.**

40. Those who have resolved to cherish the body of fame, perceiving the frailness of the body of flesh, will not hesitate to sacrifice their lives, although to the detriment of worldly pleasures, while persons attached to them are beset with calamities.

(இ-ள்.) ஊன் உடம்பு - இறச்சியாலாகிய உடம்பு, தளர் நடைய தென்று - (பிணி மூப்பு முதலியவற்றால்) தளரு மியல் புடையதென்று, புகழுடம்பு - (அவ்வாறு தளராத) கீர்த்தி யாகிய உடம்பை, ஓம்புதற்கே - பாதுகாத்தலுக்கே, உடம்பட் டார்கள் - உடம்பட்டவர்கள், களைகண் ஆ - ஆதாரவாக, தம் அடைந்தார்க்கு-தம்மை அடைந்தவர்க்கு, உற்றுழியும் - (துன் பஞ் சிறிது) வந்தவிடத்தும், மற்றோர் வினைவு - (உலக வின்ப முதலாகிய) வேறொரு பயன் அநுபவித்தலை, உன்னி - உட்கொ ண்டு, வெற்றுடம்பு - பயனில்லாத உடம்பை, தாங்கார் - தாங் கிக்கொண்டு இரார். தான் - தாம் - அசை.

நல்லோர் தம்முடலைத் துறந்தாகிலும் தமமை யடைந்தவர் களுக்கு நேர்ந்த துன்பத்தை நீக்குவர் என்பது கருத்து.

உற்றுழி—உற்ற உழி - பொருந்திய இடம், நிலைமொழி யீறு தொகுத்தல்; பெயரெச்சத்தொடர்; துன்பம் என்பது இச்சொ ல்லில் நியதியாத் தோன்றும். உறு என்பதின்மேல்வந்த வினை யெச்ச மென்னவுமாம். வினைவு—பயனுக்கு ஆகுபெயர். ஊனு டம்பு—மூன்றாம் வேற்றுமை யுருபும்பயனு முடன்றொக்கதொ டர். புகழுடம்பு—பண்புத்தொகை நிலைத்தொடர், இதனையும் மூன்றாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொட ரென்னலாம். உடம்பட்டார்—உடன்படு என்பதின் மருவாகிய உடம்படு - பகுதி, டகரமிரட்டி இறந்தகாலங் காட்டும். (௪0)

தம்முடை யாற்றலு மாநமுந் தோற்றுத்தம்
இன்னுயி ரோம்பினு மோம்புக - பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்
கிறுவரை யில்லை யெனின்.

41. If any would save their sweet lives, by sacrificing courage and honor, let them do so, provided even then they can be secure from death for ever so short a time.

(இ-ள்.) தம்முடை - தம்முடைய, ஆற்றலும் - வலியும், மா நமும் - பெருமையும், தோற்று - இழந்து, தம் - தம்முடைய, இன் உயிர் - இனிமையான பிராணனை, ஓம்பினும் ஓம்புக - கா

த்தாலுங் காக்கக்கடவர், பின்னர்-பிறகு, சிறு வரையாயினும் - அற்பகாலமாயினும், தமக்கு - (இழிதொழில் புரிந்து தம்முயிரைக்கு காக்கும்) அவர்க்கு, இறுவரை - சாங்காலம், மன்ற இல்லை எனின் - நிச்சயமாக இல்லையானால். ஆங்கு-அசை எனின் ஓம்புக எனக் கூட்டிக்கொள்க.

சாவென்பது நிச்சயமா யிருத்தலால் தம்முடைய பலமும் மானமுங் கெட்டு உடம்பைக் காப்பாற்றுவதிற் பயனில்லை யென்பது கருத்து.

ஆற்றலாவது சிறந்த காரியங்களைச் செய்யுந்திறம், மானமென்பது பிறர்மதிக்கும்படியான நிலை.

'ஓம்பினு மோம்புக'—உம்மை இழிவுசிறப்பு. சிறுவரை, இறுவரை என்பவைகளில் வரையென்பது காலத்துக்கு ஆனது. முன்னது பண்புத்தொகை, பின்னது வினைத்தொகை. வரை - செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டபெயர். வரைதல் = அளவிடுதல். உடை என்பது உடையவென்பதின் தொகுத்தல். (௪௧)

கலனழிந்த கற்புடைப் பெண்டிரு மைந்து
புலனொருங்கப் பொய்யொழிந் தாரும் - கொலைஞாட்
மொய்ம்புடை வீரரு மஞ்சார் முரண்மறலி [பின்
தும்பை முடிகு டினும்.

42. Virtuous matrons who have renounced their ornaments in widowhood, sages who subduing their senses have relinquished the false pleasures of the earth, and the heroes who stand undaunted in the field of battle, will fear not though the mighty regent of the dead appears before them adorned with a garland of Thoombay * (*Drona*) flowers.

(இ-ள்.) கலனழிந்த - மங்கலாபரணமிழந்த, கற்புடைப் பெண்டிரும் - பத்தினிக்குணமுள்ள குலமகளிரும், ஐந்து புலன் ஒருங்க - ஐம்புலன் கெட, பொய் - பொய்யாகிய உலகவின்பத்தை, ஒழிந்தாரும் - விட்டோரும், கொலைஞாட்பின் - கொலைக்களத்தில், மொய்ம்புடை - ஆற்றலையுடைய, வீரரும் - வீரர்

* The wearing of this is a sign of challenge.

களும், மூரண் மறலி - வீரமுள்ள நமன், தும்பை - (சண்டைக் குப்போவார் சூடும்) தும்பைப்பூ மாலையை, முடி சூடினும் - சிரவில் தரித்துக்கொண்டாலும், அஞ்சா - தன் நிலையினின் றும் கலங்கார்.

நல்ல கைம்பெண்களும், நல்ல துறவிகளும் நல்ல வீரர்களும் மரணத்திற்கு அஞ்சாமல் மானத்தையே காத்துக்கொள்வாரக ளென்பது கருத்து.

கலன்—மங்கலியம். வீரா—வடமொழி. தும்பை—இது பூவு க்கு முதலாகுபெயராய் அவைகளாலாகு மாலைக்குக் கருவியா குபெயரானது. போருக்குச் செல்வோர் தும்பைமாலைதரித்தல் மரபு; இங்கு கொலைக்குக் குறிப்பு. மறலி—மறுக்கக்கூடாதவ னென்பது கருத்து; மறு என்னு முதனிலைத்தொழிற்பெயரோ டு அல் என்னும் பண்படிபுணர்ந்த மறல் - பகுதி, இ - உடைமை ட்பொருள் விகுதி. (௪௨)

புழுநெளிந்து புண்ணழுகி யோசனை நாறுங்
கழிமுடை நாற்றத்த வேனும் - விழலர் [ர்
விளிவுன்னி வெய்துயிர்ப்பர் மெய்ப்பயன் கொண்டா
சுளியார் சுமைபோடு தற்கு.

43 Fools will sigh deeply at the thought of death though their bodies be corrupted with sores full of crawling worms, the rank odour of which may be perceived at the distance of about ten miles but those, who have derived the *true* advantage of the body, will not shudder to cast off that burden.

(இ-ள்.) விழலா - அறிவில்லாா, புழு நெளிந்து - (தம்முடம் புகள்) புழுக்கள்நெளிந்து, புண் அழுகி - புண்கள் அழுகி, யோ சனை - யோசனைதூரம், நாறும் - நாக்கந்தம் வீசுகின்ற, கழிமு டை நாற்றத்தவேனும் - மிக்க தீநாற்றத்தையுடையவாயினும், விளிவு - சாதலை, உன்னி - நினைத்து, வெய்துயிர்ப்பர் - பெரு மூச்சு விடுவா; மெய்ப்பயன் - உடம்பாலாகிய அறப்பயனை, கொண்டார் - (செய்து) கொண்டவர், சுமை - (உடம்பாகிய) சுமையை, போடுதற்கு - போட்டுவிடுதற்கு, சுளியார் - வெறு ப்படையார்.

நெளிந்து—செயவெனெச்சத்திரிபு, இது பொருளால் புண்ணழுகி என்பதற்கு உரியவாம். அழுகி—இதுகாரணமானது, யோசனை—காதம், அது முப்பத்திராயிர முழ அளவுள்ளது. கழி—உரிச்சொல். முடைநாற்றம்—இருபெயரொட்டுப் பண்புத்தொகை. விழலர்—'விருஷல' என்னும் வடமொழித்திரிபு; இழிந்தோர் என்பது கருத்து. வெய்து—வெம்மையுள்ளது. முன்னின்றமகரம் யகரமாகத்திரிந்தது [பத - சூ - க.] இது உயிர்த்தலுக்கு விசேஷணமாதலால் வினையுரியாக்கொள்ளத் தகும். சுமை—சுமக்கப்படுவது, செயப்படுபொருள் விகுதி பெற்றபெயர்; அகரக்கேடு விகாரம். நாற்றத்த—குறிப்புமுற்று. நாற்றம் அத்து அ - பகுதி சாரியை விகுதிகள். (சங)

இகழி னிகழ்ந்தாங் கிறைமக னொன்று
புகழினு மொக்கப் புகழ்ப - இகன்மன்னன்
சீர்வழிப் பட்டதே மன்பதைமற் றென்செய்யு
நீர்வழிப் பட்ட புணை.

44. Contemning if the monarch contemns, and commending to his wish if he commends, the populace follow the varying tastes and humours of their sovereign What can the vessel do when it is borne along by a violent current ?

(இ-ள்.) இறைமகன் - அரசன், இகழின் - ஒன்றை இகழ்வானாயின், இகழ்ந்து - தாமுங்கூட இகழ்ந்து, ஒன்று புகழினும் - ஒன்றைப் புகழினும், ஒக்கப் புகழ்ப - அவனோடுகூடத் தாமும் புகழ்வார்கள்; மன்பதை - மக்கட்கூட்டம், இகல் - வீரத்தையுடைய, மன்னன் - அரசனது, சீர்வழிப்பட்டது - நீரின் வழிப்பட்டது; நீர்வழிப்பட்ட புணை - நீரோட்டத்தைச் சேர்ந்த தெப்பம், மற்றென் செய்யும் - (அதன்வழியே செல்லாது) வேறென்ன செய்யமாட்டும். ஆங்கு - ஏ - அசை.

நீரோட்டத்திலகப்பட்ட தெப்பம் அதன் வழியே போவது போல அரசன் தாக்ஷிணியத்திற் குட்பட்ட ஜனம் அவனிச்சைப்படி செல்லும்; ஆதலின் அவரெல்லாம் அரசனுக்கும் குடிகளுக்கும் நன்மைசெய்பவராகார் என்பது கருத்து.

புகழினும்—இழிவு சிறப்போடு இறந்தது தழீஇய எச்சவும்மை. ஒக்க—செயவெனெச்சம், ஒ - பகுதி, கு - சாரியை, அ - விகுதி, க் - இரட்டியதும் உகரம் கெட்டதும் சந்தி. புகழ்ப - பலர்பால்முற்று. பட்டதே—ஏகாரம் தேற்றம். புனை—புனைக்கப்பட்டது, செயப்படுபொருள் விகுதி புணர்ந்துகெட்டது. ()

செவிசுடச் சென்றுங் கிடித்தறிவு மூட்டி
வெகுளினும் வாய்வெரீஇப் போரா-கவிழ்மதத்த
கைம்மா வயத்ததே பாகுமற் றெத்திறத்து
மம்மாண் பினவே யமைச்சு.

45 The ministers will not fail to approach the king and awake him to the calls of reason, assailing his ears with their counsels undeterred by incurring his displeasure. The lusty elephant, is under the sway of its driver, and the ministers of a king are also of his (i e drivers') nature.

(இ-ள்.) செவி - காதில், சுட - சுடும்படி, சென்று இடித்து - போய் நெருங்கி, அறிவு மூட்டி - அறிவு கொளுத்தி, வெகுளினும் - (அப்போ தரசன அல்லது யானை) கோபித்தாலும், வாய் வெரீஇ - சொல்லற்கஞ்சி, போரா - (அறிவுறுத்தலை) விடாமல், கவிழ்மதத்த - பெருகு மதத்தையுடைய, கைம்மா - துதிக்கையையுடைய யானையை, வயத்ததே - தன் வசத்திலுடையவனே, பாகு - யானைக்காரன்; எத்திறத்தும் - எவ்விதத்திலும், அம்மாண்பினவே - அத்தன்மையுடையவரே, அமைச்சு - மந்திரிகளாவர். ஆங்கு - ஏ - மற்று அசை.

இதில் பாகனுக்கும் அமைச்சர்க்கும் சிலேடை கூறப்பட்டது. அரசர்க்கும் பிறர்க்கும் நன்மைசெய்பவர் இன்னாரெனக் காட்டினார்.

மூட்டி—மூட்டு - பிறவினைப்பகுதி, மூள் - தன்வினைப்பகுதி, டு - பிறவினைவிகுதி, இ-வினையெச்ச விகுதி. வெரீஇ—வெரூஉ-பகுதி, ஓரீஇ என்பதுபோற்கொள்க. 'அமைச்சு' 'பாகு' இவ்விரண்டும் வேந்து என்பதைப்போல் அத்தன்மையுணர்த்தும் அஃறிணையாய்ப் பொருளில் அதையுடையார்க்கு ஆனவை.

அமைச்சு—'அமாத்தியன்' என்னும் வடமொழித் திரிபாகிய 'அமைச்சன்' என்பதிற் பிறந்தது. (௪௫)

கைவரும் வேந்த னமக்கென்று காதலித்த
செவ்வி தெரியா துரையற்க - ஒவ்வொருகால்
எண்மைய னேனு மரியன் பெரிதம்மா
கண்ணில னுள்வெயர்ப்பி னான்.

46. Labouring under the delusion that the king is a friend of yours, do not request of him what you want, on unseasonable occasions. Although occasionally easy of access, he will generally be inaccessible. He is devoid of mercy and broods malignity.

(இ-ள்.) வேந்தன் - அரசன், நமக்குக் கைவருமென்று - நமக்குப் பழகினவனென்று, காதலித்த - விரும்பினவற்றை, செவ்வி தெரியாது - காலமறியாமல், உரையற்க - சொல்லவேண்டாம்; ஒவ்வொருகால் - ஒவ்வொருகாலத்தில், எண்மையனேனும் - (சொல்லிக்கொள்ளுதல் முதலியவற்றிற்கு) எளியனாயிருந்தாலும், (மற்றொருகால்) பெரிது அரியன் - (அப்படி சொல்லிக்கொள்ள) மிகவும் அரியனாயிருப்பன்; கண் இலன் - தாக்ஷிணிய மில்லாதவன்; உள் வியாப்பினான் - உள்ளத்திற் கோபமுடையவன்; ஆதலால். அம்மா - வியப்பிடைச்சொல்.

கை—சுவாதீனத்துக்கு ஆகுபெயர், ஏழாம் வேற்றுமைத் தொகை. என்று—இவ்வகையாக நினைத்து என்று பொருள் படுதலால் வினையெச்சம். காதலித்த—பலவின்பால் வினையாலணையும்பெயர்; காதலி - பகுதி, இது காதல் என்கிற பெயரிலிருந்து பிறந்ததோ, அப்பெயர் இதிற் பிறந்ததோ நிச்சயிக்கக் கூடவில்லை. உரையற்க—எதிர்மறை வியங்கோள் வினைமுற்று, உரை - அல் - க - எனப்பிரிக்க. ஒவ்வொரு—இது ஒருவகை அல்வழித்தழாத்தொடர். கண்—கண்ணோட்டத்திற்கு ஆகுபெயர். வியர்ப்பு—இதன் காரணமாகிய கோபத்தைக் குறிக்கின்றது. (௪௬)

பழமை கடைப்பிடியார் கேண்மையும் பாரார்
கிழமை பிறிதொன்றுங் கொள்ளார் - வெகுளின்மன்
காதன்மை யுண்டே யிறைமாண்டார்க் கேதிலரு
மார்வலரு மில்லை யவர்க்கு.

47. They remember not old acquaintance; they regard not intimacy; they acknowledge not the ties of blood or other connexion; what affection have princes in their rage? they know neither foes nor friends.

(இ-ள்.) பழமை - தொன்றுதொட்டுவந்த நட்பையும், கடைப்பிடியார் - மறவாமலிரார்; கேண்மையும்- (தாங்கொண்ட) சிநேகத்தையும், பாரார் - உட்கொள்ளார்; கிழமை பிறிதுஒன்றும் கொள்ளார்-வேறோ சுதந்திரத்தையு மனத்துக்கொள்ளார்; மன் வெகுளின் - மிகக்கோபித்தால், இறைமாண்டார்க்கு - அரசச்சிறப்புடையார்க்கு, காதன்மையுண்டே - அன்புடைமை யுண்டோ; அவர்க்கு - அவ்வரசர்க்கு, ஏதிலரும் - அயலோரும், ஆர்வலரும் - உறவினரும், இல்லை—

இது முற்பாட்டிற்குறித்த அரசர் கொடுமையை விவரிக்கின்றது.

கடைப்பிடி—கடை பிடி என்னு மிரண்டுஞ் சேர்ந்த கடைப்பிடி என்பது பகுதி; உறுதியாக் கொள்வதென்பது பொருள். கேண்மை — கேள்=உறவு=சிநேகம், அதை யுடையார்க்கு ஆகுபெயர். மை - தன்மையைக்காட்டும் விகுதி. மன் - மிகுதிப் பொருளில்வந்த இடைச்சொல், அசையுமாம். [இடை-சூ-கஙு.] காதன்மை - காதல், மை, கேண்மைபோற்கொள்க; அல்லது பகுதிப்பொருள் விகுதி யென்னவுமாம். உண்டே—ஏ - எதிர் மறையில்வந்த இடைச்சொல். இறை—இறையானது மாண்டார் எனவும் இறையினால் மாண்டார் எனவுங் கொள்ளத்தகும். இறை - பெருமை. மாண்டார்—இது மாண் என்னும் பண்பின் மேற் பிறந்தது. ஆர்வலர்—ஆர்வம் - பகுதி, அம்-குறைந்தது, அல் - சாரியை, அர் - விகுதி. (சஎ)

**மன்னர் புறங்கடை காத்தும் வறிதேயா, மெங்க
லங் காண்டுமென் றெள்ளற்க - பன்னெடுநாள், காத்
தவை யெல்லாங் கடைமுறைபோய்க் கைகொடுத்து,
வேத்தவையின் மிக்குச் செயும்.**

48. Say not contemptuously, "What good have we seen in our fruitless attendance at the kings's gate?" The many long days that you have waited, will at last, in turn afford a hand, to raise ycu to dignity in the Royal Court.

(இ-ள்.) யாம் - நாம், மன்னர் - அரசருடைய, புறங்கடை காத்து - தலைவாயிலில் காத்து (இருந்தது), வறிதே - பயனில்லை, எங்கலம் - யாதுபயனை, காண்டுமென்று - கண்டோமென்று, எள்ளற்க - இகழாதிருக்கவேண்டும்; பல் நெடுநாள் - பலநாள், காத்தவை எல்லாம் - காத்திருந்தவையெல்லாம், கடைமுறை போய் - முடிவிற்சென்று, கைகொடுத்து - உதவி, வேத்தவையில் - இராஜ சபையில், மிக்கு செயும் - மேன்மையைச் செய்யும்.

வறிது—வறுமையென்னும் பண்படியாகப்பிறந்த குறிப்பு முற்று; இருந்தது என்னுந் தோன்றா யெழுவாயைக்கொண்டது. மன்னர் புறங்கடைகாத்து எங்கலம் காண்டும், அதுவறிதே எனக் கூட்டினுமமையும். எள்ளற்க—எள் - பகுதி, அல் - எதிர்மறைப் பண்படி, இரண்டும் சேர்ந்ததோர் பகுதி, க - வியங்கோள் விகுதி. மிக்கு—இங்கு முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; மேன்மைக்கு ஆகுபெயர். பல் நெடு என்பது ஒருபொருட்பன்மொழி. (௪௮)

**உறுதி பயப்ப கடைபோகா வேனு
மிறுவரை காறு முயல்ப - இறுமுயிர்க்கும்
ஆயுண் மருந்தொழுக்க றீதன்று லல்லனபோ
லாவனவு முண்டு சில.**

49. Although you may not be certain of the event, persevere to the last in a good undertaking. It is not wrong to drop the medicine of life into the lips of dying men, for there are some cases, which though seem impossible are possible.

(இ-ள்.) உறுதிபயப்ப - நன்மை பயக்கத்தக்க முயற்சிகள், கடைபோகா'வேனும் - முற்றுப்பெறாவிடினும், இறுவரைகாறு ம் - தம்முடிவு காலமட்டும், முயல்ப - விடாதுமுயலுவர்; இறு ம் உயிர்க்கும் - இறக்குமெனக் காணப்பட்ட உயிர்கட்கும், ஆயு ள் மருந்து - பிழைக்கு மருந்தை, ஒழுக்கல் - வாயில்விடுதல், தீதன்று - குற்றமன்று; (ஏனெனில்), சில - சில கருமங்கள், அல்லனபோல் - ஆகாதனபோற் காணப்பட்டு, ஆவனவு முண் டு - பின்னர் ஆகுவனவு முண்டு. ஆல் - அசை.

பயப்ப — பலவின்பால் வினையாலணையும்பெயர். உறுதி— அடைதல், தொழிற்பெயர்; அடையப்படுவன வற்றிற்கு ஆகு பெயர்; உறு - பகுதி, தி - விகுதி. கடைபோகா—கடைபோ என்பது பகுதி. காறு—அளவுப்பொருளுள்ளதோ ரிடைச் சொல். உம்மை முற்றுப்பொருளது. ஆயுள்மருந்து—ஆயுளை வளர்க்குமருந்து என விரித்துக்கொள்க. ஒழுக்கல்—பிறவினைத் தொழிற்பெயர்; ஒழுகு - தன்வினைப்பகுதி, ஒழுக்கு - பிறவி னைப்பகுதி. (௪௯)

முயலாது வைத்து முயற்றின்மை யாலே
உயலாகா வூழ்த்திறத்த வென்னார் - மயலாயும்
ஊற்றமி றுவிளக்க மூழுண்மை காண்டுமென்
றேற்றுரெ றிகான் முகத்து.

50. The wise will not say, "Though exertion be laid aside the decrees of fate cannot, on that account fail." However ignorant, none will set up a clear light, without any protection in a strong wind, in order to see the reality of destiny.

(இ-ள்.) முயலாது வைத்து - (அறிவுடையோர்) முயற்சி செய்யாம லிருந்துகொண்டு, முயற்று இன்மையாலே - முய ற்சி செய்யாமையினாலே, ஊழ்த்திறத்த - ஊழ்வினையின் பகு திகள், உயலாகா என்னார் - தப்புவன அல்லவென்று நினையார்; மயலாயும் - மயங்கியும், ஊற்றம் இறுவிளக்கம் - மறைவில் லாத தீபத்தை, ஊழுண்மை - ஊழ்வினை யுளதென்பதை, கா

ண்டேமென்று - கண்டிருக்கிறேமென்று, எறி கால்முகத்து - வீசுங் காற்றுக்கெதிரில், ஏற்றார் - ஏற்றார்கள்.

முயலாது — எதிர்மறைவினையெச்சம், வைத்து—அசையெனவுங் கொள்ளலாம். முயற்று—தொழிற்பெயர், முயல் - பகுதி, து - விகுதி, லகர தகரங்கள் றகரமானது சந்தி. உயல்—தொழிற்பெயர், உய் - பகுதி, அல் - விகுதி, தப்பினவைகளுக்கு ஆகுபெயர். ஊற்றம்—ஊன்றுதல் - தொழிற்பெயர், ஊன்று - பகுதி, அம் - விகுதி, மென்றொடர் வன்றொடராயிற்று; விளக்கம்—இரண்டாலடியிற்காட்டியபடிகொள்க. இது வேற்றுப்பொருள்வைப்பு என்னும் அலங்காரம். (ருo)

உலையா முயற்சி களைகணு வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே - உலகறியப்
பான்முளை தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி.

51. There is a power, which, with the aid of unyielding exertion, will destroy the strength of destiny. Of this as is known to all the world, the child, who devoured the germ of fate, and drank the life of Yama, is an evidence.

(இ - ள்.) உலையா - கெடாத, முயற்சி - பிரயத்தினமானது, களைகண் ஆ - ஆதரவாக, ஊழின்வலி - விதியின்வல்லமையை, சிந்தும் - கெடுக்கிற, வன்மையும்-சாமாத்தியமும், உண்டே - உளதே; (அதற்கு), உலகு - உலகத்தார், அறிய - அறியும்படி, பால்முளை - ஊழின்முளையை, தின்று - கெடுத்து, மறலி - யமனுடைய, உயிர் - பிராணனை, குடித்த - உண்ட, கால்முளையே-பிள்ளையாகிய மார்க்கண்டேயனே, கரி - சாட்சி.

பதினாறுவயதில் சாகும்படியான ஏற்பாட்டோடு பிறந்த மார்க்கண்டேயன் சிவனருளைப் பெறத்தக்க தவஞ்செய்து என்றும் பதினாறுவயதாயிருக்குமாறு வரம்பெற்றதனால் 'கான்முளை கரி' என்றார்.

உறுதியான முயற்சியால் விதியையும் வெல்லலாமென்றால் மற்றக்காரியங்களை முயற்சியால் சாதிக்கத் தடையென்ன என்பது கருத்து.

உலையா—ஈறுகெட்ட பெயரெச்சம். ஆ - என்பது ஆக என்பதில் ஈறுதொக்கது, "வினைமுற்றே வினையெச்சமாகலும்" என்கிற சூத்திரவுரையின்படி பகுதியே வினையெச்சப் பொருட்டாய் வந்ததென்றுமாம். கலைகணு — ஆதரவா யிருப்பதனால் எனக் காரணப்பொருட்டாய் வந்த செயவெனெச்சம். கலைக ணுக்கொண் டெனவு முரைக்கலாம்.

சிந்து என்பது தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாகிய முதனிலையாதலால் இங்கு பிறவினைக்குவந்தது; விழும்படி செய்கிற என்பது பொருள். வன்மையும்—இதில் உம்மை பிரகாரி யங்களில் வன்மையைத் தழுவுதலால் எச்சவும்மை. உண்டே— ஏகாரம் நிச்சயத்தைக் காட்டுகின்றது, அசையுமாம்.

பால்—வாழ்நாளின் பாகத்துக்கு வந்தது; அதன் முளையாவது அதன் காரணமாகிய கருமம்; அதனைத்தின்றது அது அழியப்பெற்றிருப்பது; இவையெல்லாம் இலக்கணையால் வந்தவை. உயிர்குடித்த என்பதற்கும் இதுவேவழி.

ஒரு பொருளைத்தின்று நீர் குடித்தல் உலக வியல்பாதலால் பான்முளைதின்று மறலி யுயிர்குடித்த தென்றது அலங்கார சாதுரியம்.

கால் - சந்ததி; முளை—அதற்குக் காரணமாயிருப்பவன்; பிரகரணத்தால் மார்க்கண்டேயன். முளைத்தற்கு இடம் முளை, முதனிலைத் தொழிலாகுபெயர், போலும்—அசை. (௫க)

காலம றிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலம றிந்து விளைவறிந்து - மேலுந்தாஞ்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்
தாள்வினை யாளப் படும்.

52. With a knowledge of the proper time and place, and of the root and fruit of the undertaking, after due deliberation, and with a knowledge of the strength of existing resources, an enterprize may be accomplished.

(இ - ள்.) தாம் - (அரசர்கள்) தாம், காலம்அறிந்து - (பகை மேற்செல்லும்) காலத்தையறிந்து, இடம் அறிந்து - (வெல்லும்) இடத்தையறிந்து, செய் வினையின் - செய்யக்கருதிய கருமத்தினது, மூலம் அறிந்து - காரணத்தையறிந்து, விளைவு அறிந்து - உண்டாம் பயனையறிந்து, மேலும்-பின்னுஞ், சூழ்வன - ஆராயப் படுமவைகளை, சூழ்ந்து-(பெரியோரோடு) ஆராய்ந்தறிந்து, துணைமை - (தமக்கும் பகைவர்க்கும்) துணையாயிருப்பவரது, வலி தெரிந்து - பலத்தையறிந்து, ஆள்வினை - முயற்சியால், ஆளப்படும்-(கருதியவினை) செய்யப்படும். அல்லது, ஆள்வினை- ஆளத்தக்க காரியத்தை, ஆளப்படும் - செய்யவேண்டும்.

இராசன் காலம், இடம், செய்யுங் கருமத்தின் மூலம், பயன், துணைவலி இவைகளைத் தான் ஆராய்வதேயன்றி அறிவுடையாரோடும் ஆலோசித்துப் பின்பு அக்கருமத்தைச் செய்யவேண்டும் என்பது கருத்து. ஆங்கு - அசை.

விளைவு — தொழிலாகுபெயர். சூழ்வன—“செயப்படுபொருளை” என்கிற [பொது-௪௯ சூத்திர] விதியால் செயப்படுபொருள் செய்ததுபோல் வந்த வழுவமைதி; படு விகுதி தொக்கு வந்ததென்பாருமுளர். துணைமை - துணையாந்தன்மை இது உடையானுக்கு ஆகுபெயர்,

ஆள்வினை—இதற்கு முயற்சி என்பது பொருளானால், காரியத்தை ஆளுதற்கு ஏதுவாகிய வினையெனவும், காரியமென்பது பொருளானால், ஆளப்படுகிற வினையெனவுங்கொள்க. இரண்டு பக்ஷத்திலும் இது வினைத்தொகை நிலைத்தொடர்; வினைத்தொகை பெயரெச்சத்தின் விகாரமாதலால் கருவிப்பெயரும் செயப்படுபொருட் பெயருங்கொண்டது. இது எழுவாயானால் ஆளப்படும்—செயப்பாட்டு வினைமுற்று; இரண்டாம் வேற்றுமையானால் ஆளவேண்டும் என வியங்கோள் வினைமுற்று. நன்னூலுரையின்படி தேற்றப்பொருளில் வந்த தொழிற்பெயர். இரண்டாம்பக்ஷத்தில் ஆள - தொழிற்பெயர். ஒரு சொல்லாக்கொள்வதே நலம்; ஆளுதலைச் செய்வதே முக்கியம் என்பது கருத்து.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

53. They whose eyes are steadily fixed on their undertaking, regard not bodily pain; consider not hunger; indulge not their eyes in sleep; heed not the injury of any; look not to the rarity of a seasonable opportunity; and care not the contempt of others.

(இ - ள்.) கருமமே - (தாம்செய்யத் தொடங்கிய) காரியமே, கண் ஆயினார் - கண்ணாகக்கொண்டவர்கள், மெய் - உடம்பினது, வருத்தம் - வருத்தத்தை, பாரார் - பார்க்கமாட்டார்கள்; பசி - பசியை, நோக்கார் - பாரார்; கண்துஞ்சார் - நித்திரைசெய்யார்; எவ்வெவர் தீமையும் - எவர்செய்யும் பொல்லாங்கையும், மேற்கொள்ளார் - ஏற்றுக்கொள்ளார்; செவ்வி - காலத்தினது, அருமையும் - அருமையையும், பாரார் —; அவமதிப்பும்-அவமானத்தையும், கொள்ளார்-லக்ஷியஞ்செய்யார்.

ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்கினோர் சரீர வருத்த முதலியவற்றைப் பாராட்டலாகாது என்பது கருத்து.

கண்துஞ்சார்—இணைவழுவமைதி [பொது - சூ - உ௬] எழுவாய்த்தொடர். எவ்வெவர்—எவர் எவர் என இரட்டித்ததில் நிலைமொழிவிகாரப்பட்டது. ["உயிரீறு" சூ-௨௪௯-ல்] நெறி என்றதனால் விதிஅமைக்க; எப்படிப்பட்ட எல்லாரும் என்பது பொருள்.

கருமமேகண்ணாயினார் என்பதற்கு, காரியத்திலேயே கண்வைத்தவர் எனவும் உரைக்கலாம். தீமையும் என்பதிலே உம்மை இழிவுசிறப்புப் பொருளோடு இறந்ததுதழீஇய எச்சப்பொருளையுந் தரும். அருமையும், அவமதிப்பும், என்பவைகளினும்மையு மிப்படியே. தீமையை மேற்கொள்ளாமையாவது, பிறர் செய்யு மிடையூறுகளுக்கு எதிர்செய்யத் தலைப்படாமலிருப்பது. கருமமே—ஏகாரம் பிரிநிலை. (௫௩)

சிறிய பகையெனினு மோம்புத றேற்றார்
பெரிதும் பிழைபா டுடையார் - நிறைகயத்
தாழ்நீர் மடுவிற் றவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது.

54. Those, who perceive not that they ought to beware of even the weakest foe, are greatly in error : if a frog only leap into the deep water of a large pool, it is impossible to see even the shadow of an elephant.

(இ-ள்.) பகை - பகைவர்கள், சிறிய எனினும் - அற்பரானாலும், ஓம்புதல் - (அவரினின்றும் தம்மைக்) காத்தலை, தேற்றார் - அறியாதார், பிழைபாடு - குற்றத்தை, பெரிதும் - மிகுதியும், உடையார் - உடையராவர்; நிறை - நிறைந்த, கயத்தாழ் - மிகவும் ஆழமாகிய, நீர்மடுவில் - நீரையுடைய மடுவிலே, தவளை - தவளையானது, குதிப்பினும் - குதித்தாலும், யானை - யானையானது, நிழலை - தனது நிழலை, காண்பரிது - காண்பதரிது.

பகைவர் அற்பரென்று அலக்ஷியஞ்செய்கிற அரசர் பின்பு அவர்களால் மிகவுந் துன்பமடைவார்கள் என்பது கருத்து.

பகை — பால்பகா அஃறிணைப் பெயர். பகைவர்க்கு ஆகுபெயர். தேற்றார் — இது பிறவினை, தேறு - தன்வினைப் பகுதி, தன்னைத்தேறச் செய்வார் எனப்பொருள் கொள்ளவேண்டும். பிழைபாடு — பிழைபடுதல், முதனீண்ட முதனிலைத் தொழிற்பெயர். பாடு—தொழிற்பெயர் விகுதியாக்கொண்டு பிழைத்தலை எனவு முரைக்கலாம். காண்பு—தொழிற்பெயர், பு-விகுதி.

ஆழத்தை உணர்த்தும் கயம் என்னுஞ்சொல், தாழ் என்பதோடு ஒருபொருட்பன்மொழியாய் மிகத்தாழ்ந்த என்றுரைக்கப்பட்டது. கயம் என்பதை அகழிக்குவைத்து, மடு என்பதை ஆழ்ந்த தண்ணீருள்ள விடத்துக்குவைத்து, நிறைந்த கயத்திலே ஆழ்ந்த நீரையுடைய மடுவின்கண் எனப்பொருள் கூறலுமாம். (௫௫)

புறப்பகை கோடியின் மிக்குறினு மஞ்சார்
அகப்பகை யொன்றஞ்சிக் காப்ப - அனைத்துலகும்

சொல்லொன்றின் யாப்பார் பரிந்தோம்பிக் காப்பவே
பல்காலுங் காமப் பகை.

55. Those, who fear not the attack of more than ten millions of avowed enemies, should beware of a single secret foe: the *Sages*, who bind the whole world by a single word, will guard, with unremitting caution against (the enemy) lust.

(இ - ள்.) அனைத்து உலகும் - எல்லாவுலகங்களையும், சொல் ஒன்றின் - ஒருசொல்லால், யாப்பார் - தமது வசப்படுத்தத் தக்க முனிவர், பல்காலும் - பலதரமும், காமப்பகை - காமமாகிய உட்பகையை, பரிந்து - வருந்தி, ஓம்பிக்காப்ப - மிகப் பாதுகாத்துக் கொள்வார்; (அதுபோல, அறிவுடையரசர்கள்) புறப்பகை - வெளிப்பகை, கோடியின் - கோடித் தொகையின், மிக்குறினும் - அதிகமாக இருந்தாலும், அஞ்சார் - பயப்படாதவராகி, அகப்பகை - உட்பகையாகிய மந்திரி முதலியோரில், ஒன்றஞ்சி - ஒருவனை அஞ்சி, காப்ப - பாதுகாப்பர்.

அரசர் புறப்பகையினும் உட்பகையை முன்னே காத்துக் கொள்ளவேண்டும் என்பது கருத்து.

சொல் ஒன்றின், பகையொன்று, அனைத்துலகு, காமப்பகை, இவை பண்புத்தொகை; ஐந்தனுருபு ஏதுப்பொருளில் வந்தது.

யாப்பார் — யா - பகுதி, ஆர் விகுதி, ப் - இடைநிலை, தன்மையைக்காட்டும். ப் - சந்தி. பல்காலும்—[உயிர்-௬-௨0] விதியால் அகரங்கெட்டு லகர மியல்பாயிற்று. உலகும்—உம்மை முற்றுக்காகவந்தது. கோடியின் — ஐந்தனுருபு எல்லைப்பொருளில் வந்தது. மிக்கு—வினையெச்சம், மிகு - பகுதி, உ - விகுதி, பகுதியில் ககரம் இரட்டித்து இறந்தகாலங் காட்டியது. குற்றிய லுகரமாதலின் பகுதி உகரங்கெட்டதும் விகுதியுகரம் ககரத்தின் மேலேறினதும் சந்தி. உறின்—உறு-பகுதி, முற்றிய லுகரமாயினும் "முற்றுமற்றொரோவழி" என்பதனால் உகரங் கெட்டது, இன் - எதிர்கால வினையெச்சவிகுதி, உம் - சிறப்பில் வந்தது.

... U. V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.


புறத்திலுள்ளபகை புறப்பகை, அகத்திலுள்ளபகை அகப்பகை, ஏழனுருபும் பயனுமுடன் தொக்கதொகை. அஞ்சு என்கிற வினை சேருமிடத்து அதன் ஏதுப்பெயரோடு இரண்டாம் வேற்றுமை வருவது தமிழில் பெரும்பான்மை செய்யுள் வழக்கு; ஐந்தனுருபும் வரும். நான்காம்வேற்றுமை உலகவழக்கு. டரிந்து ஓம்பி—ஒருபொருட்பன்மொழி. (ருரு)

புறநட் டகம்வேர்ப்பார் நச்சுப் பகைமை
வெளியிட்டு வேறுதல் வேண்டும் - கழிபெரும்
கண்ணோட்டஞ் செய்யேல் கருவியிட் டாற்றுவார்
புண்வைத்து மூடார் பொதிந்து.

56. Expose the hollowness of those who harbor malignity in their hearts under the mask of friendship, and renounce them; and treat them not with too much delicacy. Men will not keep their sores covered up but will try to heal them by incision.

(இ - ள்.) புறம் நட்டு - புறத்திலே சிநேகித்து, அகம் - உள்ளே, வேர்ப்பார் - கோபங்கொண்டிருப்பவருடைய, நச்சு-நஞ்சையொத்த, பகைமை - பகையை, வெளியிட்டு - வெளிப்படுத்தி, வேறுதல்வேண்டும் - வேறுபடவேண்டும்; கழிபெரு - மிகுந்த, கண்ணோட்டம் - தாட்சிணியம், செய்யேல் - செய்யாதே; புண் - புண்ணை, கருவியிட்டு - கத்தியால் (அறுத்து), ஆற்றுவார் - ஆற்றுவார்களேயல்லது பொதிந்து - மறைத்து, வைத்து மூடார் - மூடிவையார்கள்.

அரசர் உட்பகையையுடையாரை அறிந்தமாத்திரத்தில் நீக்க வேண்டும் என்பது கருத்து.

நட்டு—நள் - பகுதி, ட் - இடைநிலை, உ - வினையெச்சவிகுதி, பகுதி ளகரம் டகரமானது - சந்தி

நச்சுப்பகைமை — உவமத்தொகை; நஞ்சு - மென்றொடர் வன்றொடராயிற்று. வேண்டும் என்பது, படும் என்பதைப் போல் கொள்ளத்தக்கது. வேர்ப்பார்—வியர்ப்பார் என்பதன் மரூஉ. செய்யேல்—எதிர்மறை ஏவலொருமை.

கண்ணோட்டம்—ஒருவர்மேல் கண்ஓடுவதாலுண்டாகும் எண்ணம், ஆகுபெயர். கண் என்றது உட்கண், ஆதலால் மனம். கருவியிட்டு—இட்டு - மூன்றும்வேற்றுமைச் சொல்லுருபுவைத்து மூடார் என்பதை விகுதி பிரித்தல் என்கிற நியாயத்தால் மூடிவையார் என மாற்றிக்கொள்க. இப்பாட்டு வேற்றுப்பொருள் வைப்பணி. (௫௬)

நட்பிடைக் குய்யம்வைத் தெய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத் - திட்பமாம்
நாளுலந்த தன்றே நடுவ னடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து.

57. For those, who meeting friendship with treachery, secretly devise evil and array themselves as enemies, surely the *appointed* day has expired; and Yama must be lying carelessly forgetful of their iniquity.

(இ-ள்.) நட்பிடை - சிநேகனிடத்தில், குய்யம்வைத்து-வஞ்சித்தலைக்கருதி, எய்யாவினை - பொருந்தாத செயலை, சூழ்ந்து - யோசித்து, வட்கார்திறத்தர்ஆய் - பகைவரது தன்மையுடையவர்களாய், நின்றார்க்கு - இருந்தவர்க்கு, திட்பம்ஆம் - வலியுடையதாகிய, நாள் - ஆயுசு, உலந்தது அன்றே - முடிந்துபோனதன்றோ; (ஆகில் ஏன் சாவில்லை என்றால்) நடுவன் - யமன், நடுவின்மை - (இப்படிச்செய்வதனால் தன்னிடத்து) நடுநிலைமையில்லாமற் போவதை, மறந்து - மறந்துவிட்டு, வாளா- சும்மா, கிடப்பன் - இருப்பான்.

இடை - ஏழனுருபு; குய்யம்—வடசொற்றிரிபு. வட்கார் — வட்கு - முதனிலைத்தொழிற்பெயர், வட்குதல் - கெடுதல், அதனை யுடையவர் எனப்பொருள்கொண்டு பகைவர் என்னலாம். திட்பம்—பண்புப்பெயர்.

உலந்ததன்றே — ஏகாரம் பிரசித்தத்தைக் காட்டுகின்றது, ஆகவே வஞ்சனையாகச் சினேகிப்பவர்க்கு உடனே ஆயுசு அழியும் ஆகில் ஏன்சாகவில்லை என்றால் யமன்மறந்து சும்மாவிருக்கிறான் போலும் எனத் தற்குறிப்பேற்றமாக் கருத்துக்கொளல்

வேண்டும். நடுவின்மை மறந்து என்றால், நாளுலந்தவர்களைக் கொண்டுபோவது தன் கடமையாயிருக்க அப்படிச்செய்யாமையால் தனக்கு நடுநிலைமை அழிந்ததென்றதை நினையாமல் என்று கருத்து.

நடு—நடுநிலைமைக்கு ஆகுபெயர். அதனை யுடையவன் நடுவன்; நடுவிலிருப்பவன் எனவுமாம்; பாவபுண்ணியங்களுக்குப் பொதுவாய்நின்று தண்டிப்பவன் என்பது பொருள். இக்கருத்தைப்பற்றி 'சமவர்த்தி' என்று ஆரியத்திற் பெயருண்டு.

வாளா—இதனைச்சிலர் இடைச்சொல் என்கிறார்கள். வாளாமை என்றுங் காணப்படுகிறதனால் எதிர்மறைக்கே நியதியான ஒரு பண்புச்சொல் எனல்வேண்டும்; வினையுரியாவரும். (௫௭)

மனத்த கறுப்பெனின் நல்ல செயினும்
அனைத்தெவையுந் தீயவே யாகும் - எனைத்துணையும்
தீயவே செய்யினு நல்லவாகக் காண்பவே
மாசின் மனத்தி னவர்.

58 When men are prejudiced against another even good deeds will be received as evil but those of spotless minds will receive even evils as good.

(இ-ள்.) கறுப்பு - (ஒருவன்மேல்) கோபம், மனத்த எனின் - தம்மனத்தி லிருக்குமாயின், நல்ல - நல்ல கருமங்களை, செயினும் - (அவன்) செய்தாலும், அனைத்து எவையும் - அவையெல்லாம், தீயவே ஆகும் - பொல்லாத கருமங்களாகவே நினைக்கப்படும்; மாசு இல் - (ஒருவன்மேல்) களங்கமில்லாத, மனத்தினவர் - மனத்தையுடையவர், எனைத்துணையும் - (அவன்) எவ்வளவுமிகுதியும், தீயவே - தீயவற்றையே, செய்யினும் - செய்தாலும், நல்லவா - (அவைகளை) நற்கருமங்களாக, காண்ப - நினைப்பார்கள்.

ஒருவன்மேல் வெறுப்புளதாயின் அவன்செய்யும் நன்மையுந் தீமையாம்; விருப்புளதாயின் அவன்செய்யுந் தீமையும் நன்மையாம். கறுப்பு, குற்றம் எனக்கொண்டு ஒருவன் கபடம்

வஞ்சனைமுதலான குற்றங்களை மனதிலுடையவனானால் அவனுக்குப் பிறர்செய்யுநன்மைகள் தீமையாகவே தோன்றும். மனதிற் குற்றமில்லாதவருக்குப் பிறர்செய்யுந் தீமையும் நல்லதாத் தோன்றும் எனவுங் கருத்துக்கொள்ளலாம். இரண்டுவிதத்திலும் கறுப்பு ஆகுபெயர். ஆகையால் வெறுப்பு விருப்பில்லாமல் ஒன்றை யாராயவேண்டும் என்பது கருத்து.

மனத்த—மனத்தது என்பது ஈறு தொக்கது என்னலாம்; காரணம் பலவாதலால் கோபங்களும் பல எனக்கொண்டு பன்மைவந்த தென்னவுமாம். நல்ல, தீய,—இரண்டும் பண்படியாப்பிறந்த பலவின்பாற்பெயர்கள்.

அனைத்தெவை—இருபெயரொட்டுப் பண்புத்தொகை, இதில் உம்மை முற்றும்மை. மற்ற உம்மைகள் சிறப்பும்மைகள். மாசு இல்—எழுவாய்த்தொடர். இல் மனம்—பண்புத்தொகை, இதன்மேல் அத்து, இன், அ, இம்மூன்றும் சாரியை; அர்-பலர்பால் விகுதி, வகரம்-உடம்படுமெய்; பகுதி யீற்றுமகரமும், அத்தின் அகர உகரங்களும் கெட்டது சந்தி; உடம்படுமெய் சந்தி அன்றெனக்கொள்ளுவர் முன்னோர்.

எனை—என் என்பதோரிடைச்சொல் ஐகாரச்சாரியை பெற்றது; எத்தனை என்பதின் இடைக்குறை என்பாருமுளர். காண்ப—பலர்பால் வினைமுற்று; ப-விகுதி. எடுத்துக்காட்டுவமையணி. இம்மாதிரி வருவனவெல்லாம் இவ்வணியேயாம். (௫௮)

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே - அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிச்
சிங்கி குளிர்ந்துங் கொலும். [பச்

59. The words of the kind-hearted, whether sweet or not, will seem sweet; but even the sweet words of the unkind will be bitter-(வங்காரம்) the borax, although hot will cure disease, but poison, though cooling, will kill.

(இ-ள்.) இனியவர் - அன்புடையார், என்சொலினும் - எப்படிப்பட்டபேச்சைச், சொல்லினும், இன்சொல்லே - பிரியமான சொல்லேயாம்; இன்னார் - அன்பில்லாரது, கனியும் மொழியும் - இனிக்கின்ற சொல்லும், கடுவே - விடமேயாம், [பிரியமல்லாததேயாம்]; அனல்கொளுந்தும் - தீப்போற்சுடுகின்ற, வெங்காரம் - வெங்காரமானது, வெய்து எனினும் - வெப்பமுள்ளதாயினும், நோய்தீர்க்கும் - பிணியை நீக்கும்; சிங்கி - விடமானது, மெய்பொடிப்ப - உடல்புளகிக்க, குளிர்ந்தும் - குளிர்ந்திருந்தும், கொலும் - கொல்லும்.

நமக்குப் பிரியமானவர்கள் பேச்சு நல்லதாகவும், அப்பிரியமானவர்கள்பேச்சு தீயதாகவும் தோன்றும், ஆனாலும் அதின்பொருளை யோசித்துக் கொள்ளவேண்டும் என்பது கருத்து.

இனியவர்—இனிமைப்பண்பு மை கெடநின்ற இனி - பகுதி, அ - சாரியை, அ - விகுதி, யகர வகரங்கள் - உடம்படுமெய்கள். என்—இடைக் குறைந்துநின்ற எவன் என்னும் குறிப்புமுற்றுலணைந்தபெயர். இனிமையாகியசொல் - இன்சொல், பண்புத்தொகை. கனியும்—செய்யுமென் வாய்ப்பாட்டுப் பெயரெச்சம். இன்னார்—இன்னாமையில் இன்னா - பகுதி, ர - பலர்பால் விகுதி.

அனல்கொளுந்தும்—உவமத்தொகை. கொளுந்து என்னும் பகுதி பிறவினையில் கொளுத்து என்றுவரும். கொளுத்து என்பது கொள் என்னும் பகுதிமேல்வந்த பிறவினைப்பகுதி என்பாருமுளர். உறைப்புங் கடுமையுமான ஓர் சுவைக்குணத்தை யுணர்த்தும் காரம் என்னுஞ்சொல் அதனையுடையதற்கு ஆகுபெயர் அது வெம்மை என்பதோடு பண்புத்தொகையாகிய ஒருவகைப் பொருளுக்குப் பேராயிற்று; அதலால் அடையடுத்தவாகுபெயர். கொலும்—இதில் லகரம் தொகுதல்.

தீர்க்கும்—தீர் - என்னும் பகுதி தன்வினை பிறவினைகட்குப் பொது. "இயற்கைப்பொருளை யிற்றெனக்கிளத்தல்" என்பதினல் தீர்க்கும், கொலும் என்பவை வர்தனவேயன்றிக்

காலங்காட்டுவனவல்ல. இவ்வாறு. பிறவிடத்தும் அறிந்து கொள்க.

சிக்கி - சிக்கு - பகுதி, (அழிவு) அதனைச்செய்வது என்னும் பொருளில் இகரவிகுதிவாந்தது. நோதல் - நோம் - பகுதி, நீண்டது, துன்பம்; ... பொருளில்வந்த விகுதி ... வேண்டும். உம்மைகள் சிறப்பு. (ருக)

பொய்குறளை வன்சொற் பயனிலவென் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது - மெய்யில்
புலனைந்துங் காத்து மனமாசு தீர்த்தல்
நலமன்றே நல்லா றெனல்.

60 What is described as virtue consists in avoiding falsehood slandering harshness of expression, and emptiness of speech in guarding the organs of sense from sinning and in removing all impurities from the heart

(இ - ள்.) பொய்என்று - பொய்யும், குறளைஎன்று - புறங்கூறலும், வன்சொல்என்று - கடுமையானசொல்லும், பயன்இலஎன்று - பயனில்லாத சொற்களும், இந்நான்கும் - ஆகிய இந்த நான்கு குற்றங்களும், சொல்லின் - தன் சொல்லில் எய்தாமை - பொருந்தாமலும், மெய்யில் - உடம்பில், புலனைந்தும் - பொறிகளைந்தும், வழுக்காது - (செல்லக்கூடாதநெறியில்) தப்பிச்செல்லாமலும், காத்து - பாதுகாத்து, மனம் மாசு - (வெகுளிமுதலிய) மனக்குற்றங்களை, அகற்றும் - நீக்கும், நலம் அன்றே - நன்மையல்லவா, நல்லாறு எனல் - (உயிர்க்குறுதிபயக்கும் நல்லநெறியெனச் சொல்லப்படுவது.

நல்லொழுக்கமாவது மனோவாக்குக் காயங்களிற் குற்றமுண்டாகாமல் நடப்பதாம் என்பது கருத்து.

என்று என்னு மிடைச்சொல் பொய்முதலிய வற்றோடுங்கூடும் [இடை - சூ கூ,கo], விதியால் இக்குறதொகைபெற்றது.

குரலோ என்பது அற்பத்தின்பெயராய் அற்பகுணத்துக்கு ஆயிற்று. குரலோ - கோட்சொல்லுமாம். இல — இன்மையெ ன்னும் பண்படியாய்ப்பிறந்த பலவின்பாற்பெயர்.

எய்தாமை—எய்து - பகுதி, ஆ-எதிர்மறைவிகுதி, மை-வினை யெச்சவிகுதி, இதுவும் மல் மே து றி என்பவைகளும் எதிர் மறை வினையெச்சத்துக்கே வரும். வழுக்காது — எய்தாமை போல் கொள்க. இவ்விரண்டும் வினைச்செவ்வெண்.

அகற்றும் — பிறவினைப்பெயரெச்சம்; அகல் - தன்வினைப் பகுதி, று-பிறவினைவிகுதி. எனல் - செய்வினைத்தொழிற்பெ யர், செயப்பாட்டுவினைத் தொழிற் பெயராக்கொள்க (௬0)

நல்லா றொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் - பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னுவாம்
பைங்கட் புனத்தபைங் கூழ்.

61. Those, who have persistently stood in the path of virtue, though be in poverty, will not condescend to do evil: the spotted red-eyed tiger, though ravenous with hunger, will not feed on the growing crop in the green meadow.

(இ - ள்.) நல்ஆறு - நல்லநெறியில், ஒழுக்கின்றலை - ஒழுகு தலில், நின்றார் - நின்றவர்கள், நல்கூர்ந்தும் - வறுமையடை ந்தும், அல்லனசெய்தற்கு - பாவஞ்செய்தற்கு, ஒருப்படார்- உடன்படார், பல்பொறிய - பலபுள்ளிகளுள்ள, செங்கண் - சிவந்தகண்களையுடைய, புலியேறு - புலிப்போத்துகள், அற ப்பசித்தும் - மிகப்பசித்தும், பைங் கண் - பசிய இடமகன்ற, புனத்த - புனத்திலுள்ள, பைங்கூழ் - பயிர்களை, தின்னு - உண்ணு. ஆம்-அசை.

நல்லொழுக்கமுடையோர் வறுமையடையினும் பாவத்தொ ழிலைச்செய்யக் கருதார் என்பது கருத்து.

நல்லாறு—"நெடிலோடுயிர்த்தொடர்" என்கிற சூத்திரத்தில் "பிற" என்றதனால் ஆறு என்பதில் றகர மிரட்டாது நின்றது; ஏழாம் வேற்றுமைத்தொகை.

ஒழுக்கின்தலை—இன் - சாரியை, தலை - ஏழனுருபு, [பெயர்-கு - சூ.] ஒழுக்கு—முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

ஒருப்படார்.—ஒருமைப்படு என்பதில் மை கெட்டது, ஒத்துக்கொள்ளுதல் பொருள்,

பல்பொறிய—குறிப்புப்பெயரெச்சம், பல்பொறி - பண்புத்தொகை நிலைத்தொடர். இதன்மேல் அ - பெயரெச்சவிகுதி, ய் - உடம்படுமெய், புலியேறென்பதைக் கொள்ளும்.

புனத்த—இதுவும் குறிப்புப் பெயரெச்சம். புலி ஏறு—இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பால்பகா வஃறிணைப்பெயர்.

பைங்கண், பைங்கூழ்—பசுமையில் ஈறுபோய் அடியகரம் ஐ ஆய் "இனை பவும்" என்றதனால் சு என்பதுங்கெட்டு இனம் மிகுந்து வந்தன.

அல்லன—நல்லாறல்லன எனக்கொண்டு பாவத்தை உணர்த்தியது. புனத்துக்குப் பசுமையாவது நீர்வளப்பம். (௬௧)

குலம்விற்றுக் கொள்ளும் வெறுக்கையும் வாய்மை
நலம்விற்றுக் கொள்ளுந் திருவும் - தவம்விற்றூங்
கூனோம்பு வாழ்வு முரிமைவிற் றுண்பதூஉம்
தானோம்பிக் காத்த றலை.

62. The riches got by selling the privileges of descent, the prosperity acquired by selling the benefits of truth, the ease that pampers the body at the expense of religious duties, and the subsistence derived form selling the ties of friendship and kindred, to beware of all these is chief excellence.

(இ-ள்.) குலம்விற்று - குலத்தைவிற்று, கொள்ளும் - அடையும், வெறுக்கையும் - பொருளும், வாய்மை - உண்மையாகிய, நலம்விற்று - நலத்தைவிற்று, கொள்ளும் - அடையும், திருவும்-செல்வமும், தவம்விற்று தவத்தைவிற்று, ஊன் ஓம்பும் - உடம்பைப் பாதுகாக்கும், வாழ்வும் - வாழ்க்கையும், உரிமைவிற்று - சுதந்திரத்தைவிற்று, உண்பதும் - புசிப்பதும், ஓம்பிக் காத்தல் - (தம்மையடையாமல்) மிகுதியும் பாதுகாத்தலே, தலை - முதன்மையாகிய அறமாம்.

குலம்விற்றலாவது தாழ்ந்தகுலத்தாரோடு சம்பந்தஞ்செய்தல்; சத்தியம் விற்றலாவது பொய்சொல்லல்; தவம்விற்றலாவது பிராக்காசத் தவஞ்செய்தல்; உரிமைவிற்றலாவது பிறர்க்கு அடிமைப்படல். இவைகளால் பொருள்முதலியவற்றைப் பெற்றுவாழ்தல் ஈனமென்றபடி. அளபெடை இன்னிசைக்கு வந்தது.

ஆங்கு — அசை. ஊன் — அதனுலாகிய உடம்புக்கு ஆகுபெயர். ஓம்பிக்காத்தல் — ஒருபொருட் பன்மொழி. தலை— தலைமையில் மை கெட்டது. (சுஉ)

* * * * * * (சுங)

பெற்ற சிறுகப் பெறுத பெரிதுள்ளும்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா - முற்றும்
வரவர வாய்மடுத்து வல்விராய் மாய
எரிதழன் மாயா திரா.

64. How impossible is it for mortals to prosper, who making little of what they have got, think much of what they have not, the wild fire which devours every thing as it comes, cannot but die away, as the fuel is consumed.

(இ-ள்.) பெற்ற - அடைந்தபொருள்களை, சிறுக - குறைவாகவும், பெறுத - அடையாத பொருள்களை, பெரிது உள்ளும் - அதிகமாகவு நினைக்கிற, சிறுஉயிர்க்கு - அற்பவிவேகமுள்ள உயிர்கட்கு, ஆக்கம் - செல்வம், [அதனுலுண்டாகும் இன்பம்], அரிது - இல்லை; வரவர - வருந்தோறும், முற்றும் - முழுதும், வாய் மடுத்து - உண்டு, வல்விராய் - வலியவிறகு, மாய - மாண்டு போகையில், எரி தழல் - எரிகின்ற தீயானது, மாயாது இரா - கெடாமலிராது. அம்மா - வியப்பு.

தீயானது தன்னிடத்தில் விறகு வருந்தோறும் அதையெல்லாம் எரித்து, அவ்விறகுமாண்டால் தானும் மாள்வதுபோல, பொருள் கிடைக்கக் கிடைக்க அவற்றையெல்லாம் அற்பமாக நினைத்து அதிருப்திப்படுகிறவனுக்குச் செல்வத்தால் வரும் சுகம் நாசமாகும் என்பது கருத்து.

பெற்ற, பெறாத, — இரண்டும் வினையாலணையும் பெயர். சிறுக—செயவென்வாய்பாட்டு வினையெச்சம், இங்கு உள்ளும் என்னும் வினைக்கு உரியாய் நின்றது; சிறுகு - பகுதி, அ-விகுதி. பெரிது—பண்படியாப்பிறந்த பெயர்; இதுவும் மேற்படிவினையுரி. சிற்றுயிர்க்கு—உயிர்க்குச் சிறுமையாவது விவேகமின்மை. அரிது — இல்லையென்னுங் கருத்துள்ளது. வாவா — வினையின் தொடர்ச்சியைக் காட்டவந்த அடுக்கு. இரா—து என்னும் ஈறு தொக்கது. (௬௪)

தத்த நிலைக்குங் குடிமைக்குந் தப்பாமே
ஒத்த கடப்பாட்டிற் றாளூன்றி - எய்த்தும்
அறங்கடையிற் செல்லார் பிறன்பொருளும் வெஃகார்
புறங்கடைய தாகும் பொருள்.

65. Riches will flow to the very gates of those who do not fail of what is due to their respective station and lineage, who exert themselves in their proper calling, and who though in difficulties, neither transgress the bounds of virtue, nor covet their neighbour's wealth.

(இ-ள்.) தத்தம் - தமதுதமது, நிலைக்கும்-நிலைமைக்கும், குடிமைக்கும் - குடிப்பிறப்புக்கும், தப்பாமே - தப்பாமல், ஒத்த கடப்பாட்டில் - ஒத்தமுறைமையில், தாள் ஊன்றி - முயற்சி செய்து, எய்த்தும் - வருந்தியும், அறம்கடையில் - பாவத்தில், செல்லார் - செல்லாராயும், பிறன் - மற்றொருவனுடைய, பொருளும் - பொருளையும், வெஃகார் - இச்சியாதவர்களாயு மிருக்கிறவர்களுடைய, புறங்கடையது ஆகும்-தலைவாயிலிலுள்ளதாகும், பொருள் - திரவியம்.

துன்பம்வந்தபோதும் தங்கள் நிலையும் குடிமையும் கெடாமலும் தீநெறியிற்சென்று பிறர்பொருளை விரும்பாமலும் முயற்சி செய்வோர்க்குப் பொருள் தானேசேரும் என்பது கருத்து.

தத்தம்—தாம்தாம் என்பது தனிமையைக் காட்டும் அடுக்காய் ஆறும் வேற்றுமையைநோக்கி [உருபு - ௬ - அ] விதியால் முதல் குறுகி [மெய்-௬-௧௬] விதியால் மகரங்கெட்டு [உயிர் - ௬-௧௫] விதியினல் வலிமிகுந்து வந்தது.

MAHAMAHOPADHYAYA Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY TIRUVANMIYUR, MADRAS



கடப்பாடு—கடத்தல் நடத்தலாகையால், கட என்கிற பகுதி பாடு என்கிற தொழிற்பெயர்விகுதி கொண்ட தென்னலாம்; நடக்கை என்பது பொருள்; அல்லது கடமைப்பாடு என்பதில் மை கெட்டு முதனீண்டு வந்தமுதனிலைத்தொழிற்பெய ரென்னலாம். தாள் ஊன்றி என்பதற்கு காலை அழுந்தவைத்து எனவும் பொருள் கூறலாம்; அது இலக்கணையால் முயற்சியை யுணாத்தும். அறத்தின் கடை — தருமத்திற்குப் புறம்பானது=பாவம்; அறக்கடை அறங்கடையென மெலிந்தது. செல்லார் என்னும்பெயர் வெஃகாரென்கிற பெயரொடு பண்புத்தொகையாச் சேரும். அல்லது முற்றெச்சமான தெனவுங் கொள்ளலாம். முதல் உம்மை யிரண்டும் எண்ணுப்பொருளன. எய்த்தும் என்பதில் உம்மை - இழிவுசிறப்பு. புறங்கடையது,—குறிப்பு முற்றுலணையும்பெயா; இடமடியாகப்பிறந்த பெயருமாம். இது ஆகும் என்பதற்கு உரியாகின்றது. இதனை வடநூலார் விதேய விசேஷணம் என்பர். பிறன்பொருளும் என்பதில் உம்மை, அறங்கடையிற் செல்லாமை யாகிய எச்சப்பொருளைத்தரும். இதுபெயரொடு சேர்ந்திருந்தாலும் செல்லாமை வெஃகாமைகளையே குறிக்கும் என அறிக. (சுரு)

பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்
குலமகளே யனையோர் செல்வம் - கலனழிந்த
கைமையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன்படுவ தில்.

66 The wealth of the eminently generous is like a prostitute; the wealth of the middling class is like a chaste *married* woman; but the wealth of misers, like the charms of unadorned widows, produces no benefit.

(இ-ள்.) தலையாயார் - மேலோருடைய, செல்வம் - செல்வமானவை, பொதுமகளேபோல்வ - வேசியரை ஒத்திருக்கின்றன; ஏனையோர் - இடையாயார், செல்வம் - செல்வமானவை, குலமகளே (போல்ப) - குலப்பெண்களை ஒத்திருக்கின்றன; கடையாயார் - கடைப்பட்டோருடைய, செல்வம் - செல்வமானவை, கலன் அழிந்த - மங்கலநாணிழந்த, கைமையார் - கைம்

பெண்களுடைய, பெண்மைநலம்போல் - பெண்ணினின்பம் போல, பயன்படுவதில் - (ஒருவர்க்கும்) பயன்படுவன அல்ல.

தலையாயார்செல்வம் யாவருக்கும் பயன்படும்; இடையாயார் செல்வம் உடையவருக்கே பயன்படும்; கடையாயார் செல்வம் எவர்க்கும் பயன்படமாட்டா என்பது கருத்து.

பொதுமகள் — பொதுமையானமகள், பண்புத்தொகை. போல்வ—இடைச்சொல் அடியாகப்பிறந்த பலவின்பால் முற்று; போல் - வ் - அ — பகுதி - இடைநிலை - விகுதிகள். அன் சாரியைவரின் போல்வன ஆம்; இதை குலமகளே என்பதோடும் கூட்டிக்கொள்க; உருவகமாக் கொண்டால் முன்பினிருப்பவைகளின் வேறுவதனால் குற்றமாம். ஆயார — யகரம் இறந்தகால விடைநிலையாக் கொள்ளத்தக்கது. குலமகள்— குலத்துக்கு உரியமகள் அல்லது நற்குலத்தை யுடையமகள். தலை கடை களைத் தனியெடுத்ததனால் ஏனையோரென்பது இடையாயாருக்கு ஆயிற்று. கலன் என்பது முக்கியத்தைப் பற்றி மங்கல சூத்திரத்திற்கு வந்தது. பயன்படுவது — தொழிற்பெயர், இரண்டாம் வேற்றுமைத்தொகை. இல்லையென்பது உடைத்தாயிராமையை யுணர்த்தின் செயப்படுபொருள் குன்றாததாகவும், வெறு மின்மையை யுணர்த்தின் செயப்படு பொருள் குன்றியதாகவு மிருப்பதால், இங்கு பயன்படுவதை யுடைத்தாய் இல்லையென உரைத்துக்கொள்க. (௬௬)

வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல - கொன்னே
அருளில னன்பிலன் கண்ணறைய னென்று
பலரா லிகழப் படான்.

67. The poverty of a benevolent-minded man is far better than the opulence of one devoid of it; for the former cannot be reproached as being destitute of mercy, kindness and courtesy.

(இ-ள்.) வள்ளன்மை-ஈகை, இல்லாதான்-இல்லாதவனுடைய, செல்வத்தின் - செல்வத்தைக் காட்டிலும், மற்றையோன் - ஈகையுள்ளவனுடைய, நல்குரவே - வறுமையே, நனிநல்ல

போலும் - மிகுதியும் நல்லவைபோ லிருக்கின்றன; (ஏனெ னில்), அருள் இலன் - கிருபையில்லாதவன், அன்பு இலன் - பிரீதியில்லாதவன், கண்ணறையன்-கண்ணோட்ட மில்லாதவன் (என்று), பலரால் - பலராலும், கொன்-காரணமின்றி, இகழ ப்பட்டான் - நிந்திக்கப்பட்டான் (ஆகையால்.)

உதாரகுண மில்லாதவனுக்குச் செல்வமிருப்பது அவனைத் தூஷிப்பதற்கேதுவாகின்றது. அக்குண முள்ளவனுடைய வறுமையோ அப்படியன்று, ஆதலால் இந்த வறுமையே நல்லது போல் தோன்றுகின்றது என்றால் செல்வ முள்ளவன் உதாரனா யிருக்கவேண்டும் என்பது கருத்து.

வள்ளன்மை=வள்ளலினது தன்மை, மை - தன்மையை யுணர்த்தும் விகுதி. நனி—உரிச்சொல். நல்ல—து என்னும் ஈறுதொக்கது; வறுமைகளைப் பலவாகக்கொண்டால் பலவின் பாலுமாம்.

கண் அறையன்—கண் - கண்ணோட்டம், அறை - அறுதல்= நீங்குதல், தொழிற்பெயர்; ஐ-விகுதி, அதன்மேல் அன் - ஆண் பால் விகுதி. போலும் என்பது குறிப்புப்பொருளில் வந்தது. இது ஏதுவணி. கொன்—இடைச்சொல். இங்கு ஏ - அசை. நல்குரவே என்பதில் ஏ - பிரிநிலை. செல்வத்தின்—ஐந்தனுருபு எல்லைப்பொருளில்வந்தது. மற்றையோன் — [உயிர்-௬-௩௫] விதியால் ஐகாரச்சாரியை பெற்ற மற்று என்னு மிடைச்சொ ன்மேல் ஆன்-விகுதியேறி, [பொது - ௬ - ௨.] விதியால் ஆ - ஓ ஆயிற்று. (௬௭)

ஈகை யரிதெனினு மின்சொலினு நல்கூர்தல்
ஓகோ கொடிது கொடிதம்மா - நாகொன்று
தீவினைக் கம்மியனால் வாய்பூட் டிடப்படின்மற்
றுவா விவரென்செய் வார்.

68. It may be impossible to give; but how cruel is it to be at the same time poor of kind words! yet what else can they do, if, as by a smith, their tongues be cut and their mouths locked up by the evil deeds of a former life?

(இ-ள்.) ஈகை - (ஒருவனுக்குக்) கொடுக்குந்தன்மை, அரிதெனினும் - இலதாயினும், இன்சொலினும் - இனியசொற்சொல்லுதலிலும், நல்கூர்தல் - இல்லாதவனாதல், ஓகோ கொடிது கொடிது - ஐயோ மிகவும் கொடியதாம்; தீவினை - பாவமாகிய, கம்மியனால் - கம்மாளனால், நாசொன்று - நாவைக்கொய்து, வாய்பூட்டிடப்பட்டிடின் - வாய் பூட்டப்பட்டால், ஆஆ - ஐயோ, இவர் - இவர்கள், என்செய்வார் - யாதுசெய்வார்கள்.

பொருளுடையோர் இரப்போர்க்குப் பொருள்கொடாராயினும் இனசொல்லையேயுங் கூருமலிருப்பது மிகவுங் கெட்டது. இப்படி யவர்கள் சொல்லாமலிருப்பதற்குக் காரணம் இவர்களுடையபாவமே என்பது கருத்து. ஆகவே பாவத்தைக்கம்மியனாகவும், சொல்லமனம்வராமைப் பூட்டாகவும், உருவகப்படுத்தினூர். இதுவும் ஏதுவணி; தற்குறிப்பேற்றமுமாம்.

அம்மா—வியப்பு. மற்று — அசை. இன்சொலினு நல்கூர்தல்—இங்கு உம்மை எச்சப்பொருளதாய் ஈகையைத் தழுவுகின்றது மன்றி இழிவுசிறப்புமாம். கொடுத்தலைநோக்கின் இது இழிந்தது. ஓகோ—இரக்கக்குறிப்பு; ஆஆ என்பதுமிப்படியே. கொடிது—கொடுமைப் பண்படியாகப்பிறந்த குறிப்புமுற்று. கொடிது கொடிது என்னு மடுக்கு மிகுதிப்பொருளில்வந்தது. ஈகை—தொழிற்பெயர், கை-விகுதி. தீவினைக் கம்மியன்—பண்புத்தொகை. பூட்டிடப்படின்என்பது, பூட்டுஎன்னும் பிறவினைப் பகுதியோடு இடு என்பதுசேர்ந்து ஒரு பொருளதாகின்ற பகுதியோடு படுஎன்னுஞ் செயப்பாட்டுபொருள் விகுதி யேறிய பூட்டிடப்படு என்பது இன் விகுதிபெற்றுவந்த செயினென் வாய்பாட்டெச்சம்; பூண் - தன்வினைப் பகுதி, டு-பிறவினைவிகுதி, ண்-ட் ஆனது சந்தி, அல்லது-பூட்டைஇடப்பட்டால் எனவுமுரைக்கலாம். அதில் பூட்டு செயப்படுபொருள்விகுதி புணர்ந்துகெட்டபெயர், விகுதிபெற்றதும் பகுதியாவதற்கு விதி. [பதவியல் - ரு - கக - கஉ]

(௬௮)

MAHAMAHOPADHY.. U. V. SWAMINATHAIYA.. ..VANMIYUR. MADRA..

சொல்வன்மை யுண்டெனிற் கொன்னே விடுத்தொழிதல்
நல்வினை கோறலின் வேறல்ல - வல்லைத்தம்
ஆக்கங் கெடுவ துளதெனினு மஞ்சுபவோ
வாக்கின் பயன்கொள் பவர்.

69. Where a man's words possess influence, the non-employment of the same is to destroy the effects of good deeds, even if their wealth is threatened with immediate ruin, will those fear who possess the advantages of eloquence?

(இ - ள்.) சொல்வன்மை - (யாருமேற்று கொள்ளத்தக்க) சொல்லின் வல்லமை, உண்டெனில் - ஒருவனுக்கு உண்டானால், கொன்னே - (அதை) வீணாக, விடுத்தொழிதல் - விட்டொழிதல், நல்வினை - (செல்வத்திற்குக் காரணமாகிய) நல்வினையை, கோறலின் - அழிப்பதிலும்; வேறல்ல - வேறல்லவாம்; வல்லை - விரைவாக, தம் ஆக்கம் - தமது செல்வம், கெடுவது உளது எனினும் - கெடுவதாயிருந்தாலும், வாக்கின் பயன் - சொற்செலவால் வரும்பயனை, கொள்பவர் - கொள்ளுகிறவர்கள், அஞ்சுபவோ - அஞ்சியொழிவார்களோ?

ஒருவர்க்குத தன்வாக்குச் செல்லுவதாயிருந்தால் அதைப் பிறர்க்கு வேண்டியபோது பயன்படுத்த வேண்டும். அப்படிச்செய்யாமல் விடுவதும் புண்ணியத்தைக் கெடுப்பதிற் சேரும் என்பது கருத்து.

விடுத்தொழிதல்—விடுத்தல் என்பதேபொருள். தேய்ந்து விடும் என்பதுபோற்கொள்க. விட்டுநீங்குதல் என்னலுமாம். கோறல் — கொல் - பகுதி, தல் - விகுதி, முதல்நீண்டது விகாரம், லகரம்கெட்டதும் தகரம் றகரமானதும் சந்தி. ஐந்தனுருபு எல்லைப்பொருளில்வந்தது. அல்ல—இருதிணையைம் பாற்கும்பொதுவாகிய குறிப்புமுற்று. அ - விகுதி. கெடுவது உளது—கெடுவதா யிருக்கின்றது என்றுரைத்தால் கெடுவது வினையாலணையும் பெயர். முற்றெச்சமு மாகலாம். கெடுந்தன்மையை உடையது என்றுரைத்தால் தொழிற்பெயராம். அஞ்சுப — பலர்பால் வினைமுற்று கொள்பவர் — கொள் -

பகுதி, ப்-இடைநிலை, அ சாரியை, அர்-விகுதி, வகரம் உடம்படுமெய், சந்தியென்றுஞ் சொல்லலாம், வினையாலணையும் பெயர். (சுக)

சிறுமுயற்சி செய்தாங் குறுபயன் கொள்ளப்
பெறுமெனிற் றாழ்வரோ தாழார் - அறனல்ல
எண்மைய வாயினுங் கைவிட் டரிதெனினும்
ஒண்மையிற் றீர்ந்தொழுக லார்.

70. When they can procure a great advantage by a little exertion, will they shrink from it who abandon what is contrary to virtue though it be easy, to pursue decidedly the path of duty, however difficult?

(இ-ள்.) அறன் அல்ல - பாவமானசெய்கைகள், எண்மைய ஆயினும் - (செய்ய) எளியவையாயிருந்தும், கைவிட்டு - (அவற்றைச்செய்யாமல்) நீக்கிவிட்டு, அரிது எனினும் - (செய்ய) அரிதாயிருப்பினும், ஒண்மையில் - அறஞ்செய்தலாகிய நற்காரியத்தினின்றும், தீர்ந்து ஒழுகலார் - நீங்கிநடக்க அறியாதவர்கள், சிறு முயற்சி செய்து - சிறிய பிரயத்தினத்தைச்செய்து, ஆங்கு - அம்முயற்சியால், உறுபயன் - பெரும்பயன், கொள்ளப்பெறுமெனில் - அடையப்படுமானால், தாழ்வரோ - பின்வாங்குவரோ, தாழார் - பின்வாங்கார்.

எத்தனைவருத்தமானாலும் அறத்தின் வழியிலேயே நிற்பவர் சொற்செலவாகிய சிறுமுயற்சியால் பெரும்புண்ணியப்பயன் வருவதாயிருந்தால் அதுசெய்யாதுவிடார் என்பது கருத்து.

அறனல்ல—எழுவாய்த்தொடர், அல்ல - பலவின்பாற்பெயர். ஒண்மை—சுத்தம், அப்படிப்பட்ட காரியத்துக்கு ஆகுபெயர். இங்கு அறமெனக் கொள்ளப்பட்டது. ஒழுகலார்—எதிர்மறை வினையாலணையும்பெயர்; ஒழுகு - பகுதி, அல் - எதிர்மறை விகுதி, இரண்டுஞ் சேர்ந்தொருபகுதி, ஆர் - பலர்பால் விகுதி. பயன் - என்னும் எழுவாய்ப்பெயர், கொள்ளப்பெறுமெனில் என்கிறசெயப்பாட்டு வினையெச்சத்தில் முடிந்தது. படு என்பதுபோல் பெறு என்பதும் கொள்ளத் தக்கது. ஓ - எதிர்மறை,

தாழா என்னுந் தன்னெச்சங்கொண்டது. எண்மைய—எண்மை(=எளிமை) பகுதி, அ - பலவின்பால் விகுதி; குறிப்புமுற்று. உம்மை இரண்டுஞ் சிறப்புப்பொருளன. (எO)

செயக்கடவ வல்லனவுஞ் செய்துமன் னென்பார்
நயத்தகு நாகரிகமென்னும் - செயிர்த்துரைப்பின்
நெஞ்சுநோ மென்று தலைதுமிப்பான் றண்ணளிபோல்
எஞ்சா தெடுத்துரைக்கற் பாற்று.

71. Of what avail is the flattering politeness of men, who forwardly profess that they will do things, which are not in their power to do, compared to the tender feelings of a man, who lest harsh words should grieve the heart of another, would cut off his head.

(இ - ள்.) செயக்கடவ அல்லனவும் - தம்மாற்செய்யக்கூடாதவற்றையும், செய்தும் மன் - மிகவும் செய்வோம், என்பார் - என்பவர்களுடைய, நயத்தகும் - விரும்பத்தக்க, நாகரிகம் - தாக்ஷிணியம், என் ஆம் - என்ன பயன்படும்? (அது) செயிர்த்து - (ஒருவரைக்) கோபித்து, உரைப்பின் - சொன்னால், (அவர்க்கு), நெஞ்சு - மனம், நோம் என்று - வருந்துமென்று (இரங்கி), தலை-அவருடைய தலையை, துமிப்பான் - வெட்டுவோனுடைய, தண் அளிபோல் - குளிர்ச்சியாகிய கிருபைபோல், எஞ்சாது - குறையாமல், எடுத்து உரைக்கல் பாற்று - எடுத்துச்சொல்லுந் தன்மையை யுடையது.

தம்மால் முடியாத காரியத்தையும் முடித்துத் தருவதாகப் பிறருக்கு ஆசைசொல்லுகிறவர்க ளிடத்திலிருக்கும் தாக்ஷிணியம் எப்படிப்பட்டதென்றால் நாம் கோபமாய்ப் பேசினால் அவருக்கு மனவருத்தமாகுமென்று நினைத்து அவர்தலையை வெட்டிப் போடுகிறவனுக் கிருக்கிற இரக்கத்தை ஒத்தது என்றால் வீணாசைபேசி ஒருவனைக்கெடுக்கிற தாக்ஷிணியம் ஒருவன் தலையை வெட்டுவதற்குச் சமானம் என்பது கருத்து.

செய்தும்—தன்மைப்பன்மை யெதிர்காலவினைமுற்று. தும் விகுதி காலங்காட்டும். மன்—மிகுதிப்பொருளைத்தரும் இடைச்சொல். நயத்தகும்—நான்காம்வேற்றுமைத் தொகைநிலைத்

தொடர், நயம்—நயத்தல், தொழிற்பெயர்; மகரக்கேடு-சந்தி; நயக்க என்னும் வினையெச்சம் ஈறு தொக்கதெனினுமாம். எதிர்மறை யிலக்கணையால் அதின் இன்மையை உணர்த்தும். தண்ணளி என்பது மிப்படியே. நோம்—நோவும் என்பது [வினை-கு-உஉ] விதியால் ஈற்றுயிர்மெய் கெட்டது. உரைக்கற்பாற்று—உரைக்கலாகிய பான்மையெனப் பண்புத் தொகைநிலைத்தொடர்மொழிமேல் று விகுதி யேறிமுடிந்த வினைமுற்று. கடவ—கடமைப்பண்படியாய்ப்பிறந்த பலவின்பாற்பெயர். கடவ அல்லன—எழுவாய்த்தொடர்; உம்மை சிறப்பு. (எக)

அல்லன செய்யினு மாகுலங்கூ ழாக்கொண்
டொல்காதார் வாய்விட் டுலம்புப - அல்லால்
பிறர்பிறர் செய்பபோற் செய்தக்கசெய்தாங்
கறிமடம் பூண்டுநிற்பா ரார்.

72. Many there are, who, to reap a harvest of empty sound, scruple not to boast aloud of their actions, though they have done nothing on the contrary, there are none, who, when they have done a good action, assume a feigned ignorance, as if others had done it.

(இ-ள்.) ஒல்காதார் - அடங்காதார், அல்லன - பயனல்லனவற்றை, செய்யினும் - செய்தாராயினும், ஆகுலம் - ஆரவாரத்தையே, கூழ் ஆ கொண்டு - பயனாகக்கொண்டு, வாய்விட்டு - (யாருமறிய) வாய்விட்டு, உலம்புப அல்லால் - இரைவார்களேயல்லாமல், செய்தக்க - செய்யத்தக்க காரியங்களை, [பயனுள்ளவைகளை,] பிறர் பிறர் - ஒல்காதாரல்லாத மற்றவர்கள், செய்பபோல்-செய்வதுபோல, செய்து - (தாம்) செய்து, ஆங்கு - அச்செய்கையில், அறிமடம் - தெரிந்துந் தெரியார்போலிருத்தலை, பூண்டு - அடைந்து, நிற்பார் ஆர் - நிற்பவர்கள் யார், [யாருமில்லை.]

அறிவில்லார் பயனில்லாக் காரியத்தைச்செய்தும் யாம் இன்னதைச் செய்தோமென இரைவார்; அறிவுடையார் பயனுள்ளதைச்செய்தும் வாய்திறவார் என்பது கருத்து.

செய்பினும்—உம்மை இழிவுசிறப்பு. கூழ்—பயனுக்கு ஆகு பெயர். வாய்விட்டு என்பது விளக்கமான சொற்களால் என்கிற கருத்தைத்தரும். செய்தக்க—இதுவும் நான்காம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்; செய்-முதனிலைத் தொழிற்பெயர். செய—ஈறுதொகுத்தலுமாம். அறிமடம்—அறிவாகிய மடம்; வெளிக்கு மடமைபோன்ற அறிவு என்பதாம். அறி-முதனிலைத் தொழிற்பெயா, அல்லது ஈறுதொகுத்தலென்றுஞ் சொல்லலாம், பிறர்பிறா என்னுமடுக்கு அனேக பிறா எனப் பன்மைப்பொருளில்வந்தது. ஆா—யாரென்பதின் அல்லது யாவரென்பதின் மரூஉ. (எஉ)

பகையின்று பல்லார் பழியெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வான் - பயமின்று
மெய்விதிர்ப்புக் காண்பான் கொடிறுடைத்துக் கொல்
கைவிதிர்த் தஞ்சப் படும். [வான்போற்

73. He who exposes the failings of others without any cause of enmity, aiming at no more effect than derisive laughter, will be feared like him who breaks the jaws of a person simply to see him tremble with pain.

(இ-ள்.) பகையின்று - பகையில்லாமலே, பல்லார் - பலரு டைய, பழி - குற்றத்தை, எடுத்தோதி - எடுத்துச்சொல்லி, நகை ஒன்றே - நகைத்தலொன்றையே, நல் பயனு - நல்லபயனாக, கொள்வான் - கொள்ளுகிறவன், பயம் இன்று - (தனக்கு) வேறொரு பலனுமில்லாமல், மெய்விதிர்ப்பு - (ஒருவனுடைய) உடம்பு நடுக்கத்தை, காண்பான் - காணும்பொருட்டு, கொடிறு-(அவன்) கதுப்பை, [தாடையை], உடைத்து - கிழித்து, கொல்வான்போல் - வருத்துபவன் போல, கைவிதிர்த்து - கை நடுங்கி, அஞ்சப்படும் - அஞ்சப்படுவான்.

நகைப்பதற்காகவே ஒருவருடைய குற்றங்களைத்தூற்றுகிறவன், உடம்பு எப்படி நடுங்குகிறது பார்ப்போமென்று தாடையில் அடித்துக் கிழித்துக் கொல்லுகிறவனுக்குச் சமானனுகை

யால் அவனைக்கண்டால் உலகத்தார் அப்பா என்று கைகூப்பிக் கப் பயப்படுவோர்கள் என்றால் வீணாய்ப் பிறரைத் தூஷித்து நகைக்கவேண்டாம் என்பது கருத்து.

பழி—பழிக்கப்படுவது, செயப்படுபொருள் விகுதிபுணர்ந்துகெட்டபெயர்; முதனிலைத்தொழிற்பெயர் ஆகுபெயராயிற்றெனினு மிழுக்காது. விதிர்ப்பு—தொழிற்பெயர். "இடைத்தொட ராய்தத்தொட ரொற்றிடை யின் மிகா நெடிலுயிர்த்தொடர்முன் மிசாவேற்றுமை" என விதந்ததனால் இவ்வன்றொடர்முன் வலிமிக்கது. அஞ்சப்படும்—செயப்பாட்டுச் செய்யுமென்முற்று ஆண்பாலில்வந்தது. [வினை-சூ - உக.] அஞ்சுதல்வருமிடத்து இரண்டாம் வேற்றுமை செய்யுளில் பயின்றுவருவதனால் செயப்படுபொருள் (...)ன்று வினையாயிற்று. இன்று—இன்றி என்னும் குறிப்பு வினையெச்சத் திரிபு ஆதலின் [உயிரீற-சூ-உரு.] ஆல் வலிமிகவில்லை. பல்லார்—பன்மையடியாகப்பிறந்தபெயர், ஒன்றோ—ஒகாரம்பிரிநிலை. நன்பயன்—நல் என்னும் பண்படியீற்று லகரம் நகரமாத்திரிந்து மெலித்தல்விகாரம் பெற்றது. கைவிதிர்த்து — இந்தச்சினைவினை [வினை - சூ - உக.] விதியால் அஞ்சப்படு மென்னு முதல்வினையைக் கொண்டது. விதிர்த்தல் - அசைத்தல் எனக் கொண்டு அஞ்சுவோன் வினையாக்கில் வழாநிலையாயாம். (எங)

தெய்வ முளதென்பார் தீய செயப்புகின்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் - தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்த மின்புதல்வர்க் கன்றே
பலகாலுஞ் சொல்வார் பயன்.

74. If those, who confess the existence of God, enter on an evil action, God will punish them without mercy: not so to those, who say "there is no God." Is it not to their own dear children, that men patiently repeat instruction ?

(இ-ள்.) தெய்வம் உளது என்பார் - தெய்வமுண்டென்கிறவர்கள், தீய - தீமையானகாரியங்களை, செயப்புகின் - செய்யத்தொடங்கினால், தெய்வமே - அத்தெய்வமே, கண் இன்று -

தாக்ஷிணியமில்லாமல், நின்று - எதிர் நின்று, ஒறுக்கும் - தண்டிக்கும்; தெய்வம் இலது என்பார்க்கு - தெய்வமில்லை யென்கிறவர்களுக்கு, இல்லை - (அவ்வாறுதண்டித்தல்) இல்லை; (ஏனெனில் பிதாக்கள்) தம் - தம்முடைய, இன் புதல்வர்க்கு அன்றே - இனிய புத்திரருக்கல்லவா, பயன் - பயன்படு மொழியை, பலகாலும் - பலதரமும், சொல்வார் - சொல்லு வார்கள்.

தெய்வமுண்டென்று நம்பின யோக்கியர் ஒரு தவறுசெய்தால் அவர்களுக்கு எதோ ஒருவிதத்தில் சிட்சை யாகின்றது. தெய்வமில்லையென் றிருப்பவர்க்கோ அப்படியில்லை. இவ்வாறு உலகத்தில் அநுபவமிருப்பதற்குக் காரணம், யோக்கியருக்குப் பாவம் கழிவதற்காகக் கடவுளே அப்படிச்செய்கிறார் என ஏது கூறினார். வேற்றுப்பொருள் வைப்பணியுங் கலந்தது.

தெய்வம் — சொல்லளவில் அஃறிணை. ஏகாரம்—பிரிநிலை. அன்றே — இது இரண்டுசொல் லிணைந்த வொருசொல்; பிரசித்தத்தைக் குறிக்கும். பலகால்—[உயி - ரு - ௨0] விதியால் வலி யியல்பாயிற்று. தீய —பலவின்பாற்பெயர்; இரண்டாம் வேற்றுமைத்தொகை; தீயவற்றை என அற்றுச்சாரியைபெற்று விரியும். கண் — கண்ணோட்டத்திற் காகுபெயர். உளது, இலது — உள் இல் என்னும் பண்படிகள் அகரச்சாரியையும் துவ் விகுதியும் பெற்றுவந்த குறிப்புமுற்றுக்கள். (எச)

தீயசெயற் செய்வா ராக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல - தீயன
நல்லன வாகாவா நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமா போல்.

75. Though the prosperity of those who do evil increase, still evil is but evil; it will never be good: just like the wild cow, which licks the body with her tongue, so as to create a pleasing sensation, while at the same time she thereby causes death.

(இ - ள்.) தீய - பொல்லாங்கான, செயல் - செய்கையை, செய்வார் - செய்கிறவர்களுடைய, ஆக்கம் - செல்வமானது,

பெருகினும் - (முன்னே) வளர்ந்து வந்தாலும், தீயன - தீத்தொழிலால் வந்த செல்வங்கள், தீயனவே - தீமையைத்தருவனவேயாம்; வேறு அல்ல - நன்மையைத் தருவனவல்ல; நா - நாவினுலே, இன்புற நக்கி - இனிமையுற நக்கி, கொல்லும் - கொல்லுகின்ற, கவய மாபோல் - காட்டுப்பசுவைப்போல, தீயன - தீயவை, நல்லன ஆகா - நல்லவையாகமாட்டா. ஆம் - அசை.

நாவின் - நாக்கினுல், புறம் நக்கி - உடலின் புறத்தை நக்கி எனவுமுரைக்கலாம். காட்டுப்பசு உடம்பைநக்கினுல் சுகமாயிருந்து பின்பு விஷம்போல் மரண ஏதுவாம் என்றுசொல்வர். அப்படி கெட்டசெயலால் பெறுஞ்செல்வம் தற்காலம் வளர்ந்து சந்தோஷத்தைச் செய்தாலும் பின்பு நரகமுதலிய தீமையைத் தரும் என்பது கருத்து.

தீய, தீயன—பண்படிமேற் பிறந்த பலவின்பாற் பெயர்கள், முந்தியதிற் சாரியையில்லை; பிந்தியதில் அன் - சாரியைவந்தது; நல்லனவு மிப்படியே. தீய என்பதைக் குறிப்புப்பெயரெச்சம் எனவுங் கொள்ளலாம். செயற்செய்வார் என்பதில் லகரம், "லளவேற்றுமையிற் றடவும்" என்கிற விதியால் றகரமாத்திரிந்தது. "இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும்" என்பதற்கு இயல்பினியல்பும் விகாரத்தில் விகாரமுமன்றி இயல்பின் விகாரமும் விகாரத்தியல்பும் என்று பொருள் கூறின ராதலால் இங்கு விரோதமில்லை. தீயன தீயனவே வேறல்ல என்றும் தீயன நல்லனஆகா என்றும் உறுதிப்பாட்டுக்காகக் காரணகாரிய வகையாற் கூறியிருத்தலால் கூறியது கூறலாகாதெனவுணர்க. கவயம் மா என இருபெயரொட்டுப் பண்புத்தொகை. போல்—வினையெச்சம்; அகரவிகுதி தொகுத்தல். (எரு)

நன்மக்கள் செந்நாத் தழும்பிருக்க நாள்வாயும்
செந்நெறிச் செல்வாரிற் கீழல்லர் - முன்னைத்தம்
ஊழ்வலி யுன்னிப் பழிநாணி யுள்ளுடைவார்
தீய செயினுஞ் சில.

76. Those who feel afflicted and ashamed at the dee ச்சியடையா they are over-ruled by fate to do, are not inferior to tho முதலிய) unswervingly in the paths of virtue extorting retreated a the wise. - அழகிய,

(இ-ள்.) தம் - தம்முடைய, முன்னை - பழைமையா ஒத்த வலி - ஊழின்வல்லமையை, உன்னி - நினைத்து, பழி அறுப க்கு, நாணி - வெட்கப்பட்டு, உள்ளுடைவார் - மனம்வ கிறவர்கள், சில தீய - சில பொல்லாங்குகளை, செயினும் - ணுக் ய்தாராயினும், (அவர்) நன்மக்கள் - சான்றோர்களுடை து செந்நா - (மெய்கூறுதல் முதலான) மேன்மையுள்ள நாக்கிலே தழும்பு இருக்க - (புகழ்தலினாலே) தழும்பு ஏறியிருக்கும்படி, நாள்வாயும் - நாள்தோறும், செம் நெறி - நல்லொழுக்கத்தில், செல்வாரில் - நடக்கிறவர்களைக்காட்டிலும், இழிலர் - குறைந்தவரல்லர்.

தாம் ஒரு தீமைசெய்யும்படி நேரிட்டால் அது கர்மவசத்தாலே நேரிட்டதென்று விசனத்தோடு வெட்கப்பட்டுக்கொண்டிருப்பவர், பெரியோர் புகழும்படி நல்லொழுக்க முள்ளவர்போலவே கொள்ளத்தக்கவர் என்பது கருத்து.

செந்நா — பண்புத்தொகை. செம்மையில் மை கெட்டு மகரம் நகரமாயிற்று. செந்நெறியு மிப்படியே. நாள்வாய் — வாய் - ஏழனுருபு. உம் — முற்றுப்பொருளதாதலின் நாள்தோறு மெனப்பொருள் கூறப்பட்டது. செயினும் என்கிற வும்மை இழிவு சிறப்பு; செய்யார் என்பதையு முணர்த்துகின்றது. முன்னை—இதில் ஐ - சாரியை. உன்னி — உன்னு - பகுதி. (எசு)

**பிறன்வரை நின்றாள் கடைத்தலை சேறல்**
**அறனன்றே யாயினு மாக - சிறுவரையும்**
**நன்னலத்த தாயினுங் கொள்க நலமன்றே**
**மெய்ந்நடுங்க வுண்ணடுங்கு நோய்.**

77. To visit the gate of a neighbour's wife is certainly not virtue. But suppose it to be so. Then if it yield even a brief enjoyment, be it allowed: but surely the torture, that shakes the body and the mind *with agitation*, is not enjoyment.

பெருகினும் — முன்வரைநின்றாள் - பிறனுடைய ஆதினத்திலிருப் தொழிலாள், [பரதாரத்தினுடைய,] கடைத்தலை - தலைவாயி லைவேயர் சேறல் - செல்லுதல், அறன் அன்றே - தருமமல்ல காவினுமேனும் ஆகா - தருமமாகாமற்போனாலும் போகட்டும்; கொல்லாயும் - கணப்பொழு தாகிலும், நல்நலத்தது ஆயினும் - ன - நீஇன்பத்தைத் தருவதானாலும், கொள்க - (அப்பரதார ஆசைபத்தை) விரும்புக; பலம் அன்றே - (அது) அவ்வாறின்பந் தருவதன்றே; (மற்றென்னென்றால்,) மெய்ந்நடுங்க - உடல் நடுங்க, உள் நடுங்கும் - உள்ளமு நடுங்குதற்குக் காரணமாகிய, எ நோய் - ஒருநோய் போலாம்.

பிறன்மனையாளிடம் செல்லுதல் பாவமானது மன்றி அச்சத்தினால் உடம்பும் மனமும் நடுங்குட்டி யிருத்தலால் சுகமுமாகாமையினால் அது செய்யாதிருக்கவேண்டும் என்பது கருத்து.

ஆயினுமாக என்பதற்கு, தருமமானாலும் ஆகட்டும் என்று பொருள்கூறலு முண்டு. பிறன்வரைநின்றாள் கடைத்தலை சேறல்—இடக்கரடக்கல். கடைத்தலை—கடை - புறவாயில், தலை - ஏழனுருபு. அல்லது தலைமையான கடை என்பது கடைத்தலை எனமாறிவந்த இலக்கணப்போலி என்னவுமாம். தலைக்கடை என்பது உலகவழக்கு. சிறுவரையும் — ஐயவும்மை. ஆக — வியங்கோள், குச்சாரியைபெறின் ஆகுக எனவரும். மெய்ந்நடுங்க—[உயி-கு-அ]னல் நகரம் இரட்டியது. (எஎ)

**கருமஞ் சிதையாமே கல்வி கெடாமே**
**தருமமுந் தாழ்வு படாமே - பெரிதுந்தம்**
**இன்னலமுங் குன்றாமே யேரிளங் கொம்பன்னார்**
**நன்னலந் துய்த்த னலம்.**

78. It is good to enjoy the charms of tender and lovely women without impeding the progress of our actions and studies, without contracting the sphere of our charity, and depriving us of youthful vigor.

(இ-ள்.) தம் - தமது, கருமம் - செய்தொழிலும், சிதையாமே - கெடாமல், கல்வி கெடாமே - கல்வியு மறவாமல், தரும

மும் - உரிய ஒழுக்கமும், தாழ்வுபடாமே - தாழ்ச்சியடையா மல், பெரிதும்-மிகுதியும், இன் நலமும் - (இளமை முதலிய) இனிய நலங்களும், குன்றுமே - குறையாமல், ஏர் - அழகிய, இளங்கொம்பன்னார் - இளமையாகிய பூங்கொம்பை ஒத்த மனைவியாது, நல்நலம் - நல்லின்டத்தை, துய்த்தல் - அநுப வித்தல், நலம் - நல்லது.

ஒருவன் தான்மேற்கொண்ட காரியமுதலானவைகளுக் குக் கேடு நேரிடாதபடி சுகம் அநுபவிக்கவேண்டும் என்பது கருத்து.

சிதையாமே முதலியவை எதிர்மறை வினையெச்சம். இவ் வினையெச்சங்களி னீற்றில் எண்ணும்மைகள் செய்யுள் விகா ரத்தால் தொக்கன; அல்லது வினைச்செவ்வெண். தருமமும், இன்னலமும் என்பவைகளி லும்மை எண்ணுப் பொருளன; முதலது எச்சவும்மையு மாம். இவற்றை வினையெச்சங்க ளோடு கூட்டுவதே நலம். இதுபொருட்பின்வருநிலை என்னு மலங்காரமாம். பெரிதும் — இந்த உம்மை முற்றுப்பொரு ளது. பெரிது என்னுங் குறிப்புமுற்று வினையெச்சமாய்க் குன் றுமே என்பதற்கு உரியாய் நின்றது. (எஅ)

கொலையஞ்சார் பொய்நாணார் மானமு மோம்பார்
களவொன்றோ வேனையவுஞ் செய்வார் - பழியொடு
பாவ மிஃதென்னார் பிறிதுமற் றென்செய்யார்
காமங் கதுவப் பட்டார்.

79. Those who are actuated by lust will not shrink from murder, nor feel ashamed of falsehood and dishonor. Is it only theft that they will indulge in? They will perpetrate all species of vice. what is there that those who maintain that lust is not sinful will hesitate to do?

(இ - ள்.) காமம் - காமத்தினால், கதுவப்பட்டார் - பிடிக் கப்பட்டவர்கள், கொலை அஞ்சார் - கொலைக்குப் பயப்படமா ட்டார்கள்; பொய் நாணார் - பொய்க்கு வெட்கப்படமாட்டார் கள்; மானமும் - மானத்தையும், ஓம்பார் - பாதுகாக்கமாட் டார்கள்; களவு ஒன்றோ - திருடுவது ஒன்றுமாத்திரமோ,

வினையவுஞ்செய்வார் - மற்றுமுள்ள தீயசெய்கை யெல்லாஞ் செய்வார்கள்; இஃது - இக்காமம், பழியொடு - நிந்தனையும், பாவ (மொடு) - பாவகாரியமும், என்னார் - என்று நினையார், பிறிது என்செய்யார் - வேறெது செய்யார்கள்? மற்று - அசை.

காமமிகுந்தவர் எல்லாப்பாவத்திற்கும் உடன்படுவார்கள் என்பது கருத்து.

மானமும் — சிறப்பும்மை. ஒடு—எண்ணிடைச்சொல் [இடை - சூ - ௪௦] விதிப்படி பாவத்தோடும் கூட்டப்பட்டது. வினையவுஞ்செய்வார் என்று உடன்பாட்டாற் கூறியதை உறுதிப்படுத்தும்பொருட்டு எதிர்மறையினாலுங் கூறினாரென்றறிக. கதுவப்பட்டார் - கதுவு - பகுதி, அ-சாரியை, படு - செயப்படுபொருள் விகுதி; எல்லா மொருபகுதியான தன்மேல் ஆர் - பலர்பால்விகுதி, டகரமிரட்டியதும் உகரங்கெட்டதும் - சந்தி. (௭௧)

திருவினு நல்லாண் மனைக்கிழத்தி யேனும்
பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பர் - நறுவிய
வாயின வேனு முமிழ்ந்து கடுத்தின்னும்
தீய விலங்கிற் சிலர்.

80 Though the wife of their homes be more beautiful and virtuous than the goddess of beauty herself, some persons will always long for another's wife; and thus stain their honor, like the *foolish* animals which spit out the sweet things in their mouth to eat bitter ones.

(இ-ள்.) நறுவிய - இனியபொருள்கள், வாயின வேனும் - வாயினிடத்திருப்பினும், உமிழ்ந்து - (அவற்றை) உமிழ்ந்துவிட்டு, கடு - கைப்புள்ளபொருள்களை, தின்னும் - தின்னுகிற, தீயவிலங்கில் - இழிவான மிருகங்களைப்போல, சிலர் —, மனைக்கிழத்தி - தம்முடையமனைவி, திருவினும் - திருமகளினும், நல்லாளேனும் - அழகுள்ளவளாயினும், (அவளைவிட்டு) பிறர்மனைக்கே - பிறர்மனைவியர்க்காகவே, பீடு அழிந்து நிற்பர் - பெருமை கெட்டு நிற்பார்.

அழகான தம்மனையாளைவிட்டுப் பிறர்மனையாளை விரும்பு கின்றவர்கள், மாந்தளிர் முதலியவற்றைத்தள்ளி வேப்பிலை யைத்தின்கிற ஒட்டகமுதலான மிருகங்களுக்கு ஒப்பாவர் என்பது கருத்து.

திருவின் — எல்லைப்பொருளில் வந்த ஐந்தாம்வேற்றுமை. விலங்கின்—ஒப்புப்பொருளில் வந்தது. நன்மை—இங்கு அழகு, அதனையுடையாள் நல்லாள். கிழத்தி—கிழமையை யுடையவள்; கிழமை - உரிமை, இ - பெண்பால் விகுதி, தகரம்- எழுத்துப்பேறு, பெயர்ப்பகுபத இடைநிலை யென்னவுமாம்; தி - விகுதி யென்பது நேர், த் - சந்தி. மனைக்கு—மனை - இல்லாட்கு ஆகுபெயர். கு - நிமித்தப்பொருளில் வந்தது; இடப்பொருள் என்னவுமாம். நறவிய — நறுமை - பகுதி, இ - சாரியை, அ - விகுதி, ய் - உடம்படுமெய், குறிப்பு முற் றுலணையும்பெயர். வாயின—குறிப்புமுற்று, வாய் - பகுதி, இன் - சாரியை, அ - பலவின்பால்விகுதி, ஏன் என்பது சேர வினையெச்சமாயிற்று. உம்மைகள் — சிறப்புப்பொருளில் வந்தவை.

கற்புடுத் தன்பு முடித்துநாண் மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு - மக்கட்பே
றென்பதோர் செல்வமு முண்டாயி னில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு.

81. A person whose wife is robed with chastity, decked with the flowers of affection, perfumed with female modesty, ornamented with domestic virtues, and also blest with the wealth of child-bearing, needs not wish for any thing more by penance.

(இ-ள்.) கற்புடுத்து - கற்பாகிய உடையையுடுத்து, அன்பு முடித்து - அன்பாகிய மலரைச்சூடி, நாண் - நாணமாகிய கல வைச்சாந்தை, மெய்ப்பூசி - உடம்பிற் பூசிக்கொண்டு, நற்கு ணம் - நல்லகுணமும், நற்செய்கை - நல்லநடக்கையுமாகிய அணியை, பூண்டாட்கு - அணிந்திருக்கிறமனைவிக்கு, மக்கட் பேறு - பிள்ளையைப்பெறுதல், என்பது ஓர்செல்வமும் - என் பதாகிய ஒப்பற்றசெல்வமும், உண்டாயின் - உண்டானால்,

கொண்டாற்கு - அவள்கணவனுக்கு, செய்தவம் - செய்யுந்த வம், வேறு இல் - வேறொன்றுமில்லை.

கற்புமுதலான சற்குணமுள்ள மனையாள் கிடைத்திருந் தால் எல்லாத்தவமும் கைகூடியதாம் என்பது கருத்து.

உடுத்து, முடித்து, பூசி, பூண்டாள் என்கிற வினைகளுக்கு ஏற்ப, கற்பு, அன்பு, நாணம், நற்குண நற்செய்கை என்பவை கள் - ஆடை, பூமாலை, சாந்து, அணிகள், என உருவகப்படுத்தப் பட்டன. இது ஏகதேச வுருவக அணி பல அடுக்கினதனால் மா லையுருவகமுமாம். மக்கட்பேறு என்பதில் "இயல்பின்விகார மும்" என்றதனால் ளகரம் டகரமாயிற்று. பேறு—முதனிலை திரிந்த தொழிற்பெயர். செல்வமும்—உம்மை எச்சப்பொ ருளொடு சிறப்புப்பொருளையு முடையது. (அக)

* * * * * * (அஉ)

கற்பின் மகளி னலம்விற் றுணவுகொளும்
பொற்றொடி நல்லார் நனிநல்லார் - மற்றுத்தம்
கேள்வற்கு மேதிலற்குந் தங்கட்குந் தங்கிளைஞர்
யாவர்க்குங் கேடு சூழார்.

83. Far better than a wife without chastity, are the fair with golden bracelets, who subsist by selling their favours; for these do not involve in misery their husbands their lovers, themselves, and all their connexions.

(இ-ள்.) கற்பு இல்—பதிவிரதைத்தன்மை யில்லாத, மக ளின்-பெண்ணைக்காட்டிலும், நலம் - இன்பத்தை, விற்று-(பிறர் க்குக்) கொடுத்து, உணவுகொளும் - உணவைப்பெறுகின்ற, பொன்தொடி - பொன்வளையணிந்த, நல்லார் - பெண்கள் [வேசியர்], நனிநல்லர் - மிக்க நன்மையுடையார்; (ஏனெ னில்) தம் கேள்வற்கும் - தங்கணவனுக்கும், ஏதிலற்கும் - பரபுருடனுக்கும், தங்கட்கும் - தமக்கும், தங்கிளைஞர்யாவர் க்கும் - தஞ்சுற்றத்தார் எல்லோர்க்கும், கேடு - கெடுதியை; சூழார் - உண்டாக்கார்.

விபசாரஞ்செய்கிற குலப்பெண்கள் வேசிகளினும் ஈனமானவர் என்பது கருத்து.

நனி — உரிச்சொல். நல்லர் — குறிப்புமுற்று ; நல், அர் - பகுதி விகுதிகள். கேள்வன் — அன்புள்ளவன், வகரம் - சந்தியால் வந்தது. [உயி - கு - கரு] உரையைக் காண்க. பொற்றொடி — மூன்றும்வேற்றுமை உருபும் பயனுமுடன் றொக்கதொடர். இது நல்லாரோடு சேரும்போது இரண்டாம்வேற்றுமை யுருபும் பயனுமுடன் றொக்கதொடர். மற்று—அசை. கிளைஞர் — ஞகரம் பெயர்ப்பகுபத இடைநிலை. சூழார் என்பது இங்கு சூழ்ச்சியின் காரியமாகிய ஆக்குதலின் மேல் வந்தது. (அரு)

முறையுங் குடிமையும் பாண்மையு நோக்கார்
நிறையு நெடுநாணும் பேணார் - பிறிதுமொரு
பெற்றிமை பேதைமைக் குண்டே பெரும்பாவம்
கற்பின் மகளிர் பிறப்பு.

84. To be born an unchaste wife is a great sin. such foolish women regard not their connexions ; heed not the greatness of their birth and worth ; preserve not chastity ; and feel not shame; and in fact have nothing good in them.

(இ - ள்.) முறையும் - உறவின்முறையையும், குடிமையும் - (தாம்பிறந்த) குடிப்பெருமையையும், பாண்மையும் - தகுதியையும், நோக்கார் - பாரார் ; நிறையும் - (பிறர்பால் மனஞ்செல்லாமல்) நிறுத்தலையும், நெடுநாணும் - பெரியநாணத்தையும், பேணார் - பாதுகாவார் ; பிறிது மொருபெற்றிமை - வேறொரு நலமாயினும், பேதைமைக்குண்டே - அப்பேதைகட்குண்டோ, [இல்லை,] (ஆதலால்,) கற்பு இல் - கற்பில்லாத, மகளிர் பிறப்பு - மாதர்பிறப்பு, பெரும்பாவம் - மிகுந்த பாவத்தாலாயதேயாம்.

கற்பழிந்த மகளிர் பெரும்பாவத்தாற் பிறந்தவர் என்பது கருத்து.

பெரும்பாவம் — பாவத்தினாலாகியதெனக் காரணம் காரியமா வுபசரிக்கப்பட்டது இலக்கணை. நிறை — நிறுத்தல், நிறு - பகுதி, ஐ - தொழிற்பெயர் விகுதி. இப்பகுதி நில் என்னுந் தன்வினைமேல் று என்னும் விகுதியேறி லகரங்கெட் டேவந்த பிறவினைப்பகுதி என்பர். பெற்றிமை — பெற்றி - பெறப்படுவது, பெறு - பகுதி, இ - செயப்படுபொருள் விகுதி, பகுதி றகரமிரட்டியதும் உகரங்கெட்டதுஞ் சந்தி. மை - பகுதிப்பொருள் விகுதி. பேதைமை — இதனையுடையவர்க்கு ஆகுபெயர். (அச)

பெண்மை வியவார் பெயரு மெடுத்தோதார்
கண்ணொடு நெஞ்சுறைப்ப நோக்குறார் - பண்ணொடு
பாடல் செவிமடார் பண்பல்ல பாராட்டார்
வீடில் புலப்பகையி னார்.

85. They who wage successful war with the unrestrained sensual organs, admire not female beauty; dwell not in conversation on their names; exite not the eye and heart with licentious gazes; indulge not the ear in music and song; and commend not what is contrary to decency.

(இ-ள்.) வீடு இல் - கெடுதலில்லாத, புலப்பகையினார் - விடயங்களிற் பகையையுடைய துறந்தோர், பெண்மை - பெண் தன்மையை, வியவார் - நன்குமதியார்; பெயரும் - (பெண்ணென்னும்) பெயரையும், எடுத்து ஓதார் - எடுத்துச்சொல்லார்; கண்ணொடு - கண்களும், நெஞ்சு(ஒடு) - மனமும், உறைப்ப- பொருந்தும்படி, நோக்குறார் - பாரார்; பண்ணொடு - இசையுடனே கூடிய, பாடல் - பாடலை, செவிமடார் - கேளார்; பண்பு அல்ல - (மற்றும் ஆடல் முதலிய) நன்மையல்லன வற்றை, பாராட்டார் - பாராட்ட மாட்டார்.

துறவிகள் காமத்திற்கு ஏதுவாகிய காரியங்களுக்கு உடன்படார் என்பது கருத்து.

பெண்மை — மை - தன்மையைக்காட்டும் விகுதி. கண்ணொடு—ஒடு - எண்ணிடைச்சொல். இது நெஞ்சென்பதினோடும் ஒட்டும். கண்ணும், நெஞ்சும் என்பது பொருளாம்.

நோக்குறூர் — நோக்கு உறு என இரண்டுஞ்சேர்ந்த நோக்குறு - பகுதி, நோக்கை உறூர் எனப் பிரிக்கினு மாம். பண்ணுடு — இதுகூடிய என வருவித்த சொல்லோடு சேரும். மடார்—மடு [=சேர்தல்] - பகுதி, ஆ-எதிர்மறைவிகுதி, ஆர் - பலர்பால்விகுதி, விகுதி ஆகாரங்கெட்டது. ர்-விகுதி என்பது நன்று. செவி—ஏழாம் வேற்றுமைத்தொகை. பண்புஅல்ல—எழுவாய்த்தொடர். பாராட்டார் — பாராட்டு - பகுதி, இது பார் ஆட்டு என இரண்டுஞ்சேர்ந்து ஒன்றாய் கொண்டாட்டத்தைக்குறிக்கின்றது என்பர். புலப்பகையினூர் — புலங்களில் பகை புலப்பகை என ஏழாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்மேல் இன் - சாரியையும், ஆர் - விகுதியும், வந்தபெயர். இல்புல என்னுமிடத்தில், [மெய்புணர் - சூ - ௩௦] விதியால் லகரமியல்பாயிற்று. (அரு)

துயிற்சுவையுந் தூநல்லார் தோட்சுவையு மெல்லாம்
அயிற்சுவையி னாகுவவென் றெண்ணி-அயிற்சுவையும்
பித்துணாக் கொள்பபோற் கொள்ப பிறர்சிலர்போல்
மொத்துணா மொய்ம்பி னவர்.

86. Those who have freed themselves from the evils incident to birth, in which others are involved, by the power of penance, will not indulge in excessive eating, because they know that sleep and sexual desire result from luxurious eating. Like an insane man they will eat little.

(இ - ள்.) பிறர்சிலர்போல் - வேறுசிலரைப்போல, மொத்துணா - (ஐம்புலவாசையால்) அடிபடாத, மொய்ம்பினவர் - (தவஞ்செய்யும்) ஆற்றலையுடையார், துயில்சுவையும் - நித்திரையின்பமும், தூநல்லார்-மாசில்லாத ஸ்திரீகளுடைய, தோள்சுவையும் - தோளைச்சேரு மின்பமும், எல்லாம் - இவை முதலிய யாவும், அயில்சுவையின்-சோறு முதலானவற்றை உண்ணுமின்பத்தால், ஆகுவ என்று - உண்டாகுவன என்று, எண்ணி - நினைத்து, அயில்சுவையும் - அவ்வுண்டியின்பத்தையும், பித்து - பித்தர், உணா - உணவுகளை, கொள்பபோல - கொள்வார்களே அதைப்போல, கொள்ப - கொள்வார்கள்.

சாப்பாட்டுச் சவுக்கியத்தினாலே உடம்பில் கொழுப்பேறி மற்றெல்லாச் சுகங்களையும் விரும்புவதினால் அதை ஒழித்து உயிர் நிற்கும்படி நேர்ந்தது நேர்ந்தபடி அற்ப வுணவுகளைக் கொள்ளுகின்றார்கள் தவசிகள் என்பது கருத்து

துயில்—முதனிலைத்தொழிற்பெயர்; அயிலும் அப்படியே; ஆறும்வேற்றுமைத்தொகை. மூன்றனுருபும் பயனுந் தொக்க தொகை என்னவுமாம். ஆகுவ — பலவின்பால் வினைமுற்று. ஆகு — பகுதி, இதில் கு - சாரியை, அ - விகுதி, வ் - இடைநிலை, தன்மையைக்காட்டும். பித்து—பித்தம் என்னும் வடமொழியின்திரிபு. அது அதனாலாகிய வியாதிக்கு ஆகுபெயராய் இங்கு அதை யுடையவருக்கு ஆனதால் இருமடியாகு பெயர். உணா—உண் - பகுதி, ஆ - செயப்படுபொருள் விகுதியெனக் கொளல்வேண்டும். உணவு என்பதின் மரூஉ எனவுங் கொள்வர். மொத்துணா — மொத்து - மொத்தல், அடித்தல், முதனிலைத்தொழிற்பெயர். அதனைப் பெறாத என்பது பொருள், இப்படியே அடியுண்டது, இடியுண்டது, சிதறுண்டது, முதலியவையுங் கொள்க. இங்கு உணா ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். மொய்ம்பினவர் — மொய்ம்பு = பலம், பகுதி, இன்-அ-சாரியைகள், அர் - விகுதி. (௮௬)

அன்பொ டருளுடைய ரேனு முயிர்நிலைமற்
றென்பியக்கங் கண்டும் புறந்தரார் - புன்புலால்
பொய்க்குடி லோம்புவரோ போதத்தாற் றாம்வேய்ந்த
புக்கில் குடிபுகுது வார்.

87. Holy men, though of tender and benevolent disposition, will not protect their body (by eating), though their bones show through the skin. Would they who possess a heavenly mansion, which they have built for themselves by wisdom, seek to preserve a false tabernacle of rank decaying flesh ?

(இ - ள்.) அன்பொடு - அன்புடன், அருள் - கிருபையை, உடையரேனும் - உடையவராயினும், உயிர்நிலை - (தம்) உடம்பில், என்பு இயக்கங்கண்டும் - எலும்பு தோன்றுவதைப்பார்

த்தும், புறந்தரார் - (அதை) காவார், (ஏனெனில்) போதத்தால் - ஞானமாகிய (மேற்பரப்பால்), வேய்ந்த - (கூரை) போட்டிருக்கிற, புக்கில் - (மோட்சமாகிய) வீட்டில், குடிபுகுதுவார் - குடிபோகக் கருதுவர், புல் புலால் - இழிவாகியதசைகளால் (வேய்ந்த), பொய்க்குடில் - (உடம்பாகிய) நிலையில்லாக்குடிசையை, ஓம்புவரோ - காப்பாரோ? தாம் - அசை.

மோட்சத்திற் செல்ல விரும்புவோர் அன்பும் அருளும் பிறவுயிர்களிடத்தே யல்லாமல் தம்முடலினிடத்து வைத்துக் காக்கமாட்டார் என்பது கருத்து.

இயக்கம்—தொழிற்பெயர். இயங்கு - பகுதி, அம் - விகுதி. மென்றொடர் வன்றொடராயிற்று. வலித்தலென்னவுமாம்.

புறந்தரார் — புறந்தா, நோக்குறு என்பதைப்போல் தொடர்மொழியான பகுதி. புறம்=இடம். மற்றவை த[illegible] என்பதற்கு விரிப்பதுபோல் விரித்துக்கொள்க. பொய்க்குடில்—பண்புத்தொகை. புகுதுவார்—து-சாரியை. புக்கு இல்—புகுதற்கிடம். மோக்ஷத்திற்கு ஒருகாரணப்பெயர். புக்கு—தொழிற்பெயர். (அஎ)

சிற்றின்பஞ் சின்னீர தாயினு மஃதுற்றார்
மற்றின்பம் யாவையுங் கைவிடுப - முற்றுந்தாம்
பேரின்ப மாக்கட லாடுவார் வீழ்பவோ
பாரின்பப் பாழ்ங்குழி யில்.

88. Small as is sensual pleasure, its votaries renounce all other enjoyments: shall they who bathe in the great sea of heavenly delight sink in the mire of earthly indulgence?

(இ-ள்.) சிறு இன்பம்-காம இன்பமானது, சில் நீரது ஆயினும் - அற்பத்தன்மையை யுடையதாயினும், அஃது உற்றார்- அதை யடைந்தவர்கள், மற்றின்பம் யாவையும் - மற்றையின்பங்களெல்லாவற்றையும், கைவிடுப - கைவிடுவார்கள்; பேரின்பமாக்கடல் - மோக்ஷத்துக்குரிய இன்பமாகிய பெரியகடலில், முற்றும் - முழுவதும், ஆடுவார் - ஸ்நானஞ்செய்கிறவர்கள்,

பாரின்பம் - இவ்வுலகத் தின்பமாகிய, பாழ்கும்பியில் - பாழ் நரகத்தில், வீழ்பவோ - வீழ்வார்களோ?

பேரின்பத்தை விரும்புவோர் சிற்றின்பமாகிய உலகவின்ப த்தை விரும்பார் என்பது கருத்து. தாம் - அசை.

உற்றார் — வினையாலணையும்பெயர். உறு - பகுதி. றகரமிர ட்டிக் காலங்காட்டியது. கைவிடப—கைவிடு என்பதைப் பகு தியாக்கொள்க. பார் இன்பம் - பூமிக்கு உரிய இன்பம். பாழ் கும்பி (மெய் - புணர் - கூ - உக) விதியால் பாழ்ங்கும்பி யென நகரந் தோன்றிற்று. பாரின்பப்பாழ்க்கும்பி — இருபெ யரொட்டுப் பண்புத்தொகை. சின்னீரது—சில்நீர் என்பது பண்புத்தொகையா யியைந்ததன்மேல், அதனையுடையதென் னும் பொருளில் துவ்விகுதியும் அகரச்சாரியையும் வந்து பிற ந்தது. கடவுளைத் தியானித்தல், அவர் சரிதங்கேட்டல், அவர் திருநாமம்பாடல், அத்தன்மையரோடு கூடல் ஆகிய இவை யெல்லாங் கருதி "மற்றின்பம்யாவையும்" என்றது. (அஅ)

எவ்வினைய ரேனு மிணைவிழைச்சொன் றில்லெனின்
தெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம் - அவ்வினை
காத்த லிலரே லெனைத்துணைய ராயினுந்
தூர்த்தருந் தூர்ப்பா ரலர்.

89. Whatever be the conduct of those, who profess, to have renounced the world, if they be only chaste, even their enemies will raise to them their hands in adoration. If, however distinguished in other respects, they guard not this virtue, even the profligate will not pass them over uncensured.

(இ-ள்.) எவ்வினையரேனும் - (துறவு பூண்டோர்) எவ்வகை ப்பட்ட தீத்தொழிலை யுடையராயினும், இணை - துணையாகிய பெண்ணினது, விழைச்சு - புணர்ச்சியென்பதாகிய, ஒன்று - ஒருகுற்றம், இல்லெனின் - இல்லாவிடின், தெவ்வும் - பகை வனும், திசைநோக்கி - அவரிருக்குந் திக்குநோக்கி, கைதொ ழூஉம் - கைகூப்பித் தொழுவான்; அவ்வினை - அத்தீத்தொ ழிலை, காத்தல் இலரேல் - அகற்றிப்பாதுகாக்குந் தன்மையில்

லாதவராயின், எனைத்துணையர் ஆயினும் - எவ்வளவு சிறந்தோ ராயினும், தூர்த்தரும் - காமுகரும், அலர்தூர்ப்பார் - (அவர் மேல்) பழிச்சொற்களை நிரப்புவார்கள்.

துறவிகள் காமவொழுக்கமில்லாராகுல் யாவராலும் புகழப் படுவார்; அதை யுடையாராகுல் இழிசனர்களாலும் இகழப்படு வார் என்பது கருத்து.

இணைவிழைச்சு — செயப்படுபொருளில் வந்த ஆரும்வேற்று மைத்தொகை; இணையினது விழைச்சு எனவிரியும். இணை - இணைகின்றவள், சேருகின்றவள், பெண் என்பது கருத்து; ஆகுபெயர், கர்த்தாப்பொருள் விகுதி புணர்ந்துகெட்டதென் னவுமாம். விழைச்சு - புணர்ச்சி. இணைகின்ற விழைச்சு என வினைத்தொகையாகக் கொள்வாருமுண்டு. விழைச்சு — விழை யென்னும் பகுதியிற் பிறந்ததாயினும் ஒருவகை விகுதிசேரப் பொருளும் வேருயிற்று. அல்லது விழைதல் - ஆசைப்படு தல், அதன் செயப்படு பொருளுக்கு ஆகியது என்னலாம். உலகத்தில் முக்கியமாய் விரும்பப்படுவது புணர்ச்சியே யாக லின், இணையைவிரும்புதல் எனப்பொருள்கொள்வது நலம். தெவ்வு — [மெய் - கு - நுடு] ஞல் உகரச்சாரியை பெற்றது. பகையின்பெயர் அதையுடையவர்க்கு ஆயிற்று. தூர்த்தர் — வடசொல்; அவர் நாற்புறமும் பரவுவதாதலின், பழிக்குப் பெயராயிற்று. வினைமுதற்பொருள் விகுதி புணர்ந்துகெட்டது. உம்மைகள் சிறப்புப்பொருளில்வந்தன. (அகூ)

பரபரப்பி ஞேடே பலபல செய்தாங்
கிரவுபகல் பாழுக் கிறைப்ப - ஒருவாற்ருல்
நல்லாற்றி ஞாக்கிற் பதறிக் குலேகுலேப
எவ்வாற்ரு ஞய்வா ரிவர்.

90. There are some, who doing various things with bustling haste will spend day and night in vain; but if by any means, one turn them into the good way, they will be startled with alarm. How shall such prosper?

(இ - ள்.) பலபல - (பலர் அவமாகிய) பற்பலகாரியங்களை, பரபரப்பினோடே - சோம்புத லில்லாமையோடு, செய்து—, இரவுபகல் - இரவையும் பகலையும், பாழுக்கு - பயனில்லாத காரியத்துக்கு, இறைப்ப - செலுத்துவார்கள்; ஒருவாற்றால் - (பெரியோர்) ஒருவகையால், நல் ஆற்றில் - நல்லொழுக்கத்தில், நூக்கில் - செலுத்தினால், பதறி - (தீயில் வீழ்ந்தாற்போல்) துடித்து, குலைகுலைப - நடுநடுங்குவார்கள்; (ஆதலால்) இவர் இவ்வறிவிலார், எவ்வாற்றான் - எவ்வகையால், உய்வார் - (பிறவித்துன்பத்தி னின்றும்) பிழைப்பார்.

அறிவில்லார் கடைத்தேறும் நெறியாகிய தெய்வவழிபாடு முதலிய செய்ய மனமில்லாதவராய் உலககாரியத்திலேயே ஆயுளை வீணாக்கழிப்பர் என்பது கருத்து.

பரபரப்பு — பரபர என்கிற அனுகரண இரட்டைக்கிளவியே பகுதியாநின்று பு - என்னும் தொழிற்பெயர் விகுதிபெற்றது. குலைகுலைப என்பது குலையென்று முதனிலை மிகுதிப்பொருள் பற்றி அடுக்கிநின்றது. பாழுக்கு இறைப்ப என்னும் உபமானவாக்கியம் உபயோகமில்லாத காரியங்களிற் கழிக்கிறார்கள் என்கிற உவமேயப்பொருளைத் தந்ததனால், லலிதம் என்னு மலங்காரம். குவ்வுருபு பொருட்டுப் பொருளில் வந்தது. (கூ0)

இளைய முதுதவ மாற்றுது நோற்றென்
றுளைவின்று கண்பாடு மூழே - விளிவின்று
வாழ்நாள் வரம்புடைமை காண்பரேற் காண்பாருந்
தாழாமே நோற்பார் தவம்.

91. To sleep away our days in careless indolence saying, "we are young, and may perform the duties of devotion in old age." might be right, if we could see the limit of our lives: but those, who could do so would not relax in the performance of religious duties.

(இ - ள்.) விளிவு இன்று - இறத்தலில்லாமல், வாழ்நாள் - ஆயுள், வரம்பு உடைமை - எல்லையையுடைத்தாயிருத்தலை, காண்பரேல் - அறியவல்லாராயின், இளையம் - (யாமிப்போது)

இளைமைப்பருவத்தை யுடையேம், முது - முதுமைப்பருவத்தில், நோற்று - பசிமுதலியவற்றைப்பொறுத்து, தவம் ஆற்றுதும் என்று - தவஞ்செய்வோமென்று, உளைவு இன்று - அச்சமில்லாமல், கண்பாடும் - உறங்கிக்கிடப்பதும், ஊழே - முறையேயாம் ; காண்பாரும் - (வாழ்நாள் வரம்புடைமையை) காணவல்லமுனிவரும், தாழாமே - தாமதியாமல், தவம் நோற்பார் - தவஞ் செய்வார்கள்.

தங்களாயுளின் எல்லையறிந்த முனிவர்களும் தவத்தைச்செய்துகொண்டிருக்க அஃது அறியாதமூடர் தேகத்தை நிலையாக மதித்து மூப்பில் தவஞ்செய்வோமென் றெண்ணுவது முறைமையன்று என்பது கருத்து.

இளையம்—தன்மைப்பன்மைக் குறிப்பு முற்று. இளை - பகுதி அம் - விகுதி, இப்பகுதி பண்பிச்சொல். இளமையில் மை - கெட்டு, "இனையவும்பண்பிற்கியல்பே" என்றமையால் ஆகாரம் ஐகாரமான தென்னலாம். இளை என்னு முதனிலையன்று முது — முதுமையில் ஈறுதொக்க பண்புப்பெயர். ஏழாம் வேற்றுமைத்தொகை, ஆற்றுதும்—தனித்ததன்மைப் பன்மை முற்று, தும் - விகுதி, எதிர்காலமுங் காட்டும். நோற்று—நோல் - பகுதி, ற் - இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி, பகுதி லகரம் றகரமானது சந்தி. நோன் என்பதன் மேற் பிறந்தது என்றுஞ் சொல்லலாம். உளைவு — தொழிற்பெயர், இங்கு அச்சத்திற்கு ஆயிற்று. கண்பாடு—இது முதனிலைத்தொழிற்பெயர். கண் படு என இரண்டு மொட்டி வந்த பகுதி. படுதல்—அத்தமித்தல், முதனீண்டது. உம்—இழிவு சிறப்பு. வாழ்நாள் வரம்புடைமை—எழுவாய்த்தொடர், வாழ்நாள் வினைமுதல் உடைமை என்பதோடு சேருகின்றது. வரம்பு செயப்படுபொருள். தாழாவே — எதிர்மறை வினையெச்சம். இன்று—இன்றி என்னுங் குறிப்புப் பெயரெச்சத்தின் திரிபு. தவர் நோற்பார் இங்கு நோற்பார் என்பது செய்வார் என்னும் பொருளைத்தரும். அடி அடித்தல் போர் பொருதல் முதலிய இடங்களிலு மிப்பகுதியேகொள்க. "விசே-

ஷணத்தோடுகூடிய பொருளையுணர்த்துஞ் சொற்கள், விசேஷணத்தை யுணர்த்துஞ்சொல் வருமிடத்தில் விசேஷியத்தையே உணர்த்தும்" என்பது வடநூலார் கூறுவதோர் நியாயம். (௯௧)

நல்லவை செய்யத் தொடங்கினு நோனுமே
அல்லன வல்லவற்றிற் கொண்டுய்க்கும் - எல்லி
வியனெறிச் செல்வாரை யாறலைத் துண்பார்
செலவு பிழைத்துய்ப்ப போல்.

92. Though a man begin to do good, his evil destiny, without suffering it, will turn him into evil just as those who live by plunder on the highway, lead astray the traveller in the dark.

(இ-ள்.) எல்லி - இரவில், வியன் நெறி - பெரியவழியில், செல்வாரை - போகின்றவர்களை, ஆறு அலைத்து உண்பார் - வழிபறித் துண்ணுங்கள்ளர், செலவு - (பெருநெறியில்) செல்லுதலை, பிழைத்து - தப்புவித்து, உய்ப்பபோல் - (இடுக்கு வழியில்) செலுத்துவதுபோல், நல்லவை - நற்காரியங்களை, செய்யத்தொடங்கினும் - செய்ய ஆரம்பித்தாலும், நோனுமே - பொறுமல், அல்லன - தீயவூழ்கள், அல்லவற்றில் - தீக்கருமங்களில், கொண்டு - கொண்டுபோய், உய்க்கும் - செலுத்தும்.

நற்கருமஞ்செய்யப் புகுந்தோர் அதினின்றும் தவறுதற்கு அவரது முன்னைவினையே காரணமாம் என்பது கருத்து.

உம்—உயர்வுசிறப்பு. நோனுமே — எதிர்மறைவினையெச்சம்; நோன் - பகுதி, நோல் என்கிற பகுதிமேல் நோலாமே என வரும். உய்க்கும்—உய் - பகுதி, இது பிழைப்பு என்னும் பொருளில் வரும்போது உய்யும், உய்ந்தது, உய்வான் எனவும், செலுத்தற்பொருளில் வரும்போது உய்க்கும், உய்த்தது, உய்ப்பான் எனவும் வரும். இங்ஙனமே பகுதி ஒன்றாயிருந்தும் பொருள் வேறுபட்டால் புடைபெயர்ச்சி வேறுபாடுடையது முண்டு, செலவு—தொழிற்பெயர், செல் - பகுதி,

அ - சாரியை, உ - விகுதி. பிழைத்து — பிழைப்பித்து என்கிற பிறவினை, பி - விகுதிதொகுத்தல். (கூஉ)

நெஞ்சு புறம்பாத் துறந்தார் தவப்போர்வை
கஞ்சுக மன்று பிறிதொன்றே - கஞ்சுகம்
எப்புலமுங் காவாமே மெய்ப்புலங் காக்குமற்
றிப்புலமுங் காவா திது.

93. The cloak of devotion worn by those, who have renounced the world externally, is somewhat different from a garment: for a garment though it guards not the other organs of sense, yet guards the body—the other guards not even this.

(இ-ள்.) நெஞ்சு - (தம்) உள்ளம், புறம்பு ஆ - வெளிப்பட்டதாயிருக்க, துறந்தார் - துறந்தவர்களுடைய, தவப்போர்வை, தவவேடமாகிய போர்வை, கஞ்சுகம் அன்று - சட்டையுமன்று, பிறிதொன்றே - வேறொன்றே; (ஏனெனில்) கஞ்சுகம், சட்டையானது, எப்புலமும் - புலன்களெல்லாவற்றையும், காவாமே - பாதுகாவாமல், மெய் - உடம்பாகிய, புலம் - இடத்தை, காக்கும் - பாதுகாக்கும், இது - இத்தவப்போர்வை, இப்புலமும் - இம்மெய்யாகிய புலத்தையும், காவாது - பாதுகாவாது.

அகத்தே துறவாமல் காஷாயமுதலியவற்றைத் தரித்துப் புறத்தே துறத்தல்போல் நடிப்பதிற் பயனில்லை என்பது கருத்து.

போர்வை—போர்க்கக்கருவியாயுள்ளது, போர்க்கப்படுவது எனவுமாம். இருபொருளிலும் ஐ - விகுதி, வ் - சந்தி. [உயி - சூ-கஙு] ல் நெறியே என்றதனால் வந்தது. மற்று — வினைமாற்றுப்பொருளில் வந்தது என்னலாம். [இடை - சூ - கசு.] கஞ்சுகம் - வடசொல். எப்புலமும் — உம்மை முற்றுப்பொருளது. இப்புலமும் — இதில் உம்மை இழிவு சிறப்பு. இப்பாட்டு வேற்றுமையணியோடு ஏதுவணியுங் கலந்த கலவை. ()

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் - வஞ்சித்த

எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு.

94. Ye fools, who live in the practice of deceit! exult not in the thought that you have deceived all. That is true wisdom, which will tremble at the awful thought, that there is one omnipresent, who will behold all deceit.

(இ-ள்.) வஞ்சித்து - பிறரை மோசஞ்செய்து, ஒழுகும்-நடக்கின்ற, மதியிலிகாள் - அறிவில்லாதவர்களே! யாவரையும் - எல்லாரையும், வஞ்சித்தோம் என்று - வஞ்சித்தொழுகுகின்றோமென்று, மகிழன்மின் - சந்தோஷப்படாதேயுங்கள்; வஞ்சித்த - (நீங்கள்) வஞ்சனைசெய்தவைகளை, எங்கும் - எப்பொருளிடத்தும், உளன் ஒருவன் - இருக்கிறகடவுள், காணும் என்று - அறிவானென்று, அஞ்சி - பயந்து, அங்கம் குலைவது - உடல் நடுக்கங்கொள்வது, அறிவு - அறிவாம்.

நாம் வஞ்சித்துவிட்டோம் இது யாருக்கும் தெரியாதென்று சந்தோஷப்படுவது புத்தியீனம். கடவுள் எங்குமிருத்தலாலே நம்முடைய செயல்களை அவர் அறிந்து தண்டிப்பார் என்று பயந்து நடவுங்கள் என்பது கருத்து.

மதியிலிகாள்—மதியினது, இல் - இல்லாமை, அதனையுடையவன் மதியிலி. இகரவிகுதி, உடைமைப்பொருளைக் காட்ட வந்த தத்திதம். கள் - பன்மை விகுதி, இது இருதிணைப்பொதுப்பெயர். மதியானது இல்லாதவர்கள், மதியை இல்லாதவர்கள் எனவும் உரைக்கலாம். விளியில் ஈற்றயல் நீண்டது. [பெயர் - சூ - ருக.] மகிழன்மின்—எதிர்மறை யேவற்பன்மை. மகிழ் - பகுதி, அல் - எதிர்மறைவிகுதி இரண்டுஞ்சேர்ந்ததொருபகுதி, மின் - ஏவற்பன்மைவிகுதி. வஞ்சித்த—பலவின்பால் வினையாலணையும்பெயர். இதனைப்பெயரெச்சமாகக் கொண்டு எங்குமென்பதோடு கூட்டினுமமையும். அங்கங்குலைவது என்பது அச்சத்தின்குறிப்பு; உமது என வருவித்து அங்கத்தோடு சேர்த்தால் வழாநிலை. நீர் என வருவித்தால் "உயர்திணைதொடர்ந்த" என்கிறவிதியினால் வழுவமைதியாம். அறவின்காரியத்தை அறிவு என உபசரித்தது. (கச)

மறைவழிப் பட்ட பழிமொழி தெய்வம்
பறையறைந்தாங் கோடிப் பரக்கும் - கழிமுடைப்
புன்புலா னாற்றம் புறம்பொதிந்து மூடினும்
சென்றுதைக்குஞ் சேயார் முகத்து.

95. The infamy of evil done in secret will spread abroad as though God had proclaimed it by the beat of drum. Though putrid flesh be concealed and covered up, its rank stench will still escape to penetrate the senses of far distant persons.

(இ-ள்.) மறைவழிப்பட்ட பழி - மறைவிற்செய்த கெட்ட காரியங்களினது, [கெட்டகாரியங்களைக் குறித்த], மொழி - சொல், தெய்வம்-தெய்வமானது, பறையறைந்தாங்கு - பறை யறைந்தாற்போல, ஓடி - விரைவில் சென்று, பரக்கும் - எங்கும் பரவும், கழிமுடை - மிக்க துர்க்கந்தமுள்ள, புல்புலால் - ஈனமான புலாலை, பொதிந்து - ஒன்றில்போட்டு, மூடினும் - மூடிவைத்தாலும், நாற்றம் - அப்புலால்நாற்றம், புறம் - புறத்தில். சென்று - போய், சேயார் - தூரமாயிருக்கிறவர்களது, முகத்து - முகத்திலேயும், உதைக்கும் - தாக்கும்.

தீய செய்கைகளை மறைவிலேசெய்தாலும் அந்தப்பேச்சு தெய்வச்செயலால் எப்படியும் வெளிப்படும்; ஆதலால் எங்கும் தீச்செயல் செய்யவேண்டாமென்பது கருத்து.

அறைந்தாங்கு—அறைந்தாற்போல, அறைந்ததுபோல என இருவகையிலுங் கொள்ளலாம் அறைந்து — முதற்பக்ஷத்தில் செயினென் வாய்பாட்டெச்சத்தின் திரிபு. இரண்டாம்பக்ஷத்தில் அறைந்தது என்பதி னீறுதொக்கதொழிற்பெயர்.

பழி—பழிப்பு, முதனிலைத்தொழிற்பெயர்; பழிக்கப்பட்டவைகளுக்கு ஆகுபெயர். செயப்படுபொருள்விகுதி புணர்ந்து கெட்ட பெயரெனினு மொக்கும், பழிமொழி—ஆறும்வேற்றுமைத்தொகை, இரண்டனுருபும் பயனு முடன்தொக்க தொகையுமாம். ஆங்கு—உவமையிடைச்சொல். சேயார்—சேய்மையின் ஈறுகெட்டதன்மேல் ஆர், பலர்பால்விகுதி வந்தது. சேய்மையிலிருப்பவர், சேய்மையை யுடையவர் என இருவகையுமாம்.

மறை — முதனிலைத்தொழிற்பெயர், இடத்திற்கு ஆயிற்று. வழி—ஏழனுருபு. பரக்கும்—பர - பகுதி, கு - சாரியை, உம்-விகுதி, ககரம் தோன்றியதும் உகரம் கெட்டதும் சந்தி. கழி-உரிச்சொல், உம் - சிறப்பு. (கூரு)

மெலியார் விழினு மொருவாற்ற னுய்ப
வலியார்மற் றொன்றானு முய்யார் - நிலைதப
நொய்ய சழக்கென வீழாவாம் வீழினும்
உய்யுமா லுய்யா பிற.

96. The weak, through the fall will by some means survive; but the powerful survive not by any means; light things do not fall from their place precipitately but if they should fall, they would be saved; not so the others.

(இ-ள்.) மெலியார் - அற்பர், விழினும்-(தமதுநிலையில்) தவறினும், ஒரு ஆற்றன் - ஒருவகையால், உய்ப - பிழைப்பார்கள்; வலியார் - பெரியோர், (தந்நிலையில் தவறினால்) மற்றொன்றானும் - யாதொருவகையாலும், உய்யார் பிழையார்; நிலைதப - நிலைதவறினதினால், நொய்ய - அற்பமானவை, சழக்கென - விரைவாக, வீழா - விழமாட்டா; வீழினும் - வீழ்ந்தாலும், உய்யும் - பிழைத்துப்போம்; பிற - கனமானவை, (வீழின்) உய்யா - பிழைக்கமாட்டா

அற்பர் நிலைதவறினால் எப்படியாயினும் தப்புவர் (அவர்க்கு மானம் பெருமை இல்லாமையால்), மேன்மையுடையோர் தவறினால் தப்புவது அருமை; ஆதலால் அப்படிப்பட்டவர் ஜாக்கிரதையோடு நடக்கவேண்டு மென்பது கருத்து.

மெலியார், வலியார்,—இரண்டும் பண்படியாகப் பிறந்த பெயர். மெல் வல் - பண்படிப்பகுதிகள், இ - சாரியை, ஆர்-விகுதி, ய் - உடம்படுமெய், ஒன்றானும் முற்றும்மை. ஆன் - மூன்றனுருபு. வீழினும்—இழிவு சிறப்பு, எதிர்மறை எனவுங் கூடும். மற்று - ஆம் - ஆல் - அசைகள். தப—காரணப்பொருட்டாய்வந்த செயவெனெச்சம்; தபு - பகுதி, அ - விகுதி. "முற்றுமற்றொரோவழி" என்றதனால் உகரங்கெட்டது, தப்ப

என்பதில் தொகுத்தல் என்னவுமாம். நொய்ய — நொய்மை யில் மை கெடநின்ற நொய் - பகுதி, அ - பலவின்பால் விகுதி, தனிக்குறின் முன்னொற்றுகலின் யகரம் இரட்டியது. பிற — பலவின்பாற்பெயர். அகரவிகுதிவரப் பகுதியிடைச்சொல்லின் ஈறுதொக்கதெனக் கொள்ளலாம். சழக்கு — குறிப்பிடைச் சொல். (கூகூ)

இசையாத போலினு மேலையோர் செய்கை
வசையாகா மற்றையோர்க் கல்லால் - பசுவேட்டுத்
தீயோம்பி வான்வழக்கங் காண்பாரை யொப்பவோ
ஊனோம்பி யூன்றின் பவர்.

97. The conduct of the exalted is not to be reprehended like that of others, although it may not appear praiseworthy. For, are those, who after sacrificing a cow and cherishing the sacred fire, behold the ways of heaven, to be likened to those who eat flesh to pamper their bodies?

(இ-ள்.) மேலையோர் - பெரியோருடைய, செய்கை-செயல் கள், இசையாதபோலினும் - பொருந்தாதனபோற் காணப் படினும், மற்றையோர்க்கு அல்லால் - கீழோர்க்கே (அச்செ ய்கைகள் பழிப்பா) மல்லாமல், வசைஆகா - (அப்பெரியோர் க்கு) பழிப்பாகார்; பசுவேட்டு - பசுக்களால் ஓமஞ்செய்து, தீயோம்பி - அக்கினியைப்பூசித்து, வான்வழக்கம் - மழை பெய்தலை, காண்பாரை - (செய்யவல்ல) அந்தணரை, ஊன் ஓம்பி - உடலைப்பாதுகாக்க, ஊன்தின்பவர் - மாமிசந்தின்னு மிழிசனர்கள், ஒப்பவோ - ஒப்பார்களோ?

பெரியோர்செய்யுங் காரியங்களில் சில சாதாரணமாய்ப் பா ர்த்தால் தகாதனபோற் காணப்பட்டாலும் பெரும்பயனுக்கு ஏதுவாதலால் குற்றமாகா, அவற்றையே சிறியோர் செய்வா ராயின் குற்றமாம் என்பது கருத்து.

இசையாத — எதிர்மறை வினையாலணையும்பெயர், இரண் டாம் வேற்றுமைத்தொகை. மேலையோர் — மேல்-பகுதி, ஐ-சாரி யை, ஆர் - விகுதி, ஓர் ஆனது. [பொது-கு-உ.] மற்றையோர்

க்கு—ஐ சாரியைபெற்ற மற்றை பகுதி. பசு — யாகத்துக்கு உரிய ஜந்துக்களின்பெயர்; மூன்றும் வேற்றுமைத்தொகை. வேட்டு—வேட்டல் - யாகச்செய்கைக்கு ஒருபெயர். வேள் - பகுதி, ட் - இடைநிலை, உ - வினையெச்சவிகுதி, ள் ட் ஆனது சந்தி. ஒப்ப—பலர்பால் வினைமுற்று. ஊன் ஓம்பி—இது ஓம்ப என்பதின் திரிபு. (கூஎ)

எவரெவ ரெத்திறத்த ரத்திறத்த ராய்நின்
றவரவர்க் காவன கூறி - எவரெவர்க்கும் [ன்
உப்பாலாய் நிற்பமற் றெம்முடையார் தம்முடையா
னெப்பாலு நிற்ப தென.

98. Our spiritual preceptors, who adapt themselves to the disposition of each, whatever it be, and give to every one suitable counsel, will stand beyond all others, just as their Lord (the Almighty.)

(இ-ள்.) தம் உடையான் - தம்மை யாளாகவுடைய கடவுள், எப்பாலும் - எவ்விடத்திலும், நிற்பதென - (ஒட்டியும் ஒட்டாமல்) இருப்பதுபோல, - உடையார் - எம்மை யாளாகவுடைய யோகிகள், எவரெவர் - யார்யார், எத்திறத்தார் - எவ்வெப்பக்குவத்தை யுடையவரோ, அத்திறத்தர் ஆய் - அவ்வப்பக்குவத்துக் கமைந்தவர்களாய், நின்று —, அவரவர்க்கு - அவரவர்களுக்கு, ஆவன - உறுதிமொழிகளை, கூறி - உபதேசித்து, எவரெவர்க்கும் - எவ்வகைப்பட்டவர்க்கும், உப்பால்* ஆய் - புறம்பாய், நிற்ப - இருப்பர்.

கடவுள் எங்கும் தோய்ந்தும் தோயாம லிருப்பதுபோல அவனருள் வழிப்பட்ட பெரியோரும் எல்லாரோடு மருவியும் மருவாதவராகவே நிற்பர் என்பது கருத்து.

தம்முடையான் என்பதில் தம் என்பது எம்முடையாரென்பதை நோக்கிநின்றது. உப்பாலாய்—உ என்னுஞ் சுட்டு ஆ இ என்பவைகளுக்கு வேறானதை யுணர்த்துதலால் புறம் என்னும் பொருளைத் தந்தது. "ஊழையு முப்பக்கங்காண்பர்." எவரெவர் — பன்மைக்காகவந்த அடுக்கு. மற்றவையும் அப்படியே. எத்திறத்தார் என்பதற்கும் எத்தெந்தத் திறத்தர் என்பது பொ

ருள். எவரெவர்க்கும்—உம்மை முற்றும்மை. மற்று - அசை. எம், தம்—இரண்டாம் வேற்றுமைத்தொகை. (கூஅ)

மெய்யுணர்ந்தார் பொய்மேற் புலம்போக்கார் மெய்யுணர்ச்சி, கைவருதல் கண்ணுப் புலங்காப்பார் மெய்யுணர்ந்தார், காப்பே நிலையாப் பழிநாண நீள் கதவாச், சேர்ப்பார் நிறைத்தாழ் செறித்து.

99. They who know the truth, indulge not their senses in things unreal, but restrict them having in view the acquisition of true knowledge: with the guarding of the senses as the door frame, the fear of guilt as the door, they secure themselves with the bolt of equity.

(இ - ள்.) மெய்புணர்ந்தார் - உண்மை நெறியை அறிந்தவர்கள், பொய்மேல் - பொய் ஆகிய விடயங்களில், புலம் போக்கார் - ஐம்புலன்களைச் செலுத்தாமல், மெய் உணர்ச்சி - மெய்யான ஆத்துமஞானமானது, கைவருதல் - சித்திப்பதே, கண் ஆ- பிரதானமாகக்கொண்டு, புலம் காப்பார்-ஐம்புலன்களையும் காத்துக் கொள்வார்; மெய் உணர்ந்தார் - அவ்வுண்மையை யறிந்தவர்கள், காப்பே - (புலன்களை) அடக்குதலே, நிலையா - வாசற்காலாகவும், பழி நாணம்-பழிக்கு நாணுதலே, நீள் கதவா-நெடுங்கதவாகவும், நிறைத்தாழ்-நிறையாகிய தாழக்கோலை, செறித்து-கொளுவி, சேர்ப்பார் - (விடயங்களிலறிவு செல்லாமல்) அடக்குவார்கள்.

இன்னது மெய்யான வழியென்றறிந்த ஞானிகள் அவ்வழியில் ஆத்துமஞானம் சித்திக்கும் பொருட்டுப் புலன்களை அடக்கித் தியானிப்பார்கள் என்பது கருத்து.

போக்கார்—வினைமுற்று வினையெச்சமானது. கைவருதல்—கையில்வருதல், சித்திக்கு இலக்கணை; காரணவிடுகுறி; தொழிற்பெயர்: கைவா - பகுதி. காப்பு—தொழிற்பெயர். கா - பகுதி, பு - விகுதி. பழி நாணம் — நான்காம்வேற்றுமைத்தொகை. செறித்து—செறி - தன்வினை பிறவினைகளுக்குப் பொதுப் பகுதி; தன்வினையில் செறிந்து என்றுவரும். கண் என்பது உவ

மையாகு பெயராய் பிரதானமெனக் கொள்ளப்பட்டது. நிறைமனதை நிறுத்துந்தன்மை. நீள்கதவு — வினைத்தொகை, ஆத்லின் ளகரம் திரியவில்லை. (கக)

கற்றுத் துறைபோய காதலற்குக் கற்பினாள்
பெற்றுக் கொடுத்த தலைமகன்போல் - முற்றத்
துறந்தார்க்கு மெய்யுணர்விற் றோன்றுவதே யின்பம்
இறந்தவெலாந் துன்பமலா தில்.

100. As the first born son (a good work) presented by a virtuous wife, (learning) is to a husband, who has attained the shore of the sea of knowledge, so the bliss which appears in the contemplation of truth is to those who have entirely renounced the world; compared to which all that is past is but pain.

(இ-ள்.) கற்று - (நூல்களைக்) கற்று, துறைபோய - பொருட்கூறுபாடுகளை யறிந்துநின்ற, காதலற்கு - கணவனுக்கு, கற்பினாள் - கற்புடையமனைவி, பெற்றுக் கொடுத்த - ஈன்றுகொடுத்த, தலைமகன்போல் - தலைமையான குமாரன்போல, முற்ற - முழுவதும், துறந்தார்க்கு - துறந்தவர்கட்கு, மெய்யுணர்வில் மெய்ப்போதத்தில், தோன்றுவதே - வெளிப்படும் இன்பமே, இன்பம் - (சிறந்த) இன்பமாம்; இறந்த எலாம் - ஒழிந்த (உலக வின்பம்) எல்லாம், துன்பம் அலாது - துன்பமேயல்லாமல், இல் - (இன்பமாவது) இல்லை.

துறந்த யோகிகளுக்குப் பகவானை யறியுநிலையில் பிறக்கின்ற இன்பமே யின்பம், மற்றைய உலக இன்பமெல்லாம் துன்பமென்பது கருத்து.

துறை — குளமுதலியவற்றில் இறங்குமிடத்தை யுணர்த்துவது, நூற்பொருள்களின் விதங்களுக்கு உவமையாகுபெயர். இறந்த—பலவின்பால் வினையாலணையும்பெயர். போய—போகிய என்பதின் இடைக்குறை; ய் — இறந்தகால இடைநிலை என்னலுமாம். அலாது—எதிர்மறை வினையெச்சம்; ஆகாரம் சாரியை. அகரச்சாரியைபெற்று அலது என்றும் வரும்; லகரம்

தொகுத்தல். போல்—அகர ஈறுதொக்க வினையெச்சம்; தலை மகனுனவன்போலும் படி (ஒக்கும்படி); இது தோன்றுவதென் னும் வினையாலணையும் பெயரைக்கொண்டதென அறிக. (க00)

கற்றுங் கறிந்தடங்கித் தீதொரீஇ நன்றாற்றிப்
பெற்றது கொண்டு மனந்திருத்திப் - பற்றுவதே
பற்றுவதே பற்றிப் பணியறநின் றொன்றுணர்ந்து
நிற்பாரே நீணெறிச் சென்றார்.

101. They, who have studied and attained knowledge, have exercised self control, have rejected evil and embraced good, have contented their desires with what they have obtained, and thus by laying hold on their object, have superseded the necessity of works; and employed their thoughts in the contemplation of the only (one) object (the Almighty), walk in the endless path of happiness.

(இ - ள்.) கற்று - (ஞானநூல்களைக்) கற்று, அறிந்து - (அவற் றின்பொருள்களை) அறிந்து, அடங்கி - செருக்கில்லாமல் அமைந் து, தீது ஒரீஇ - தீயதொழில்களை நீக்கி, நன்று ஆற்றி - நற்கரு மங்களைச்செய்து, பெற்றதுகொண்டு-கிடைத்த ஞானத்தினால், மனம் திருத்தி - மனதைத் திருந்தச்செய்து, பற்றுவதே-மோ க்ஷமார்க்கத்தையும், பற்றுவதே - (அதற்கமைந்த) உபாயத்தை யும், பற்றி - கைக்கொண்டு, பணி அற - (தமது) முயற்சியொ ழிய, நின்று - (ஞானநிலையில்) நிலைத்து, ஒன்று உணர்ந்து - பிரமத்தை உணர்ந்து, நிற்பாரே - (நிலைபெயராது) நிற்பவரே, நீள் நெறி - முத்திநெறியில், சென்றார் - சென்றவராவார்.

ஞான நூலுணர்ந்து, அந்நூலிற் சொல்லியபடி நடந்து பிர மத்தை யுணர்ந்து, ஞானநிலையில் தவறாது நிற்பவரே முத்தி பெறுவார் என்பது கருத்து.

ஆங்கு—அசை. ஒரீஇ—ஒருவு - பகுதி, இ-விகுதி, பகுதி யீறு தொகுத்தலாய் "முற்றுமற்றொரோவழி" என்பதனால் உகரங் கெட விகுதி இகரம் அதன்மேலேறி அளபெடுத்தது, இது சொல்லிசை யளபெடை; ஒரு பகுதி என்பாரும் பகுதி உகரம்

இகரமாகி யளபெடுத்த தென்பாருமுளர். நன்று, தீது,—பண்படியாய்ப் பிறந்தபெயர்கள். முந்திய பற்றுவது—செயப்படுபொருள் செய்பொருள்போல்வந்த வினையாலணையும்பெயர். பிந்திய பற்றுவது கருவியாய் அங்ஙனம் வந்தபெயர். ஏகாரமிரண்டும் எண்ணிடைச்சொல். ஒன்று—எண்ணலளவையாகுபெயர்; எல்லாவற்றையு முட்கொண்டு ஒப்பில்லாத பொருளாகிய கடவுளுக்குவந்தது. சென்றார் என்பது தெளிவினால் வந்த காலவழுவமைதி. [பொது - ௫ - ௩௩.] கொண்டு—மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. நிற்பாரே—ஏ-பிரிநிலை யிடைச்சொல். நீணெறிச்சென்றார் என்பதை எழுவாயாக்கினால் நிற்பார், வினைமுற்றுப் பயனிலை. ஏ - தேற்றப்பொருளதாம். ()

ஐயந் திரிபின் றளந்துத் தியிற்றெளிந்து
மெய்யுணர்ச்சி கண்விழிப்பத் தூங்குவார் - தம்முளே
காண்பதே காக்ஷி கனவு நனவாகப்
பூண்பதே தீர்ந்த பொருள்.

102. Some there are that sleep, (in the eyes of world,) but are wide awake in their exertions after the knowledge of Truth, judging things according to the revealed religion, and discerning what is Truth by their own reflection. These do really "see things" in their observations; and when they dream in such a feigned sleep of theirs, they do really "find the truth."

(இ-ள்.) ஐயம் - சந்தேகமும், திரிபு - விபரீதமும், இன்று - இல்லாமல், அளந்து - (வேதாகமங்களாகிய பிரமாணங்களினால்) ஆன்மசொரூபத்தை அறிந்து, உத்தியில் தெளிந்து - கருதலளவையால் நிச்சயித்து, மெய்யுணர்ச்சி - மெய்ப்பொருளை உணர்வதற்கான தியானமானது, கண்விழிப்ப - விழித்துக் கொண்டிருக்க, தூங்குவார் - தியானநித்திரை செய்பவர்கள், தம்முளே - தம்முள்ளத்திலே, காண்பதே காட்சி - காணுவதே காட்சியாம்; கனவு - (அத்தூக்கத்தில் உண்டாகும்) கனவை, நனவாகப் பூண்பதே - சாக்கிரமாகப் பொருந்துவதே, தீர்ந்த பொருள் - முடிந்தபயனும்.

ஜீவபர சொரூபத்தையறிந்து தியானநித்திரை செய்பவர்களுக்கு உள்ளத்தில்காணும் சொரூபானந்தமே பிரத்தியக்ஷ ஞானமாம், அதில் வரும் அனுபவமெல்லாம் சித்தாந்தமான காரியமாம் என்பது கருத்து.

ஐயமாவது இதுவோ அதுவோ என்னுந் தோற்றம். திரிபாவது ஒன்று மற்றொன்றாகத் தோன்றுவது. அளந்து — பிரமாணங்களாலறிந்து என்பதற்கு வந்த ஒருசொல். இது சிரவணத்தையும், உத்தியிற் றெளிந்து என்பது மனனத்தையும், மெய்யுணர்ச்சி கண் விழிப்பத் தூங்குவார் என்பது நிதித்தியாசனத்தையும் குறிக்கின்றன. ஏகாரங்கள் பிரிநிலை. உத்தியில்—ஐந்தனுருபு ஏதுப்பொருளில்வந்தது. காட்சி — தொழிற்பெயர். காண் - பகுதி, சி - விகுதி, ணகரம் டகரமானது சந்தி. இப்பெயர் அதனாலாகிய தோற்றத்துக்கு ஆயிற்று. கனவு [உயிர் - கூ - உஉ] விதியால் கனு குறுகி உகரமேற்றது. மெய்யுணர்ச்சி கண்விழிப்பத் தூங்குவார் என்பதும் கனவு நனவாக என்பதும் விரோத அணியி னேர்வகை. தமிழர் முரண்டொடை எனக் கூறுவதற்கு மிசையும். நூலைக் கல்வியில்தொடங்கி இடையே அறம் பொருளின்பங்களையுணர்த்தி மோக்ஷத்திற்குரிய ஞானத்தில் முடித்தமையால் இது பாவிகம் என்னு மணியுமாம்.

இங்ஙனம் காட்டிய சிலசொற்களின் வழியைக்கொண்டு மற்றவைகளுக்கும் இலக்கண மமைத்துக்கொள்க. முற்றுங்காட்டுவது பயனில்லதாம்.

நீதிநெறிவிளக்கப் பதவுரை

முற்றிற்று.